

“எமர்ஜென்ஸி பற்றி ஜெ.வுக்கு என்ன தெரியும்?”

கல்கி

KALKI 19.1.97 ரூ. 3.00



ஒரு வாசகி, கதை எழுதுகிறார்...

உங்கள் வளமான எதிர்காலத்திற்கு
எங்கள் விசேஷ சேமிப்புத் திட்டம்

சில்வர் டெபாசிட் திட்டம்



இன்றே எங்களிடம் ஒரு டெபாஸிட்டைத் துவக்கி,
வளமான மகிழ்ச்சியான வருங்காலத்தை எதிர்நோக்குவீர்

EXPRESS
FINANCIAL EXCHANGE LIMITED

பாங்க் ஆப் அமெரிக்காவின் சார்பு நிறுவனம்

- வாகனங்களுக்கான கடன்கள்
- பங்குகள் மீதான கடன்கள்

அங்கீகரிக்கப்பட்ட டீலர் அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் டிராவலர்ஸ் செக்குகள்

பதிவு அலுவலகம்: நெ. 9, அட்லேஸ் டவர், தெற்கு போக் சாலை, சென்னை-600 017.
போன்: 4340325, 4340329, 4341403, ஃபாக்ஸ்: 4341518.

• சென்னை • ஹைதராபாத் • விஜயவாடா • விசாகப்பட்டினம் • பெங்களூர் • திருச்சி
• கும்பகோணம் • கோயம்புத்தூர் • பாண்டிச்சேரி

1996 மார்ச் 4ந் தேதி எகனாமிக் டைம்ஸில் வெளியான எமது சட்ட பூர்வ விளம்பரத்தைத் தொடர்ந்து இந்த விளம்பரம் வெளியாகிறது.

Helios & Matheson



செல்வா

யார் செல்வா? ஒரு டூரிஸ்ட் கைடு. அந்த ஒரு குவாலிஃபிகேஷன் போதுமா? எக்கச்சக்கமாக தேசபக்தி உள்ளவன். அதை வெளிக்காட்ட, கிளைமாக்ஸ் வரைக்கும் வாய்ப்பு இல்லாததால் ஸ்வாதி, ரீவா என்று இரண்டு ஹீரோயின்களின் கனவில் டூயட் பாடிக் கொண்டிருப்பவன். டூரிஸ்ட் கைடு என்பதால் மகாபலிபுரம், ஊட்டி என்று அவ்வப்போது அலைய வேண்டி இருக்கிறது. ஆங்காங்கே ஒரு பாட்டு, ஒரு சண்டை.

நல்லவேளையாக யாரோ இலங்கை அதிபரின் பெண், சுற்றுலாவுக்காக இங்கே வந்து, வில்லனிடம் மாட்டிக் கொண்டாரோ, பிழைத்தார்... அல்லாத பட்சத்தில் தேசப்பற்று காட்ட வேறு ஏது வாய்ப்பு?

சொல்லிவைத்தாற்போல அடுத்தடுத்து வரப்போகிற காட்சிகள் முன்கூட்டியே பாமரருக்கும் தெரிந்து விடுகிறது இப்படத்தில். அது ஒரு நல்ல என்டர்டெயின்மென்ட். நாம் நினைப்பதே உடன் வருகிறதா என்று சரிபார்த்துக் கொண்டிருந்தால் பொழுது ஓடி விடும்.

விஜய், உயிரைக் கொடுத்து நடிக்க ஆரம்பித்திருக்கிறார். ஆக்ஷனெல்லாம் பிரமாதமாக வருகிறது. குறிப்பாக அந்த கிளைமாக்ஸில் அருவி மேல், அந்தரத்தில் டூப் போடாமல் கூண்டைப் பிடித்துக் கொண்டு தொங்குகிற போதெல்லாம் வாய் பிளக்கச் செய்கிறார்.

என்ன பிரயோஜனம்? வேர்க்கடலை சைஸுக்குக் கூடக் கதை இல்லை. ஒன்றுக்கு இரண்டு ஹீரோயின் இருந்தும் கலகலப்பில்லை. முகத்தை எப்போதும் உர்ரென்று தூக்கி வைத்துக் கொண்டே வருகிறார் சுவாதி. ரீவா? இயக்குநர் இவர் முகத்தைக் காட்டவே இல்லை!

ரகுவரன் என்கிற ஒரு ஜீவன் இந்தப் படத்தில் இல்லாவிட்டால் என்ன ஆகியிருக்கும் என்று யோசிக்கவே கஷ்டமாக இருக்கிறது.

பையன் பாசத்துக்கும் தேச விரோத செயல்களுக்கும் இடையில் சிக்கித் தவிக்கும் அப்பாவாகப் படம் முழுக்க அவர் ராஜ்ஜியம் தான். அந்த இறுகின முகமும் கரகர குரலும் இணைந்து நடத்துகிற அசத்தல் உற்சவம் மட்டும்தான் ரசிக்கும்படியான ஒரே விஷயம். ஹாட்ஸ் ஆஃப்!

டைரக்டர் வெங்கடேசன், எஸ்.ஏ. சந்திரசேகரின் மாணவர் என்பது பாடல் காட்சிகளில் தெரிகிறது. சில பாடல் வரிகளிலும்.

ஆரம்பக் காட்சி ஒன்றில் ஸ்வாதியின் (நடன ஆசிரியர் என்பதால்) ஜதி சொல்லும் 'ரித'த்துக்கு ஏற்ப அந்தக் காலனியே இயங்குவதாகக் காட்டுகிற அந்த மிகச் சில நொடிகள் மட்டுமே இயக்குநருக்குள் இருக்கிற கலைஞனைக் காட்டுகிறது. மற்றபடி துண்டுத் துண்டாக நிறைய திரைமலர் பார்ப்பது போல இருக்கிறது.

- ஆர்.பி.ஆர்.

"எயிட்ஸ் வந்ததும் இறந்து விடுவார்கள்"

"விலைமாதர்களால் எய்ட்ஸ் பரவுகிறது என்று யாராவது சொன்னால் என் ரத்தம் கொதிக்கிறது. ஐ பிளேம் த மேன்" - இப்படி கோபமும் வேதனையும் பொங்கக் குமுறுபவர் - பெண்ணுரிமை இயக்கத்தவர் யாருமல்ல; டாக்டர் சுனிதி சாலமன். இந்தியாவில் முதன் முதலில் எயிட்ஸ் தாக்குதலுக்கு ஆளான பத்து பேர்களைக் கண்டுபிடித்தவர்.

"எனக்கு ஊசி போடணும்" என்ற டாக்டர் ஆசை ஆறாம் கிளாஸ் படிக்கும்போதே அரும்பி விட்டது என்கிறார் சுனிதி சாலமன்.

"அம்மை தடுப்புக்காக ஊசி போட்டுக் கொண்டபோது, இதே மாதிரி நோயைத் தடுப்பதற்காக ஊசி போடும் டாக்டராக வேண்டும் என்று நினைத்தேன்" என்ற பிள்ளைப் பருவ லட்சியத்தை சாதித்துள்ள சுனிதி, இன்று எய்ட்ஸ் தடுப்புப் பணியில் முழுமூச்சாக இறங்கியிருக்கிறார்.

மருத்துவ உலகையே நடுநடுங்கச் செய்திருக்கும் எய்ட்ஸோடு மல்லுக்கு நிற்கும் துணிச்சல் எப்படி வந்தது?

"ஆராய்ச்சி நோக்கத்தில்தான் இந்தக் களத்தில் நுழைந்தேன். அடுத்தடுத்து நான் சந்தித்த அனுபவங்களும், ஹெச்.ஐ.வி.யால் பாதிக்கப்பட்டவர்களின் சோகக் கதைகளும் தான் என்னை இந்தத் துறையில் இவ்வளவு தீவிரமாக ஈடுபட வைத்து விட்டன."

விட்ட செய்தி.

"முதலில் என்னாலும் நம்ப முடியவில்லை. நாங்கள் கலெக்ட் செய்த சாம்பிளைப் பரிசோதித்து முடிவு சொன்ன டாக்டர் ஜேகப் ஜானிடம் மறுபடியும் டெஸ்ட் செய்யும்படி கேட்டுக் கொண்டேன். அதிலும் ஹெச்.ஐ.வி. பாஸிட்டிவ் உறுதியானது. இருந்தாலும் அதே சாம்பிளை அட்லாண்டாவில் உள்ள 'கம்யூனிகபிள் டிசீஸ் சென்டரு'க்கு அனுப்பினோம். அந்த ரிசல்ட்டும் இந்தியாவில் எய்ட்ஸ் பரவி விட்டதை உறுதி செய்தது."

இந்திய மருத்துவ ஆய்வுக் கழகத்தின் உதவியுடன் 1986-ல் சென்னை பொது மருத்துவமனையில் தமிழ்நாடு எய்ட்ஸ் செல் உருவாகக் காரணமாக இருந்த சுனிதிக்கு பொலிட்டிக்கல் பிரஷரை எதிர்கொள்ளும் சவாலும் வந்தது.

எம்.பி.பி.எஸ். தேர்வில் ஒரு மாணவருக்கு 27 மார்க் அதிகமாகப் போடும்படி அப்போதைய சுகாதார அமைச்சரிடம் இருந்து ஆணை வந்ததாம். அடிபணிய மறுத்ததால் எக்மோர் சில்ட்ரன் ஹாஸ்பிடலுக்கு பந்தாடப்பட்டதாகச் சொல்லும் இவர், அங்கும் எய்ட்ஸ் செல் ஒன்றை அமைத்து விட்டார்!

இருபது வருட சர்வீஸ் முடிந்ததும் அரசாங்க உத்யோகத்தை உதறிவிட்டு, ஒய்.ஆர்.ஜி. கேர் என்ற அமைப்பை ஃபோர்டு ஃபவுண்டேஷன் நிதியுதவியுடன் 1993-ல் ஆரம்பித்த சுனிதி,

வெளிநாடுகளில் எய்ட்ஸ் பீதி பற்றிய செய்திகள் பரபரப்பாக அடிபட்ட சமயத்தில், சென்னை மருத்துவக் கல்லூரியில் மைக்ரோபயாலஜி பேராசிரியராக சுனிதி பணியாற்றி வந்தார். பலதரப்பட்ட மருத்துவ இதழ்களில் பக்கம் பக்கமாக வெளியான எய்ட்ஸ் கட்டுரைகளைப் படித்த இவருக்குள் மின்னல் வெட்டியது.

இந்தியாவுக்குள் எய்ட்ஸ் ஊடுருவியிருக்குமா என்று ஆராய்வதற்காக மருத்துவ மேற்படிப்பு மாணவி ஒருவரிடம் ஒரு புராஜக்ட் செய்யும்படி ஆலோசனை சொல்லியிருக்கிறார்.

"இந்தியாவிலாவது எய்ட்ஸ் வருவதாவது?" என்று மறுத்துப் பேசிய அந்த மாணவியிடம் கொஞ்சம் வாத்தியார் தோரணையைக் காட்டியதும் ஆய்வு ஆரம்பமானது. விசாரணைக் கால கைதிகளிடமும், விபசார விடுதியிலிருந்து மீட்கப்பட்ட பெண்களிடமும் ரத்த சாம்பிள் சேகரித்து, பரிசோதனை செய்தபோது இடியாய் இறங்கியது, இந்தியாவை எய்ட்ஸ் தாக்கி

எய்ட்ஸ் பிடியில் சிக்கித் தவிப்போரின் புனர்வாழ்வுப் பணியிலும் எய்ட்ஸ் விழிப்புணர்வுப் பிரசாரத்திலும் பம்பரமாய் சுழன்று வருகிறார்.

ஹெச்.ஐ.வி. பாஸிட்டிவ் என்று தெரிந்தால் பிரபல பெரிய மருத்துவமனைகள் சிகிச்சையளிக்க மறுத்து அவர்களை வெளியேற்றுவது, எய்ட்ஸ் அறிகுறி தென்பட்டாலே அந்த நபர் உடனே செத்துப் போய் விடுவார் என்ற பீதி பரவியிருப்பது, பாதிக்கப்பட்டவர்களை சமுதாயம் புறக்கணித்து ஒதுக்கி வைப்பது பற்றியெல்லாம் கவலையோடு பேசும் சுனிதி சாலமன், இந்தப் பரிதாப நிலையை மாற்றியமைக்கும் திட்டங்களிலும் தீவிரமாக செயல்பட்டு வருகிறார்.

தமிழகத்தின் மூலை முடுக்கெல்லாம் சென்று, சமூக நலனில் அக்கறையுள்ள குழுவினரை ஒன்று திரட்டி எய்ட்ஸ் விழிப்புணர்வு பற்றி விலாவாரியாக விளக்கி வருகிறது. ஒய்.ஆர்.ஜி. கேர். கல்லூரி மாணவர்களும்,

என்று யார் சொன்னது?"

பட்டதாரிகளும் கொண்ட இளைஞர் படை ஒன்று சுனிதியின் திட்டங்களை சுறுசுறுப்பாக செயல்படுத்தி வருகிறது.

"சுமார் 200 பேர் இருக்கும் கூட்டத்தில் நான் பேசி முடித்ததும் என்னிடம் கவுன்ஸிலிங் கேட்க 5 பேர் வருகிறார்கள். சாட்டிலைட் சேனல்களும், சினிமாவும், பத்திரிகைகளும் தாராளமாய்க் காட்டும் விரசமான காட்சிகளால் விடலைப் பருவத்தினர் திசைமாறிப் போகிறார்கள்.

"நான் ரொம்பக் கட்டுப்பாடான சூழ்நிலையில் வளர்ந்தவள். கணவன் தவிர இன்னொரு ஆணுடனோ, மனைவி தவிர இன்னொரு பெண்ணுடனோ உறவு கொள்வதெல்லாம் என்னால் கற்பனை செய்து கூடப் பார்க்க முடியாமல் இருந்தது.

"ஹோமோ செக்சுவல் பழக்கமெல்லாம் இந்தியாவில் இருக்கவே முடியாது என்று மெடிக்கல் காலேஜ் முடித்து டாக்டர் ஆன பிறகு கூட நினைத்திருந்தேன். ஆனால் எய்ட்ஸ் ஆராய்ச்சியில் இறங்கிய பிறகு நான் சந்தித்த மனிதர்களின் அனுபவங்கள் நாம் எங்கே நிற்கிறோம் என்பதை வெட்ட வெளிச்சமாக்கி விட்டது.

"எது சரி... எது தப்பு என்று இப்போது உபதேசிப்பதை விட, யாராக இருந்தாலும் ஹெச்.ஐ.வி. தொற்றிவிட்டால் நம்பிக்கையுடன் அவரை வாழவைக்க வேண்டும் என்பதுதான் எனது லட்சியம்."

எய்ட்ஸ் தடுப்புத் திட்டங்களில் நாட்டிலேயே முன்மாதிரியாகத் தமிழகம் செயல்படுகிறது என்று பெருமைப்படும் சுனிதிக்கு, பாதிக்கப்பட்டவர்களைப் பராமரித்து சிகிச்சையளிக்கும் திட்டங்களுக்கு நிதி ஒதுக்காமல் அரசு பாராமுகமாக இருப்பது பற்றிப் பெரும் ஆதங்கம். தேசிய அளவில் இதற்கான கொள்கையை உடனடியாக உருவாக்க வேண்டும் என்று குரல் கொடுக்கிறார்.

ஹெச்.ஐ.வி. வலையில் சிக்கிக் கொண்டவர்களுக்கு வேலை கிடைக்க ஏற்பாடு செய்வது, பாதுகாப்பு ஆலோசனையுடன் அவர்களுக்குள் திருமணம் நடக்க உதவுவது, பரிவோடு ஆறுதலும், ஆலோசனையும் சொல்லி புது நம்பிக்கையுடன் வாழ்க்கையைத் தொடர வழிகாட்டுவது என பேச்சோடு நின்று விடாமல் செயலிலும் சாதித்து வரும் இந்த டாக்டர், ஏழைகளுக்கு இலவசமாக ஆலோசனை வழங்கி சிகிச்சையளிக்கவும் தயார் என்கிறார்.



• சுனிதி சாலமன்

சமீபத்தில், தரமணி வாலண்டரி ஹெல்த் சர்வீசஸ் மருத்துவமனையில் இவரது முயற்சியால் இலவச சிகிச்சைக்காகப் படுக்கைகளுடன் ஒரு வார்டு உருவாகியிருக்கிறது.

அடுத்தடுத்து மறுவாழ்வுத் திட்டங்களில் முனைப்புடன் ஈடுபட்டு வரும் இவரையும் ஆரம்பத்தில் சக மருத்துவர்களின் கிண்டலும், கேலியும் விட்டு வைக்கவில்லை.

"இவளுக்கு வேற வேலை இல்லை... எல்லாம் பப்ளிஸிட்டி ஸ்டண்ட்..." என்று பலரும் பலவிதமாக விமர்சித்தார்கள். நான் எம்.டி. படிக்கும்போது எனக்கு புரஃபசராக இருந்தவர், 'எதுக்கு இந்த வேண்டாத வேலை... ஒரு லேப் வைத்தால் மாசம் ஒரு லட்சம் சம்பாதிக்கலாம்!' என்று உபதேசித்தார். ஆனால், அவர் மருமகள் மூலம் மகன், பேரன் என அந்தக் குடும்பமே எய்ட்ஸ் புயலில் சிக்கியதும், 'எவ்வளவு பணம் வேண்டுமானாலும் தருகிறேன்; இந்த வேலையை வேகமாக நடத்தும்மா' என்று கெஞ்சினார்! அந்தக் குடும்பமே இன்று சின்னாபின்னமாக சிதறிப் போய் விட்டது! வேதனையாக இருக்கிறது. இந்த மாதிரி சோகங்களும் என்னைக் கேலி செய்தவர்களின் பேச்சுக்களும்தான் மேலும், மேலும் இந்தத் துறையில் சாதிக்க வேண்டும் என்ற வெறியை ஏற்படுத்தியது."

'எய்ட்ஸ் ஒரு ஆட்கொல்லி நோய்' என்று தப்பும் தவறுமாகப் பிரசாரம் நடப்பதை கடுமையாகக் கண்டிக்கும் சுனிதி, இதனால் தேவையற்ற பீதி பரவுகிறது என்று கவலைப்படுகிறார்.

"எயிட்ஸ் வந்தவுடன் இறந்து விடுவார்கள் என்று யார் சொன்னது? ஹெச்.ஐ.வி. தொற்றிய பிறகு பத்து, பன்னிரண்டு வருஷங்கள் வரையில் இன்னும் உயிர் வாழ்கிறார்கள். எப்படியாவது மருந்து கண்டுபிடிக்கப்பட்டு விட்டால் இவர்கள் உயிருக்கு ஆபத்து வராது. அவர்களை ஒதுக்கி வைத்து, புண்படுத்தி ஏன் சித்திரவதை செய்ய வேண்டும்?" என்று கேட்கிறார்.

- ஆதித் கம்யூனிகேஷன்ஸ்

காலேஜ் ஸ்டார்:



"ஃபேஷன் பிடிக்கும்; ஸ்டைல் பிடிக்கும்!"



"எங்கள் கல்லூரியின் ஹீரோயின் இவள்தான்!" என்று சென்னை மீனாட்சி கல்லூரி மாணவிகள் ஒட்டுமொத்தமாகக் கைகாட்டுவது அனுராதாவை நோக்கித்தான்.

அனுராதா இப்போது பி.எஸ்ஸி இறுதி ஆண்டு, கணிதம்.

கல்லூரி வளாகத்தில் எங்காவது கலகலவென்று ஒரு தோழியர்கூட்டம் இருந்தால் அங்கே பிரதானமாக அனுராதா இருப்பார். க்ரியேட்டிவாக சிலபேர் சிந்தித்துக் கொண்டிருந்தால் அந்தச் சிலரில் அனுவும் ஒருவராக இருப்பதைக் காணலாம்.

கர்நாடக இசையில் வாய்ப்பாட்டு, வயலினில் அனு தேர்ந்தவர். வானொலிக் கலைஞர் பார்வதி ராமனிடம் பாட்டும், லால்குடியின் சீடர் விட்டல் ராமமூர்த்தியிடம் வயலினும் கற்றவர்.

இன்ட்டர் காலேஜியேட் போட்டிகள் எதுவானாலும் அங்கே அனு ஆஜர். பாட்டு, நடிப்பு, நடனம்- ரொம்ப ஆர்வமாகக் கலந்து கொள்வது - க்விஸ் போட்டிகளில். அநேகமாக பரிசு வாங்காமல் திரும்புவதில்லை.

தோழிகளைச் சேர்த்து, அப்போது எம்.பி. சீனிவாசன் செய்ததைப்போல குழுப்பாடல்களை புதுமையாக இவரே அமைத்து, பயிற்சி தருவதுண்டு.

அனைத்துக் கல்லூரிப் போட்டிகளில் ஒருமுறை கணிதத்தை மையமாக வைத்து புதுமையான நிகழ்ச்சிகள் என்று போட்டி நடத்தது.

குணா படத்தில் கமல் பாடும் 'கண்மணி' பாடலை எடுத்துக் கொண்டார் அனு. அதில் வரும் வசனம், பாடல் வரிகளில் மிகப் பொருத்தமாக 'பிதாகரஸ் தீரம்' விளக்கத்தை வார்த்தைகளாக அமைத்தார். அதுவரை யாரும் செய்யாத முயற்சியாக அது அமைந்தது! முதல் பரிசு.

அதேபோல திடீரென்று கணிதப் பாடங்களை தோழிகளுடன் சேர்ந்து குட்டி நாடகமாகப் போட்டு அசத்துவார்.

ஹிந்தி, தமிழ், ஆங்கிலம், சமஸ்கிருதம், பிரெஞ்ச் தெரியும்.

"பி.எஸ்ஸியில் சமஸ்கிருதம் படித்தேன். அதுவரை எதுவும் தெரியாது. கஷ்டப்பட்டாலும் பரவாயில்லை என்று வேண்டுமென்றே சமஸ்கிருதம் எடுத்தேன்."

'**க**ரோக்கி' தெரியுமில்லையா? பிரத்யேக மியூஸிக் சிஸ்டத்தில் இந்த வசதி இப்போது கிடைக்கிறது. ஒரு பாடலைப் போட்டு விட்டு அதில் பின்னணி இசை மட்டும் வரவும், பாடகரின் குரலை மௌனமாக்கிவிட்டு அந்த இடத்தில் நம் குரலில் பாடலாம். அதாவது ஒரிஜினல் பின்னணி இசையுடன் பாடல் மட்டும் நம் குரலில். இந்த 'கரோக்கி' போட்டியில்கூட ஒருமுறை அனு பரிசு பெற்றுள்ளார். பாடிய பாடல்: நாடோடித் தென்றலில் வரும் ஆங்கிலப் பாட்டு. அதே போல, ஒரு வார்த்தையை மௌன மொழியில் விளக்குவதிலும் அனு எக்ஸ்பர்ட். அனுராதாவின் ரசனை, சிந்தனை எல்லாம் வித்தியாசம்.

"எம்.சி.ஏ. படிக்கப் போகிறேன். வேலைக்குப் போனதும் மனநலம் குன்றிய குழந்தைகளுக்காகத் தீவிரமாக என் ஓய்வு நேரத்தைச் செலவிடுவேன்."

"முழுக்க முழுக்க காதல் கல்யாணத்தில் நாட்டம் இல்லை. ஆனால் வருங்கால கணவரை ஓ.கே. செய்வதில் இறுதி முடிவு என்னுடையதாகத்தான் இருக்கும்."

'டேட்டிங்' பற்றி என் கருத்து. 'கூடாது'

"ப்ரணாய் ராயின் தீவிர ரசிகை நான். அவரை ஒருமுறையாவது பார்த்துப் பேச ஏங்குகிறேன். டி.என்.சேஷன் எனக்குப் பிடித்த பிரமுகர். விளையாட்டில் போரிஸ்பெக்கரின் விசிறி. ஸ்டெபிகிராப், செலஸ், இரண்டு பேரையும் சமமாகப் பிடிக்கும்.

இவ்வளவு வேலைகளுக்கிடையே 'டு ரீச் யூ (TRY) என்ற அமைப்பில் தன்னார்வத் தொண்டராகவும் பணிபுரிகிறார். பெரிய விழாக்களை 'ஆர்கனைஸ்' செய்வதில் அலாதி விருப்பம்.

பல தரப்பட்ட திறமைகள் + இனிய பண்பு + நிறைய தோழிகள் + அடக்கம் + தன் கல்லூரி முதல்வரின் மீது மரியாதை= அனுராதா

சந்திப்பு: **ராணிமைந்தன்,**


படங்கள் : **யோகா**

எய்ட்ஸுக்கு மருந்து - ஒரு முயற்சி!

புதிதாகத் தடுப்பு மருந்துகள் கண்டுபிடிக்கும்போது முதன் முதலாக அதனை முயல், எலி, தவளை போன்ற விலங்குகளுக்கே செலுத்தி சோதனை செய்து பார்ப்பர். எய்ட்ஸ் நோயின் கடுமையான சவாலால் கியூபா நாட்டின் எய்ட்ஸ் நோய்த் தடுப்பு ஆராய்ச்சி நிலையத்தைச் சார்ந்த விஞ்ஞானிகள் மனிதர்களையே இச்சோதனைக்காகத் தெரிவு செய்துள்ளனர். சோதனைக் காகத் தங்கள் உடலைப் பயன்படுத்திக் கொள்ள அனுமதித்தவர்கள் 24 இளம் விஞ்ஞானிகள். இவர்கள் மீது எய்ட்ஸ் தடுப்பு ஊசியைச் செலுத்தி கியூபா விஞ்ஞானிகள் ஆராய்கின்றனர். இத்தகைய முயற்சி இதுவே முதல் முறையாகும். இதற்கு முன்பும் இதே போல் மூளைக்காய்ச்சல் நோய்த் தடுப்பு மருந்தைக் கண்டுபிடிக்க மனிதர்களைப் பயன்படுத்தி வெற்றி கண்டுள்ளனர் கியூபா விஞ்ஞானிகள். இம்முறையும் அவர்கள் முயற்சி வெற்றி பெறட்டும்!

தகவல் : பூங்கோதை கிருஷ்ணராஜ்

மூழ்காத ஷிப்:



• கவி சிவம்

"பனை

"வறுமையால் வாடும் புலவன் ஒருவன் ஓர் அரசனைப் பாடி பரிசு பெறுகிறான். திரும்புவதற்கு முன் அரண்மனை முழுவதையும் சுற்றிப் பார்க்க அவனுக்கு ஆசை.

"என் நண்பன் என்று சொல். அரண்மனை முழுவதிலும் உள்ள காவலாளிகள் உன்னை உள்ளே அனுமதிப்பார்கள்" என்கிறான் அரசன். அப்படியே சுற்றிப் பார்த்த புலவன், களைப்பு மேலிட, அரசனின் பஞ்சணையில் படுத்துத் தன்னையறியாமல் உறங்கி விடுகிறான். இருள் கவிகிறது. அறைக்குள் வந்த ராணி, அரசன்தான் தூங்குவதாக எண்ணி, பஞ்சணையின் மறுபக்கத்தில் படுத்து உறங்கி விடுகிறாள். பிறகு நுழைந்த அரசன், தான் கீழே படுத்துத் தூங்குகிறான். மறுநாள் காலை உண்மை உணர்ந்து பதறிய புலவனிடம், "நண்பன் என்று கூறிய பிறகு தவறான கண்ணோட்டத்திற்கு இடம் ஏது?" என்று சமாதானப்படுத்துகிறான் அரசன்.

காலச் சுழற்சியில் அரசன் இறந்துவிட, "தன் படுக்கையை எனக்களித்தவன் இவன். இவனது ஈமப்படுக்கையில் நானும் கூடப் படுப்பதே நல்லது" என்று கதறுகிறான்.

"சங்க காலப் பாடலில் கூறப்படுகிறது இந்த சம்பவம். இந்த அளவு எமோஷனலாக இல்லையென்றாலும், பள்ளி நாட்களில் இருந்து இன்று வரை ஸ்ருதி சுத்தமாக, எந்த எதிர்பார்ப்பும் இல்லாமல் சீராகத் தொடர்ந்து வருகிறது எனக்கும் ரவிக்கும் உள்ள நட்பு.

"சாந்தோம் உயர்நிலைப் பள்ளியில் நாங்கள் இருவரும் பத்தாம் வகுப்பு படித்துக் கொண்டிருந்த சமயம். நான் தமிழ் மீடியம். அவன் ஆங்கில மீடியம். என்றாலும் இருவரும் தமிழ்க் கவிதை, இலக்கியம் இவற்றிலெல்லாம் ஒத்த கருத்துகள் கொண்டிருந்தோம். நாங்கள் இருவருமே பேச்சுப் போட்டிகளில் பல பரிசுகள் வாங்கியவர்கள். ஒருமுறை ஐ.நா. தினத்துக்காக மாநில அரசு ஒரு பேச்சுப் போட்டியை ஏற்பாடு செய்தது. ஏற்கனவே பல பரிசுகள் பெற்றதாலோ என்னவோ, சக மாணவர்களில் பலருக்கும் என் மீது பொறாமை. அந்த முறை எங்கள் வகுப்பிலிருந்து வேறொரு மாணவனைத்தான் அனுப்ப வேண்டும் என்று ஆசிரியரைக் கட்டாயப்படுத்தினார்கள். இறுதியில் மற்றொரு வகுப்பிலிருந்து ரவியும், எங்கள் வகுப்பிலிருந்து அமிர்தலிங்கம் என்ற மாணவரும் போட்டிக்குச் செல்வதென்று முடிவானது. விஷயம் அறிந்ததும், "சிவம் என்னைவிட நன்றாகப் பேசக் கூடியவன். எனக்குப் பதிலாக அவன் இந்தப் போட்டியில் பங்கு பெறட்டும்" என்று கூறித் தான் நினைத்ததை சாதித்தும் விட்டான். போட்டியில் எனக்கு முதல்

பரிசு. வீட்டுக்குள் நுழையும்போது அங்கே காத்திருந்த ரவி, போட்டியின் முடிவைக் கேட்டான். சொன்னவுடன், தன் பாக்கெட்டிலிருந்து ஒரு கொத்து சாக்லேட்களை எடுத்து நீட்டினான். "நான் எதிர்பார்த்த முடிவு" என்றான். இலக்கிய ரசனைகளை மீறி, உணர்வுகளை வெளிப்படுத்திய இந்தச் சம்பவம் எங்கள் நெருக்கத்தை அழுத்தமாக உணரச் செய்தது.

"பி.யு.சி. முடித்த பிறகு விவேகானந்தா கல்லூரியில் இருவரும் பி.ஏ.படித்தோம். நான் பொருளாதாரம். அவன் தத்துவம். நான் அப்போது ரொம்ப பருமனாக இருப்பேன். காலேஜ், பூங்கா என்று பல இடங்களுக்கு என்னைத் தன் சைக்கிளில் ரவி அழைத்துச் செல்வதுண்டு. அவன் அம்மாகூட, "இவ்வளவு குண்டான பையனை வச்சு டபுள்ஸ் அடிக்கிறியே?" என்று கோபித்துக் கொள்வார். நட்பு சிரமத்தைப் பார்ப்பதில்லையே!

போனால் ரவி வேண்டுமென்றே எங்கள் இருவர் கிளாசிலும் உள்ள தண்ணீரை கொஞ்சம் எச்சில் செய்து குடிப்பான். பாதி சாப்பிடும்போது என் உணவிலிருந்து கொஞ்சம் எடுத்துக் கொள்வான். பாரத வெண்பாவில் கர்ணன் துரியோதனனைப் பற்றி "தன் எச்சில்தான் உண்ணத் தகைமையாளன், என் எச்சில்தான் உண்டான்" என்று பாடியிருப்பது நினைவுக்கு வருகிறது.

"கோயமுத்தூரில் மனிதர்கள் அதிக மரியாதையோடும் அன்போடும் நடத்துவதைக் கண்டு, நான் அங்கு செட்டில் ஆனேன். பதிமூன்று வருடங்கள் அங்கிருந்தேன். இதற்கிடையில் ரவி தம்பதிக்கு ஓர் ஆன்மீக குரு கிடைத்திருந் தார். நான் சென்னை வரும்போதெல்லாம் "நீ இங்கேயே தங்காததன் காரணமாக, எனக்குக் கிடைக்கும் பல அற்புத ஆன்மீக அனுபவங்கள், என் குருவிடமிருந்து உனக்குக் கிடைக்காமல் போகிறதே'

விஷயத்தில் கணக்குப் பார்த்தால் நட்பே இல்லை!"

"பிறகு இருவரும் பி.எல். படித்தோம். கடைசி வருடப் படிப்பின்போது அவனுக்கும், ராணி மேரி கல்லூரியில் எம்.ஏ. இலக்கியம் படித்துக் கொண்டிருந்த (பின்னாளில் 'டீ.வி. நியூஸ் புகழ்') ஷோபனாவுக்கும் காதல் மலர்ந்தது. ஒரு நண்பனுக்கே உரிய விதத்தில் அவர்கள் சந்தித்துக் கொள்ள ஏற்பாடு செய்தது முதல் பலவிதங்களில் அந்தக் காதலை வெற்றிகரமாக்க உதவினேன். அவர்கள் திருமணம் நடந்தது.

"இறுதித் தேர்வுக்கு முன் வழக்கம்போல் கம்பைன்டு ஸ்டடீஸ்தான். விடிய விடிய காலை மூன்று மணி வரை நாங்கள் சட்டம் படிக்க, ஷோபனா ஆங்கில இலக்கியம் படிப்பார். தேர்வு நாட்களில் அங்குதான் தங்குவேன்.

"எங்கள் நட்பில் சின்ன கலாட்டாக்களுக்கும் குறைவில்லை. நான் ஆசார விஷயங்களை கொஞ்சம் அதிகம் பார்ப்பேன். ஏதாவது ஹோட்டலுக்குப்

என்று வருத்தப்படுவான்.

"நான் மைலாப்பூரில் வீடு வாங்கியபோது, ரவி அதற்குப் பணஉதவி செய்தான். அதைத் திருப்பிக் கொடுத்தபோது, "தொகை சரியா இருக்கா? ஏதாவது விட்டுப் போச்சா?" என்றேன்.

"பண விஷயத்தில் கணக்குப் பார்க்கத் தொடங்கினால், அது நட்பே அல்ல" என்றான். சமீபத்தில் பெருங்குடியில் எங்கள் இருவருக்குமாக மனை வாங்க நிச்சயித் தோம். இரு மகள்களைக் கொண்ட எங்கள் குடும்பத்துக்கு அந்த இரு மனைகளையும் வாங்கினால் நன்றாய் இருக்குமே என்று என் மனைவி ராஜேஸ்வரி கருதினாள். இதை அவள் தெரிவித்த அடுத்த கணமே, 'எந்த நிமிடம் அது உனக்குத் தேவைன்னு பட்டுச்சோ, அப்பவே அது உனக்குத்தான்' என்று விட்டுக் கொடுத்தான்.

"வாழ்க்கையில் பல நண்பர்கள் வந்து போயிருக்கிறார்கள். ஆனால் நான் பல வருடங்களாக ஒரே அலைவரிசையில் நட்பு கொண்டிருப்பது, ரவியோடு மட்டும்தான்!"

சந்திப்பு: **அருண் சரண்யா**

ஒரு வாசகி, கதை எழுதுகிறார்...

பொதுவாக, வாசகர்கள் ஏதேனும் சம்பவம் சொல்லி, அதை எழுத்தாளர்கள் கதையாக மாற்றுவார்கள். ஒரு மாறுதலுக்கு ஓர் எழுத்தாளரின் வாழ்வில் நடந்த சம்பவத்தைச் சொல்லி, வாசகரைக் கதை எழுத வைத்தால் என்ன என்று தோன்றியது.

தமது சிறுகதைகள் மூலமும் பாப்கார்ன் கனவுகள் நாவல் மூலமும் கல்கி வாசகர்களுக்கு நன்கு அறிமுகமான ம.வே. சிவகுமாரை அணுகி விஷயத்தைச் சொன்னதும், "என் முதல் காதல் அனுபவத்தைச் சொல்கிறேன். பிரமாதமாக இருக்கும்" என்று உற்சாகமாக முன்வந்தார்.



• ம.வே. சிவகுமார்

தமிழில் இதுவரை எழுதி அனுபவமில்லாத (ஆங்கிலப் பத்திரிகையாளர்!) கிருத்திகா, "நான் சிவகுமாரின் எல்லா கதைகளையும் படித்திருக்கிறேன். அவருடைய அனுபவம் ஒன்றைக் கதையாக எழுதுவது என்றால் ஏக சந்தோஷம். சின்ஸியராக முயற்சி செய்கிறேன். என்ன... என் தமிழ் கொஞ்சம் எலிமென்ட்டரி லெவலில் இருக்கும்; பார்த்துக் கொள்ளலாம்!" என்று மும்முரமானார்.

"நீங்கள் எழுதுங்கள்; ஆங்காங்கே நான் சரி பண்ணித் தருகிறேன்'' என்று சொல்லி, சிவகுமார் தம் முதல் காதல் அனுபவத்தைச் சொல்லத் தொடங்கினார் :

"அவள் பெயர்... அது வேண்டாம். கதைக்காக ஷைலஜா என்று வைத்துக் கொள்வோம். என் உறவுக்காரப் பெண்தான். சின்ன வயதிலிருந்தே நானும் அவளும் ரொம்ப நெருக்கம். அவளோடு பேசிக் கொண்டிருந்தால் பொழுது போவதே தெரியாது. விளையாட ஆரம்பித்தால் உலகமே தெரியாது. ஏழெட்டுப் பேராக ஐ ஸ்பை விளையாடுவோம். நான் ஒளிந்து கொள்ளும் இடத்தில்தான் அவளும் ஒளிந்து கொள்வாள். ஓவிடா மாதிரிதான். அண்டை வீட்டுக்காரரின் பொறாமை; சொந்தக்காரரின் பெருமை. மற்ற பையன்களெல்லாம் பொறாமைப் படுகிற அளவுக்கு நானும் அவளும் அத்தனை சினேகம். சொந்தக்காரப் பெண், சிநேகிதி என்ற வரைமுறையெல்லாம் மறைந்து போய் அப்போதே என் மனத்துக்குள் அவளுக்கொரு ஃப்ளாட் கட்டி, தனியே குடி

வைத்து விட்டேன். ஆனால் காதல், கீதல் என்றெல்லாம் பேசுகிற வயதா அது? திருட்டுக் காதலை எனக்குள்ளேயே பொத்திப் பொத்தி, ஒளித்து வைத்திருந்தேன்.

"பள்ளிப் படிப்பு முடிந்து கல்லூரிக்குப் போனபின் கூட வெளியே சொல்ல தைரியம் வரவில்லை. அவளுக்கும் என்மேல் அப்படியொரு காதல் இருக்கிறதா என்று புரிந்து கொள்ள முடியவில்லை. அவள் எப்போதும் போல என்னுடன் சிறப்பாகவே பழகி வந்தாள்.

"திடீரென்று அவள் அப்பாவுக்கு ஒரு பெரிய அதிர்ஷ்டம் அடித்து, அவர்கள் குடும்பத்துடன் அமெரிக்கா போய் செட்டில் ஆகி விட்டார்கள்.

"எனக்கு அவ்வளவாகத் தாடி வளராததால் ஷேவ் பண்ணிக் கொண்டபடியே சோகம் வளர்த்துக் கொண்டு, காலேஜ் போய், பின் பாங்க் உத்தியோகம் கிடைத்து, ஒரு பொறுப்புள்ள பையனாக மாற வேண்டியதாகி விட்டது. ஆனாலும் மனத்தில் அவளுக்காகக் கட்டிய ஃபிளாட்டில் ஒட்டடை சேராமல் அவ்வப்போது வாக்குவம் கிளீனரால் சுத்தம் செய்து, அந்தப் பிரதேசத்தில் அவளுடன் வலம் வந்து கொண்டிருப்பேன்.

"என் கசின் பிரதர் ஒருத்தன் கல்யாணத்துக்கு அவள் வந்தாள். எத்தனை வருட இடைவெளி! மனதுக்குள் பலமுறை நான் ரிகர்சல் பார்த்துக் கொண்டேன். 'எப்படியும் அவளிடம் என் காதலைச் சொல்லிவிடுவது' என்று.

"ஆனால் கூடவே ஒரு பயம். வருடங்களின் கரைசலில், அமெரிக்காவில் அவள் வேறு யாரையாவது காதலித்திருப்பாளோ? ஒருவேளை கல்யாணமே ஆகியிருந்தாலும் வியப்பில்லை. புதையல் காத்த பூதம் மாதிரி அவளை நான் மனசுக்குள் இன்னும் இருத்தி வைத்திருப்பதையெல்லாம் அவளிடம் சொன்னால் சிரித்து விடுவாளோ?

"அவள் வேறு யாரையும் காதலித்திருக்கவில்லை; கல்யாணமும் ஆகியிருக்கவில்லை என்பது தெரிந்தபோது நிம்மதியாக இருந்தது.

"ஆனால் அந்தத் திருமணத்துக்கு அவள் வந்திருந்த போது, நேரில் சந்தித்த எனக்குப் பேரிடி. அமெரிக்க வாழ்க்கை அவளுக்குக் காதல் எதையும் தரவில்லை என்றாலும் கலாசார ரீதியில் அவள் மிகவும் மாறிப் போயிருந்தாள். உடை, பழக்க வழக்கங்கள், அபார இங்கிலீஷ், நிறைய பணம், நடைமுறையில் ஒரு அலட்சிய பாவம்... இதெல்லாம் நான் சின்ன வயதிலிருந்து பொத்தி வைத்திருந்த அந்த ஷைலஜாவிடம் இல்லை. இவள் வேறு ஷைலஜா என்று தோன்றியது. தென்னிந்திய மிடில்கிளாஸ் மாமியாருக்கு ஏற்ற மருமகளாகவும் ஆபீஸ், அரியர்ஸ், அலைச்சல் என்றிருக்கிற கணவனுக்கும் இவள் சரிப்படமாட்டாள் என்று தோன்றியது.

"என் காதலை வலுக்கட்டாயமாக நானே பிடுங்கித் தூக்கிப் போட்டுவிட்டு என் அப்பா அம்மா பார்த்து வைத்த பெண்ணைக் கல்யாணம் பண்ணிக் கொண்டு லட்சண புருஷனாக ஆக வேண்டியதாகி விட்டது."

சிவகுமார் சொல்லி முடித்ததும் "அடடா, ரொம்பப் பாவம் சார் நீங்க!" என்று பரிதாபப்பட்டு விட்டு 'இதை எப்படிக் கதையாக்கலாம்'

• கிருத்திகா



என்று யோசிக்கத் தொடங்கினார் கிருத்திகா.

"ரொம்ப வருஷத்து விஷயங்கள் வரும் போல இருக்கு. பேசாம ஃப்ளாஷ்பேக்குல ஆரம்பிச்சிரவா?"

"அப்பத்தான் சரியா இருக்கும்" என்று ஆமோதித்தார் சிவகுமார்.

"ஓகே. அந்தக் கல்யாணத்துக்கு அவ வர்றது லேருந்து தொடங்கறேன்.." என்று சொல்லி விட்டு, முதல் வரிக்காக யோசிக்கத் தொடங் கினார்.

"முதல் வரியிலேயே அவளைக் கொண்டு வந்துடணும்னு நினைக்காதீங்க. கல்யாண மண் டபத்துல ஆரம்பிக்கறீங்கன்னா, முதல்ல அந்த அட்மாஸ்ஃபியர் வரணும். படிக்கிறவங்க, தாங் களே அந்த மண்டபத்துக்குள்ள நுழையற மாதிரி ஃபீல் பண்ணணும்!" என்று சிவகுமார் அடியெடுத்துக் கொடுக்க,

"ஜானவாசக் கார்லேருந்து ஆரம்பிக் கிறேன்!" என்று சொல்லி, 'மண்டபத்தின் வாசலில் பழைய ஸ்டாண்டர்ட் காருக்கு அவசரமாய் பூ சுற்றிக் கொண்டிருந்தார்கள்....' என்று தொடங்கினார் கிருத்திகா.

விறுவிறுவென்று கதை நகர்ந்து கல்யாண மண்டபத்தில் ஷைலஜாவும் சிவகுமாரும் (கதையில் கிரிதரன் என்று பெயர் மாற்றி விட்டார்.) சந்திக்கிற வரைக்கும் வந்து விட் டார்.


"இப்ப ஃப்ளாஷ்பேக் கொண்டு வரலா மில்லையா? நீங்க ஐ ஸ்பை விளையாடினதை இங்க வைச்சு ஆரம்பிக்கலாம்னு தோணுது. சொல்லுங்க. எங்கெங்க எல்லாம் ஒளிஞ்சிக் கிட்டீங்க?

"எங்கன்னு சொல்றது? சமையலறை புகைக் கூண்டுலேருந்து கட்டிலுக்கு அடியில, படுக்கை மறைவில், பீரோ பின்னாடி, தோட்டத்து மரத்து மேல..."

"ஏதாவது இப்ப வம்புல மாட்டி, சி.பி.ஐ.

"இவரைத் தலைவரா தேர்ந்தெடுத்தா நம்ம கட்சி இமேஜே போயிடும். போயும் போயும் ஒரு லட்ச ரூபாய்க்குத்தான் ஊழல் செய்திருக்கார்! கேவலம்!"

- பாஸ்



வந்தா ஒளிஞ்சிக்க நல்ல முன் அனுபவம் இருக்கு..." என்றபடி அந்த ஐ ஸ்பை வைப வத்தை எழுதத் தொடங்கினார் கிருத்திகா.

"ஒரு விஷயம் சொல்ல மறந்துட்டேன். ஒரு தடவை அவளோட அப்பா, விளையாட்டா என்னை 'என்னடா மாப்ளே!'ன்னு கூப்பிட் டார் பாருங்க... புல்லரிச்சிடுச்சி. அன்னிலே ருந்து ஒரு வாரம் தூங்கவே இல்லை. இதை மறக்காம கதைல சேர்த்துடுங்க..." என்று சிவகுமார் சொல்ல, நட்சத்திரம் உதிர்வது போல சிரித்தார் கிருத்திகா.

சுமார் ஒன்றரை மணி நேரம். விறுவிறு வென்று எழுதிக் கொண்டிருந்தார் கிருத்திகா. அந்த இடைவெளியில் நாம் சிவகுமாரிடம், "ஏன் சிவகுமார், இப்படி லவ் பண்ண விஷயத்தை வெளிப்படையா சொல்றீங்களே... நாளைக்குக் கல்கி படிச்சிட்டு, உங்க ஒய்ஃப் உங்களை வீட்டு வாசல்ல நிக்க வெச்சி தோப்புக்கரணம் போடச் சொன்னா என்ன செய்வீங்க?"

உரக்கச் சிரித்தார் சிவகுமார். "உங்களுக்கு அந்தக் கவலையே வேண்டாம். என் ஒய்ஃப் கிட்டே நான் சொல்லாத விஷயமே கிடை யாது. இதே சமாசாரத்தை என்கிட்டே கேக் கறதை விட, என் ஒய்ஃப்கிட்ட கேட்டீங் கன்னா இன்னும் பிரமாதமா கண், காது, மூக்கு வெச்சு விலாவாரியா சொல்லுவா."

"உங்க கல்யாணத்துக்கு அந்த ஷைலஜா வந்திருந்தாளா?"

"ஓயெஸ். வாழ்த்துக்களோடும் அமெரிக்கப் பரிசுப் பொருளோடும்."

"கஷ்டமா இல்லை, அப்ப?"

"என்ன கஷ்டம்? சந்தோஷமா வாங்கி வெச்சுக்கிட்டேன்."

"நான் அதைக் கேக்கலை. உணர்வு ரீதியா...?"

"நான் நல்லா யோசிச்சித்தான் அவளை மறந்துட முடிவு செஞ்சேன். அந்த நினைவுகள் தான் முக்கியம். இருபது வருஷம் ஆச்சு. இன்னிக்கும் அதை நினைச்சால் உற்சாகமா விவரிக்க முடியுதே! அது போதாதா?"

கிருத்திகா குறுக்கிட்டார். "ப்ளாஷ் பேக் எழுதி முடிச்சுட்டேன். ஜானவாச ஊர்வலத் துலேருந்து அவங்க ரெண்டு பேரும் மட்டும் தனியா பிரிஞ்சி, பேசிட்டுப் போறாங்க. 'யாரும் இல்லாம, கொஞ்ச நேரம் தனியா உங்கிட்டக் கொஞ்சம் பேசணும்'னு கிரிதரன் அவளைக் கூட்டிட்டுப் போறான்'னு எழுதியிருக்கேன். இந்த இடத்துல அவளோட பேசும் போது, 'இவ நமக்கு சரிப்பட்டு வரமாட்டாளோ'ன்னு அவனுக்குத் தோணணும். என்ன பண்றது? டயலாகாவே கொண்டு போயிடலாமா?"

"வேணாம்... நீள நீளமா வசனம் வெச்சிங்கன்னா, ரீடர்ஸுக்கு போர் அடிக்கரும். தவிர, ஒரு ஆள் சட்டுனு ஒரு முடிவுக்கு வரான்னா அதுக்கு அழுத்தமா ஒரு காரணம் வேணும். பக்கம் பக்கமா எவ்வளவு பேசினாலும் அந்த உணர்வு வராது. பளிச்சுனு ஏதாவது ஒரு சம்பவம் நடக்கறதா வைங்க. அதாவது 'இந்தப் பொண்ணை நாம கல்யாணம் பண்ணிக்கிட்டா ரெண்டு பேருக்குமே சந்தோஷம் இருக்க முடியாது; ரெண்டு பேரோட வாழ்க்கை முறைகளும் வேற வேற; ஒத்து வராது'ன்னு அவன் தெளியற மாதிரி ஒரு சம்பவம் வேணும். அதுதான் நிக்கும். வசனம் இங்கே உதவாது."

கிருத்திகா சற்று யோசித்து விட்டு, "அவனை அவள், ஒரு மிலிட்டரி ஹோட்டலுக்குக் கூட்டிட்டுப் போறா மாதிரி எழுதிடவா?"

"எங்க, முனியாண்டி விலாஸுக்கா? அவனும் திருட்டுத்தனமா ஆம்லெட் சாப்பிடற ஆசாமியா இருந்தா? ஒரு வெட்டு, வெட்டிருவானே? உணவு முறை மட்டும் பிரச்னையில்லை. சட்டுனு ஒரு மாற்றம்... அதிரடியா அவனுக்கு வரணும்..."

"அதுவும் ஒரு மிடில் கிளாஸ் ஆசாமி."

"முக்கியமா தமிழன்! மெட்ராஸ் வாலா... சே, சென்னைவாசி."

"என்ன பண்ணலாம்?" – தீவிரமாக யோசிக்கத் தொடங்கினார் கிருத்திகா.

பத்து நிமிடம்... பதினைந்து நிமிடம்... அரை மணி... களைத்துப் போய், "ஐயோ, எனக்கு கிளைமாக்ஸ் வரலை...!"

சிவகுமார் சிரித்தார்.

"கதை எழுதறதில ஒரு முக்கியமான விஷயம். கிளைமாக்ஸ்ங்கறது செயற்கையா திணிக்கப்பட்டதா இருக்கக்கூடாது. இயல்பா, மெதுவா வரணும். கடைசி வரி வர்ற வரைக்கும் இதுதான் கடைசி வரிங்கற உணர்வே படிக்கறவனுக்கு வரக்கூடாது. படிச்சி முடிச்சதும் பளார்னு அறைஞ்சாப்பல இருக்கணும். கொஞ்சம் விலகி நின்னு யோசிங்க. ரெண்டு பேரும் தனியா போறாங்க. எதுக்கு? எங்கியாவது போய் பேசறதுக்கு..."

"ஆட்டோ பிடிக்கிறாங்கன்னு வெச்சிப்போம்."

"சரி, ஆட்டோ கூப்பிடறாங்க..."

"ஆட்டோக்காரன் மீட்டருக்கு மேல கேக்கறான். நாலஞ்சு ஆட்டோக்காரங்க, 'என் வண்டில வா; என் வண்டில வா'ன்னு கலாட்டா பண்றாங்க..."

"வெரி குட். இங்க கிளைமாக்ஸ் கொண்டு வந்துடலாம்."

"எப்படி?"

"யோசிங்க... நானே சொல்லிட்டா எப்படி?"

காஸ்ட்லி பாராளு மன்றம்!



பாராளுமன்றத்தை நடத்துவதற்கான செலவு எவ்வளவு தெரியுமா? 1951-ல் ஒரு நிமிடத்திற்கு நூறு ரூபாயாகவும். 1963ல் முன்னூறு ரூபாயாகவும் இருந்தது. தற்போது ரூ.6,700/- ஆக உயர்ந்திருக்கிறது என்பது பட்ஜெட் குறிப்பு.

கேள்வி நேரம் நடத்துவதற்கான செலவு 1951-ல் ஒரு மணி நேரத்திற்கு ஆறாயிரம் ரூபாயாக இருந்தது. தற்போது ரூ 4.02 லட்சம் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது.

ஒரு நாளைக்கு பாராளுமன்றத்தை நடத்துவதற்கான செலவு ரூ.30.12 லட்சம்.

— கலா

கிருத்திகா விதவிதமாக யோசித்துச் சொன்னார்.

"ம்ஹூம். சரிப்படாது. ஒரு பஞ்ச் வேணும். போனா போகுது. நானே சொல்லிடட்டா?"

சிவகுமார், அந்த ஆட்டோ பிடிக்கிற காட்சியின் எக்ஸ்டென்ஷனாக அந்தக் கதைக்கு ஒரு கிளைமாக்ஸ் சொல்ல, துள்ளிக் குதித்தார் கிருத்திகா.

"ஐயோ, சூப்பர்! எப்படி இப்படியொரு ட்விஸ்ட் உங்களுக்குத் தோன்றியது?" என்று கிட்டத்தட்ட லவுட்ஸ்பீக்கர் இல்லாத குறையாகக் கத்திவிட்டு, "ஓகே! நான் எழுதிடறேன். பிரமாதம். என்ன மாதிரி கிளைமாக்ஸ்! ஐயோ..." என்று நிறைய உணர்ச்சிவசப்பட்டு சிவகுமார் சொன்ன கிளைமாக்ஸையே கதையின் கிளைமாக்ஸாக வைத்து, எழுதி முடித்தார். முடித்தவர், "கதை எழுதறது எவ்ளோ கஷ்டம்னு இப்பப் புரியறது" என்றார் மெதுவாக.

"அதுவும் நல்ல கதையா எழுதறது; எழுதின கதை பப்ளிஷ் ஆறது; அப்புறம் அது வாசகருக்கு அப்பீல் ஆறது; ஒரு ரெகக்னிஷன் கிடைக்கறது."

கிருத்திகா எழுதிய கதையை சிவகுமார் படித்து விட்டு, ஆங்காங்கே சில திருத்தங்கள் செய்தார். சில இடங்களில் சொற்களை மாற்றிப் போட்டு மெருகு கூட்டினார். வர்ணனைகளைச் சுருக்கி, அழகு சேர்த்தார்.

அப்புறம் அந்த கிளைமாக்ஸ்... இருங்கள்! அதை அடுத்த இதழில் அந்தக் கதை பிரசுரமாகும் போது நீங்களே படித்துக் கொள்ளுங்கள்!"

— ஔரங்கசீப்

அட்டை வண்ணப்படம்,
படங்கள் : **யோகா**



கோண்டு, பட்டணம் வந்து இறங்கி விட்டான். என்ன துரதிருஷ்டம்? அவன் அங்கு வந்திருப்பதை அலறிக் கொண்டு ஓடும் ஆட்டோக்கள், அழுது வடிகிற பஸ்கள், மற்றும் ஜனங்கள் யாரும் கண்டுகொள்வதாக இல்லை. அவரவர்கள், தத்தம் வேலைகளைக் கவனித்துக் கொண்டிருந்தார்கள். பட்டணம் அவ்வாறு தான் இருக்கும் என்று கோண்டுவுக்கும் தெரியும். கிராமத்து ஆசாமிகளுக்கே உரிய குணாம்சத்தின்படி, பட்டணம் என்பதே அயோக்கியர்களின் கூடாரம் என்றே அவனும் நினைத்துக் கொண்டிருந்தான். அதனால்தான், பணத்தைக் கூட, மிகவும் ஜாக்கிரதையாக உள் 'அண்டிராயர்' பாக்கெட்டில் வைத்து, அதன் மேல் வேட்டி கட்டி, வேட்டியையும் மடித்துக் கட்டி இருந்தான். அந்த இடத்தில் பணம் இருக்கும் என்பதை எவரே அனுமானிக்க முடியும்?

கோண்டு, சினிமாவில்* தோன்றுகிற கிராமத்து நபர் இல்லை. ஆகவே, அவனுக்குக் கொண்டை, அதில் பூ, கையில் மஞ்சள் பை என்று எதுவும் இல்லை. அவன் பி.ஏ. படித்து இருந்தான். எல்லோரும் படித்தார்கள். அவனும் படித்தான். அதற்கு மேல் என்ன படிப்பது என்று அவனுக்கு யாரும் சொல்லித் தரவில்லை. கொஞ்சம் அதிகமாகவே நிலம் இருந்தது. அவன், நிலங்களைக் கவனித்துக் கொண்டிருந்தான். அவன் வீட்டில் மின்சார விளக்கு எரியவே செய்தது. இருந்தாலும், வீட்டுக்கு ஒரு காமாட்சியம்மன் விளக்கை ஏற்றி வைக்க ஒரு மருமகள் வேண்டும் என்று கோண்டுவின் அம்மா சொல்லிக் கொண்டிருந் தாள். இந்த நேரத்தில்தான், அவனது அக்கா தேவகியிடம் இருந்து அந்தத் தகவல் கிடைத் தது. உடனே புறப்பட்டு வரச் சொல்லி இருந் தாள் அவள்.

சென்னையின் ஆட்டோக்காரர்களில் பலர், மிகவும் விசித்திரமானவர்கள். அவர்கள், போகும் இடத்துக்கு மட்டும் கூலி கேட்பதில்லை. அவர்கள் விரும்புகிற கூலியைக்

பிரபஞ்சன்



12

பூக்கள் நாளையும் மலரும்

கேட்பதில் வல்லவர்கள். தேனாம்பேட்டையில் இருந்து, மாம்பலத்துக்குப் பக்கத்தில் இருக்கிற காலனிக்கு ஒருவர் ஐம்பது ரூபாய் கேட்டார். அவ்வளவு தூரம் என்றார்.

"எது தூரம்?"

''நீ சொல்ற இடம் தம்பி'' என்றார் ஆட்டோ ஓட்டுநர்.

"பாண்டிபஜார் வழியா போனா துரைசாமி பாலம் வரும். சோத்துக்கை பக்கம் திரும்பணும். எனக்கு வழி தெரியும்."

ஆட்டோ ஓட்டுநர் தம் தோல்வியை ஒப்புக் கொள்ள மறுத்தார்.

"சரி, எவ்வளவுதான் தருவே?"

"அஞ்சு ரூபாய்."

அவரே மிரண்டு போனார்.

கோண்டு இதற்குள், இனாமாகவே ஏற்றிச் சென்றாலும் வண்டியில் ஏறும் மனநிலையில் இல்லை. பட்டணம் பற்றி அவன் எண்ணம் இறுகிப் போயிற்று.

"என்னதான் தருவே, சொல்லு."

"இது என்ன?"

"மீட்டர்."

"அது எதுக்கு. ஆட்டோவுக்கு அழகுக் காகவா? வளையல், செயின் என்று ஆண்களும் பெண்களும் போட்டுக் கொள்கிறார்களே, அது மாதிரியா?"

பையை எடுத்துக் கொண்டு சந்தோஷமாக நடக்கத் தொடங்கினான், கோண்டு. பஸ்கள் நிற்கிற இடத்தில், வாயில் வைக்கச் சகிக்காத காப்பி.' வியாபாரிகள் என்ற பெயரில் கொள்ளை அடிக்கிற பேர்வழிகள். அதையே வேறு பெயர்களில், விதத்தில் செய்கிற அரசியல்காரர்கள், அதிகாரிகள். இத்தனை அயோக்கியர்களை சென்னை எப்படித் தாங்கு கிறது? அவனுக்கு, பாண்டிபஜார் நெரிசலைப் பார்த்துச் சிரிப்பு வந்தது.

வீடு வந்ததும், தேவகி கேட்டாள்.

"ஆட்டோவில வர்றதுக்கென்ன?"

"அக்கா. ஏமாத்தறது மட்டும் இல்லை, ஏமாறறதும் பாவம். வழி தொலைவில இல்லையே. வாயில இருக்கு வழின்னு அம்மா



நான் கேட்கிறேன்...

சொல்லுவாங்க."

அவன் குனிந்துச் சாப்பிட்டான். "என்னக்கா விஷயம்?"

"ஜனனி விஷயமாத்தான்."

"எங்கே அவள்?"

"காலேஜ் போயிருக்கா."

"ஜனனிக்கு என்ன?"

"என்னவா? அவளுக்கும் வயசு ஆறதோ இல்லையோ? நீ முறைப் பையன். நீதான் அவளைக் கட்டிக்கணும்."

ஆளுங்கட்சியைக் கேட்கிறேன்...



அவன் அமைதியாகச் சாப்பிட்டுக் கொண்டிருந்தான்.

"இந்த ஊர்ல, அக்கா, மனுஷனை மனுஷன் ஏமாத்தறது, தேவைக்காக மட்டும் அல்ல. அது பல் விளக்கிற மாதிரி சகஜமான விஷயமா, அவசியமான, ரொம்ப இயற்கையான விஷயமா மாறிப் போச்சு."

"நான் கேட்டதுக்கு இதுதான் பதிலா?"

"என்ன கேட்டே?"

"ஜனனியைக் கட்டிக்கிறதைப் பற்றி."

"கட்டிக்கிறதைப் பற்றி நான் மட்டும் என்ன பேசறது? அவள் சம்மதமும் இருந்து, எனக்கும் பிடிக்க வேண்டாமா?"

தேவகிக்கு இந்தப் பதில் ரசிக்கும்படியாக இல்லை.

சபேசன் எரிந்து கொண்டிருந்தான்.

அவன் முன்னால், அவன் மனைவி, லஞ்சமாகக் கிடைத்த பட்டுப் புடைவையை உடுத்திக் கொண்டு நின்று கொண்டிருந்தாள். 'தகதக' என்று பட்டுக்கே உரிய பளபளப்போடு இருந்தது. பாம்புத் தோல்களைப் போர்த்திக் கொண்டு, அது நிற்பது போல இருந்தது, சபேசனுக்கு.

பாவக் கரை படிந்த புடைவை. பாவத்தின் நகங்கள் நீண்டு உடம்பைப் பிராண்டிக் கொண்டிருக்கும் புடைவை. பேய்களின் கோரப் பற்கள் நீண்டு, விஷமே பரவி, நஞ்சில் தோய்த்த நிறமாக இருந்தது இது. ஏதோ, புகை வராத நெருப்பில், அனு எரிந்து கொண்டிருந்தாள்.

"இது யார் கொடுத்த புடைவை?" என்றான் சபேசன்.

அனு அமைதியாகச் சொன்னாள்.

"யாரோ ஒரு கான்ட்ராக்ட்காரர்."

"எவனோ கொடுத்த புடைவையை நீ கட்டிக்கலாம்னா, நான் எதுக்கு?"

அவள் அவனை அலட்சியம் தோன்றப் பார்த்தாள்.

"ஊர் உலகத்துல இல்லாததையா நான் பண்ணிட்டேன்? சும்மா சத்தம் போடாதீங்க. எதிர் வீட்டுல, அந்த அர்த்தநாரி சாரைப் போய்ப் பாருங்க. என்ன சாமர்த்தியமா பணம் சேர்க்கிறார், அவர்?"

அவன், கசந்து போய்ச் சொன்னான்.

"இது, ஒழுக்கம் இல்லாத வாழ்க்கை அனு. லஞ்சம் வாங்கறது, பொய், திருட்டு, விபசாரத்துக்குச் சமம்."

"யார் வாங்கலை? பெரிய பெரிய தலைவர்கள் எல்லாம் வாங்கறாங்க. வள்ளி அக்கா சொல்லுச்சு – போலீஸ்காரங்களே லஞ்சம் வாங்கறாங்க. நாம மட்டும், பைத்தியம் மாதிரி, வாய்ப்பைப் பயன்படுத்திக்காமே இருந்துடறது முட்டாள்தனம் இல்லீங்களா?"

"இல்லை. நமக்குக் கிடைக்கிற சம்பளம் தான், நியாயம். மற்றதெல்லாம் அநியாயம்."

"அப்போ, காற்றுள்ளபோதே தூற்றிக் கொள்ளு சொல்வாங்களே... அதுக்கு என்ன அர்த்தம்?"

"மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சு போடறியே!"

அவள், சபேசன் முன் உட்கார்ந்தாள். அவனைத் தீவிரமாகப் பார்த்தாள். பிறகு தெளிவோடு பேசத் தொடங்கினாள்.

"தோ பாருங்க... என்னை இன்னமும் நீங்க புரிஞ்சுக்கலையே. நான் எல்லாப் பெண்ணையும் போல ஒரு பெண். எல்லாப் பெண்களுக்கும் இருக்கிற மாதிரி, எனக்கு நகை ஆசை இருக்கு. புடைவை ஆசை இருக்கு. பணம், காசு, வசதிகளைப் பெருக்கிடணும்னு ஆசை இருக்கு. என் ஆசை பட்டுப் போகலை. உங்களுக்கு ஏனோ இந்த ஆசை இல்லை. பொண்டாட்டி ஆசையை நிறைவேற்றி வைக்கணும்கிற ஆசையும் இல்லை. அவளா அந்த ஆசையை நிறைவேற்றிக்கணும்னு முடிவு பண்ணிட்டா, அதுக்கும் தடையா இருக்கணுமா?"

அவன் தலையைப் பிடித்துக் கொண்டு அமர்ந்தான்.

பிரச்னையைத் தீர்த்து விட்டவள் போல, அவள் எழுந்தாள்.

"உங்களுக்கு ரொம்பப் பிடிச்ச மணத்தக்காளி வத்தல் குழம்பும், உருளைப் பொரியலும் பண்ணப் போறேன்" என்றபடி, அடுப்பறைக்குச் சென்றாள் அனு.

குழம்பிப் போனான் சபேசன். அவன், ஒரு பெரிய மீனாக மாறிப் போயிருந்தான். அரபிக் கடலில் அவன் நீந்தித் திளைத்துக் கொண்டிருந்தான். அனு வந்து அவனைத் தூக்கித் தரையில் போட்டாள்... அவன் எழுந்தான். கதவைத் திறந்து கொண்டு, தெருவுக்கு வந்தான். தெரு, இருட்டறைக்குள் மாட்டிக் கொண்ட கறுப்புப் பூனையாக அமிழ்ந்து கிடந்தது. தெரு விளக்குகள் எரிந்தன. எனினும் தோற்றன. அவன் தெருவுக்கு வந்தான். ஏதோ ஒரு திக்கில் நடக்கத் தொடங்கினான்.

இந்தப் பாதை எங்கு போகிறது? இது எங்கு போய் முடியப் போகிறது? எத்தனை பேர், தெரிந்து நடப்பவர்கள்? சபேசனுக்குத் தெரியாது. தெரிந்து நடப்பவர்கள் பாக்கியவான்கள்!

"நீங்கதான் ஆல்பர்ட்டோட அக்காவா? ரொம்ப சந்தோஷம். என் பேரு, ஜானு மாமி. இது அம்மா அப்பா வச்ச பேர் இல்லை. மாமிங்கறது, கிழமானா வந்து ஒட்டிக்கிற ஒரு பட்டப் பெயர். அறிஞர், மகாத்மான்னு எல்லாம் சொல்வாளே. அது மாதிரி கிழங்களுக்கு மாமா, மாமி. போகட்டும். உங்களோட எனக்கு



பேசாமல் உங்கள் கட்சிக்கே வந்து சேர்ந்து விடுகிறோம்! ↑

— பத்மஜா

பேச ஒரு விஷயம் இருக்கு. உக்காரச் சொல்றீங்களா? ரொம்ப சந்தோஷம். நீங்களும் உக்காருங்கோ. என்ன பைத்தியக்காரத்தனம். உங்க வீட்டுக்குள்ளே, வந்து உங்களையே உட்காரச் சொல்றேன் பாருங்கோ... நான் கொஞ்சம் அசடுன்னு பிந்து சொல்லுவா... பிந்து என்

எங்கள் தலைவரைச் சிறையில் கொடுமைப்படுத்துவதை நிறுத்த வில்லையென்றால்...



→

ஏனோகிறி. காப்பி வேண்டாம். ஒரே விஷயம். அஞ்சு நிமிஷம். நான் ஓடியே போயிடுவேன். என்ன அங்கேயே பார்க்கிறேங்கிறீங்களா? அந்தக் குழந்தை ஏகவோட முகத்தைக் கொஞ்சம் பாருங்கோ. பால் வடியறது. அப்படியே ஒரு பாத்திரத்தை எடுத்தாந்து அந்தப் பாலைப் பிடிச்சுக்க மாட்டமாங்கிறது மனசு. குழந்தைகளுக்கும் தெய்வங்களுக்கும்தான் அந்த மாதிரி முகம் அமைஞ்சிருக்கும். அது தெய்வீகம். நாமெல்லாம் அசுரான். நமக்கு மனசுக்குள்ளே பல். முகத்துல ரத்தமும் குரோதமும்தான் வடியும். உங்களுக்கு ஒரு விஷயம் சொல்லணும்மா. எங்க காலனியிலே ஒரு குழந்தை இருக்கா. ஜனனின்னு பெயர். குழந்தைக்கு இருபது இருக்கும். காலேஜ்ல படிக்கிறா. செப்புலங்கம் மாதிரி, பளபளன்னு இருக்கும் குழந்தை. நல்ல பதவிசு. நெய்யில வதக்கின முந்திரிப் பருப்பு மாதிரி பதமான பேச்சு. காலில போடற கொலுசு மாதிரி, ரீங்காரமான பேச்சு... எந்தக் குடும்பத்துக்கும் அவள் ஒரு பொக்கிஷமா இருப்பா. தாத்தா பூஜித்த விக்கிரகத்தை யாரும் தெருவில போடுவாளோ? அது மாதிரி, எந்தப் புகுந்த வீட்டிலேயும் அவளை வச்சுக்கிடுவாங்க. அப்படி ஒரு சமந்து. அந்தக் குழந்தை அப்பாவை இழந்து, ஒரு மாசம் கூட ஆகலை. ஐயோ பாவம்கிறீங்க... உங்க நல்ல மனசுக்கு நான் சொல்ல வர்றது புரியும். புடலங்காய் பச்சையா, செழிப்பா இருந்த குடும்பம். இப்போ, காற்றுல ஆடற பாகல் கொடியா இருக்கு. தகப்பன்னு ஒருத்தன் போயிட்டா, குடும்பம் படற அவஸ்தை உங்களுக்குப் புரியும். நீங்களே, அப்பா அம்மா இல்லாமே, அந்த ஸ்தானத்தில இருந்து தம்பி தங்கைகளை வளர்த்த புண்ணியவதியாச்சுதே. தெரியும். எனக்கு என்னமா தெரியுமா? மழையும், புயலும் கடுதாசி எழுதிப் போட்டுட்டா வரும்?

"என்ன? அந்தக் குழந்தை ஜனனி. ஒரு பையனை விரும்பறா. அவனுக்கும் பொண்ணு மேல இஷ்டம்தான். எந்த அளவுக்கு இஷ்டம்னா, மகாபலிபுரம் லாட்ஜ்லே அறை போட்டு படுத்துக்கிற அளவுக்கு இஷ்டம். 'ஐயோ சேசுவே'ன்னு நீங்க சொல்றேள். விஷயத்தைக் கேட்டுட்டு, ஜனனியோட அம்மாவும் 'ஐயோ, ராமான்னுதான்' சொன்னாள். வார்த்தை வேற வேறதான். உணர்ச்சி ஒன்னுதான் பார்த்தேளா? நீங்க மேரி மேரிங்கறேள். சிலர் ராமா ராமாங்கறான். சிலர் மாரி மாரிங்கறாள். அல்லா சாமியும் எல்லாச் சாமியும் ஒன்னுதானே? சரியா? காதல் பண்றது, புள்ளை பெத்துக்கறதுக்கு ஆணும் பெண்ணும் போதும். இந்துவும் கிறிஸ்துவாளும் ஒன்னா இருந்தாலும் குழந்தை பிறக்கறதே. கடவுள் விருப்பம் இல்லைன்னா, பிறக்கக் கூடாதே. அப்புறம் எப்படிப் பிறக்கிறது? மதம் இல்லை. மனுஷங்கள்தான் குழந்தை பிறக்கக் காரணம். கடவுள், இயற்கை அனுமதிக்கிறதை நாம் என்னத்துக்கு தடைபண்ணணும்... சொல்லுங்கோ... சரியா?

"அந்த ஜனனி அழுது புலம்பறா. நியாயமா? இந்து பெண் கண்ணீர் மட்டுமா சுடும்? கிறிஸ்துவப் பெண் கண்ணீரும் சுடத்தான் செய்யும். ரத்தத்துல சிலுவை இருக்கோ? நாமம் இருக்கோ? பட்டை இருக்கோ? இல்லையே...

"காப்பி பிரமாதம். டிக்காஷன், நல்ல பால், மிதமான சூடு. இதுதான் காப்பி. நாங்கதான் காப்பி போடவே பிறந்த சாதின்னு சில பேர் சொல்லுவா! அபத்தம். போடத் தெரிஞ்சவா, காப்பி போட்டா, எல்லாம் நல்லாத்தான் இருக்கும். வாழத் தெரிஞ்சவா, நல்லா வாழ்வா. எதுக்குச் சொல்றேன்னா, அந்தப் பொண்ணுக்கு அவ நினைக்கற அந்தப் பையனையே நாம் முடிச்சு வைக்கணும். அதுதானே நம்மைப் போல பெரியவாளுக்கு அழகு."

"வாஸ்தவம்."

"அந்தப் பையனை உங்களுக்குத் தெரியும்."

"சொல்லுங்கோ."

"உங்க கையிலே ஒரு குழந்தையோட எதிர்காலம் அடங்கி இருக்கு."

"கர்த்தருக்குச் சம்மதமானா, நான் அந்த தம்பதிகளை முடிச்சு வைப்பேன்."

"உண்மையா செய்வேளா?"

"சத்தியமா."

"அந்தப் பையன்...."

"சொல்லுங்கோ..."

"உங்க தம்பி. ஆல்பர்ட்டுதான்."

நீண்ட மௌனம். மூச்சு விடும் ஓசையும் கேட்டது. வெளியே காக்கைகள் கரைந்தன. நிமிஷங்கள் நத்தையாக ஊர்ந்தன.

ஆல்பர்ட்டின் அக்கா அழுது கொண்டிருந்தாள்.


(தொடரும்)

"எப்படி இருக்கீங்க தலைவரே?"

"ஏதோ ஆஸ்பத்திரிக்கும் ஜெயிலுக்குமா ஓட்டிக்கிட்டிருக்கேன்!"

– சீர்காழி வி. ரேவதி







1997 ஜனவரி 19
தாது தை 6
மலர் : 55
இதழ் : 25

கல்கி

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்.



கர்நாடக அரசின் இரட்டை வேஷம்!


'**கா**விரிப் பேச்சு வார்த்தை தோல்வி!' 'கருணாநிதி, கடமையில் தவறி விட்டார்', 'ஐக்கிய முன்னணி ஆட்சிக்கு தி.மு.க. ஆதரவை உடனடியாக விலக்கிக் கொள்ள வேண்டும்...' என்றெல் லாம் தமிழக எதிர்க்கட்சிகள் கூக்குரல் எழுப்புகின்றன. 'ஐந்து முறை பேச்சு வார்த்தை நடத்தி என்ன சாதித்தார்கள்? பழைய நிலைமையேதான் தொடர்கிறது' என்று மக்களும் மனம் சோர்ந்து போயிருக்கிறார்கள்.

ஆனால், 'நடுவர் மன்ற இடைக்கால உத்தரவை அமுல்படுத்துவது குறித்துப் பேச்சு வார்த்தை நடத்துங்கள்' என்று உச்சநீதி மன்றமே ஆணை பிறப்பித்த நிலையில், அதை மீறாமல் செயல் படுத்தும் கடமை தமிழக - கர்நாடக அரசுகளுக்கு இருந்தது.

அதையொட்டியே பலமுறை பேச்சு வார்த்தைகள் நடத்தி இறுதிவரை சுமுகத் தீர்வுக்கு முயன்றிருக்கிறார் தமிழக முதல்வர். இது விஷயத்தில் கர்நாடக அரசிடம் அதிக ஒத்துழைப்பை எதிர்பார்க்க முடியாது என்பது தெரிந்த நிலையிலும் கடமைக்காகச் செயல்பட்டிருக்கிறார் என்றே சொல்லலாம்.

ஒருத்தருக்கொருத்தர் இரு முதல்வர்களும் 'குல்லா' போட்டுக் கொண்டு, போட்டோ எடுத்துக் கொண்டதோடு சரி... அதற்கு மேலாகப் பேச்சு வார்த்தைகள் என்ன சாதித்தன என்று கிண்டல் பொறி பறக்கிறது.

என்னதான் கருத்து மோதல் இருப்பினும், அரசாங்க விருந்தினர்கள் வரும்போது காட்டப்பட



வேண்டிய சராசரி மரியாதைகளில் குறை வைக்காமல் இருப்பதே பண்பாடு.

பேச்சு வார்த்தையின் விளைவு வேண்டுமானால் பூஜ்யமாக இருக்கலாம். ஆனால், சிறப்பு நீதிமன்றத்தின் இடைக்காலத் தீர்ப்பினையொட்டிய நமது உரிமைகளைத் தமிழக அரசு இம்மியளவும் விட்டுக் கொடுக்கவில்லை என்பது நம் தரப்புக்கு ஒரு வெற்றிதான்.

மேலும், பேச்சு வார்த்தைகள் நடந்து கொண்டிருந்தபொழுதே, நடுவர் மன்றத்துக்குப் புதிய நீதிபதி நியமிக்கச் சொல்லிப் போராடி, வெற்றியும் அடைந்துள்ளது தமிழக அரசு.

இந்த முன்னெச்சரிக்கை நடவடிக்கையால்தான், பேச்சு வார்த்தை முறிந்துபோன இரண்டாம் நாளே தமிழக தரப்பு வாதத்தை நடுவர் மன்றத்தில் ஆணித்தரமாக வழக்குரைஞர் பராசரன் எடுத்துரைக்கக்கூடிய வாய்ப்பு கிடைத்திருக்கிறது.


துளியும் காலதாமதமின்றி இப் பிரச்னையில் அடுத்த கட்ட நடவடிக்கைக்கு வழிவகுக் கப்பட்டிருக்கிறது - தமிழகத்தைப் பொருத்தமட்டில்.

ஆனால், கர்நாடக அரசின் முன்னுக்குப் பின் முரணான போக்கு, அவர்கள் நிலையில் உள்ள தடுமாற்றத்தை மட்டுமின்றி அநீதியையும் உணர்த்துகிறது.

'நடுவர் மன்றத் தீர்ப்பை இந்த அரசு ஏற்காது; செயல்படுத்தாது!' என கர்நாடக சட்டசபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. ஆனால், இறுதிச் சுற்றுப் பேச்சு வார்த்தைக்குப் பிறகு நடுவர் மன்றத்தில் தன்னிலை விளக்கம் கொடுத்து நியாயம் கோரியிருக்கிறது அந்த அரசு!

'நடுவர் மன்றத் தீர்ப்பு, தான் விரும்பும் வகையில் அமைந்தால் நல்லது; இல்லாவிட்டால் சட்ட சபை தீர்மானத்தைச் சுட்டிக்காட்டி தீர்ப்புக்குப் பணிய மறுத்து விடலாம்' என்கிற நயவஞ்சக திட்டத்துடன் கர்நாடக முதல்வர் செயல்படுவதாகவே எண்ண வேண்டியிருக்கிறது.

எத்தனை நடுவர் மன்றங்கள் வந்தாலும் நீதிபதிகள் மாறினாலும் கர்நாடக ஆட்சியாளர்கள் மனம் மாறாவிட்டால் காவிரிப் பிரச்னைக்கு நாம் தீர்வு கண்டுவிட முடியாது.



'தமிழகத்துக்குத் தண்ணீர் தருவது, சொந்த மண்ணான கர்நாடகத்துக்குச் செய்யும் துரோகம்!' என்கிற ஓர் உணர்வுபூர்வமான சிந்தனையை அந்த மாநிலத்தில் உலவ விட்டிருக் கிறார்கள் சில விஷமிகள். அரசியல் காரணங்களுக்காக விதைக்கப்பட்ட இந்த விஷம், அம்மாநிலத்தில் எத்தனை ஆட்சிகள் மாறினாலும் தொடர்ந்து நீடிக்கவே செய்யும்.

இந்தப் பிடிவாத நிலை தளர்ந்து, தமிழகத்தின் உரிமைகள் மதிக்கப்பட வேண்டும் என்பதைத் தான் நடுவர் மன்றத்தில் வாதாடிய பராசரன் மிக அழகாகவும் ஆதாரபூர்வமாகவும் விளக்கியிருக் கிறார்.

இந்தக் கட்டத்தில், தமிழக அரசுடன் இணைந்து குரல் கொடுத்து, உரிமைகளைப் பெற முயற்சி செய்வதே எதிர்க்கட்சிகளுக்கு அழகு. தமிழகத்தில் ஒருமித்து குரல் ஒலித்தால் அதற்கு உள்ள மதிப்பே வேறு. அதனை மறுக்கும் துணிவு மத்திய அரசுக்கு வராது. கர்நாடகமும் வளைந்து கொடுக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்படலாம்.

மாறாக, ஆளும் கட்சியைக் குறைகூறுவதும், ஐக்கிய முன்னணி ஆட்சிக்கு த.மா.காவும் தி.மு.க.வும் ஆதரவு விலக்க வேண்டும் என்று கேட்பதும் எந்தப் பயனையும் இந்தப் பிரச்னையில் தராது.

ஐந்தாண்டு காலம் நீடித்த காங்கிரஸ் ஆட்சியால் என்ன சாதிக்க முடிந்தது? கர்நாடக அரசை, தமிழகத்துக்குத் தண்ணீர் தரும்படி வற்புறுத்த, பிரதமர் நரசிம்மராவால் இயலவில்லையே! நடுவர் மன்றம் பதினொரு டி.எம்.சி. தரும்படி தீர்ப்பளிக்க, ராவ் ஐந்து டி.எம்.சியாவது தரும்படி கெஞ்ச, கர்நாடக அரசு அதனினும் குறைவாகவே வேண்டாவெறுப்புடன் திறந்து விட்டது!

கர்நாடகத்தில், அரசியல் காரணங்களால் மீளா சிக்கலாக்கப்பட்டிருக்கும் ஒரு மக்கள் பிரச்னை, தமிழகத்துக்குள்ளே நிலவும் அரசியல் காழ்ப்புணர்வினால் மேலும் சிக்கலாகிவிடாமல் ஒத்துழைக்கும் கடமை அனைவருக்கும் இருக்கிறது.

“மாநாட்டில் கலந்து கொண்டு மேடையில் அமர்ந்திருக்கும் போது நான் தூங்கி விடுவதாக சில பத்திரிகைகள் புகைப்படங்கள் கூட வெளியிடுகின்றன. ஆனால் அவர்களுக்கு என்ன தெரியும்? அதுபோன்ற சமயங்களில் நான் இந்த நாட்டு ஏழைகளின் நல்வாழ்வு குறித்து ஆழ்ந்த யோசனையில்தான் இருப்பேன்! பத்திரிகைகள் நான் தூங்குவதாக நினைத்துக் கொண்டால் அதற்கு நானா பொறுப்பு?” என்று கேட்டிருக்கிறார் பிரதமர் தேவேகௌடா.

இப்படி ஒரு பேருண்மையை வெளியிட்டதற்காக அவருக்குத் தேசமே கடமைப்பட்டிருக்கிறது. நாமெல்லாம் இதுவரை என்ன நினைத்துக் கொண்டிருந்தோம்? 'பாவம், தேவேகௌடா, இரவு இரண்டு மணி வரை கூட ஃபைல் பார்க்கிறார்; அப்புறம் நரசிம்மராவ் வீட்டுக்குப் போய் கதவு தட்டி அவரை எழுப்பி யோசனை கேட்பதுடன் மந்திரி சபைக்கு ஆதரவும் கோருகிறார்; அப்புறம் வீடு திரும்பிப் படுத்தால் ஒரு மணி நேரமோ, இரண்டு மணி நேரமோதான் தூங்க அவகாசம் கிடைக்கிறது; அதனால்தான் இப்படி பொதுக் கூட்டம், மாநாடு என்றால் தூங்கி வழிகிறார்' என்று எண்ணியிருந்தோம். அது மட்டுமல்ல, 'இப்படி பிரதமர் இரவெல்லாம் கண்விழித்து 22 மணி நேரம் வேலை செய்தால் அவர் உடம்பு என்னத்துக்காகும்' என்று கவலைப்பட்டுக் கொண்டும் இருந்தோம்.

அவ்வாறெல்லாம் நாம் எண்ணியது எவ்வளவு முட்டாள்தனம் என்பது இப்போது புரிந்து போயிற்று. பிரதமர் மாநாடுகளில் பங்கேற்கும் போது தூங்குவதில்லை, சிந்திக்கிறார் என்றால், இரவில் கண்விழித்து ஃபைல் பார்க்கவில்லை, நன்றாகத் தூங்குகிறார் என்றாகிறது. எனவே அவர் உடல்நலத்துக்கு எந்தவிதமான அபாயமும் இல்லை. தொடர்ந்து கொழுகொழுவென்று புஷ்டியாகவே இருப்பார். அப்பாடா! கவலை விட்டது!

பிரதமர் இன்னொன்றும் சொல்லியிருக்கிறார். “நான் பிரதமராக இருக்கும் வரை ஒவ்வொரு மாதமும் நாலைந்து தடவையாவது பெங்களூர் வந்து போவேன். என்னுடைய மாநிலத்துக்கும் அதன் மக்களுக்கும் நான் பட்டிருக்கும் நன்றிக் கடனைத் தீர்ப்பேன். என்னை யார் தடுக்க முடியும்?” என்று கேட்டிருக்கிறார்.

“த்சொ, த்சொ” என்று நாமும் அவருடைய நன்றி உணர்வை வியந்து பாராட்டுகிறோம். “மூப்பனார் மகன் திருமணத்தில் சற்று நேரம் தலைகாட்டி விட்டுப் போவதற்காக ஸ்பெஷல் விமானத்தில், 30 லட்சம், 40 லட்சம் என்று மக்கள் பணத்தை விரயம் பண்ணிக் கொண்டு பிரதமர் சென்னைக்கு வந்து போகத்தான் வேண்டுமா?” என்று கேட்கும் மூடர்களே, இப்போதாவது புரிந்து கொள்ளுங்கள், பிரதமரின் நன்றி உணர்வை! மூப்பனார் இல்லாவிட்டால்



கௌடாவின் ஜோர் ஜோர்!

த.மா.கா. இல்லை. த.மா.கா. இல்லை என்றால் மத்தியில் ஐ.மு. அரசு இல்லை. ஐ.மு. அரசு இல்லையெனில் கௌடா பிரதமரும் இல்லை. ஆக, நன்றி கொன்றவனாகி விட வேண்டாம் என்ற பெருநோக்கோடு பிரதமர் செயல்பட்டதைக் குறைசொல்லலாமோ? அப்படி குறைசொல்லும் நன்றி கெட்டவர்களுக்கு உய்வில்லை உய்வில்லை!

கர்நாடகாவில் ஒரு காப்பிக் கடை திறந்து வைக்க வேண்டுமானாலும் நன்றி உணர்வு பொங்க பிரதமர் ஸ்பெஷல் விமானத்தில் புறப்பட்டு, வரிப்பணத்தை வாரி இறைத்துக் கொண்டு வருவாராக்கும்! யார் கேட்பது? அப்படியே கேட்டாலும் அவர் லட்சியம் பண்ணவா போகிறார்? மெட்ராஸ் பாஷையில் சொல்வதென்றால், 'சர்த்தான் போய்யா! கம்முனு கிட!'

கர்நாடகா மக்கள் மீது பிரதமருக்கு உள்ள பேரன்பு காரணமாகத்தான் பிரதமரான பிறகும் அவரால் முதல்வர் பதவியை மறக்க முடியவில்லை. பெங்களூருக்கு வந்ததுமே அவருக்கு 'முதல்வர் ஜுரம்' வந்து விடுகிறது என்றால் அதற்கு அவர் பொறுப்பல்ல. அன்பும் நன்றி உணர்வும்தான் பொறுப்பு ஏற்க வேண்டும்! கர்நாடகாவின் இன்றைய முதல்வர் ஜே.எச்.பட்டேல் என்பதையே அவர் மறந்து விடுகிறார். தாமேதான் முதல்வர் என்ற எண்ணம் தவிர்க்க முடியாமல் எழ, எல்லா மாநில அதிகாரிகளையும் கூட்டி வைத்து, 'அது ஆச்சா, இது ஆச்சா' என்று கேட்பதுடன், வங்கி உயர் அதிகாரிகளையும் அழைத்து, 'எத்தனையோ திட்டங்கள் இருக்க எதற்கும் கடன் வழங்கா திருந்தால் என்ன அர்த்தம்' என்று அதட்டி தூள் பரத்தி விடுகிறார். இதெல்லாம் தப்பு என்று கருதுகிறவர்கள், இதற்கெல்லாம் காரணம் அவருக்கு உள்ள மாநிலப்பற்றுதான் என்று உணர்வார்களாக. இந்தக் கூட்டங்களின் போது கர்நாடக மந்திரியாகிய தமது மகனையும் பக்கத்தில் வைத்துக் கொள்கிறார்; தமது சொந்தத் தொகுதிக்கு நிறையச் செய்ய வேண்டும் என்று வற்புறுத்துகிறார் என்றால் அதற்குக் காரணம் அவரது தொகுதி மக்களிடம் அவருக்குள்ள நன்றி உணர்வு; மகனிடம் உள்ள பாசம் ஆகியவை தவிர வேறொன்றுமில்லை. "நாளைக்கு தம்முடைய பிரதமர் பதவிக்கு ஆபத்து வந்து விட்டால் மறுபடி கர்நாடகாவுக்குத்தானே வந்தாக வேண்டும்; முதல்வர் பதவியில் அமர்ந்தாக வேண்டுமே" என்ற கவலையெல்லாம் அவருக்குக் கிடையவே கிடையாது. அப்படி ஏதாவது அர்சுப்பிச்சென்று நாம் நினைத்துக் கொண்டால் அதற்குப் பிரதமர் பொறுப்பல்ல.

'முப்பத்தைந்து பேர் அடங்கிய குடும்பத்தோடு ஃபாரின் டூர் போனார்' என்று வேறு சில பத்திரிகைகள் அசட்டுத்தனமாகக் குற்றம்சாட்டுகின்றன. ஸ்பெஷல் பிளேன் என்று தீர்மானமான பிறகு ஜாலியாகக் குடும்பமே அதில் "குடியேற"வில்லை என்றால் பாதி விமானம் காலியாகத்தானே இருக்கும்? ஆனால் இப்போதோ, 'தேசத்தின் பிரதமர் என்ற முறையில் எத்தனையோ பிரச்னைகளுடன் போராடினாலும் அவ்வளவுக்கும் இடையில் குடும்பப்பற்றை விட மாட்டார்; பேரப் பிள்ளைகளுக்கும் விமானத்தினுள்ளே நேரம் ஒதுக்குவார்' என்று பாராட்டலாம். இப்படி எழுதுவதை விட்டு விட்டு 'ஐயோ! மக்கள் வரிப்பணம் பாழாகிறதே' என்று புலம்பினால் என்ன அர்த்தம்?

இப்படி 'வரிப்பணம், வரிப்பணம்' என்று பத்திரிகைகள் அடித்துக் கொள்வதால்தான், தேவேகௌடாவும் பாவம், சில சமயம் மனம் நொந்து போகிறார். அதன் நிகர பலன் என்ன பாருங்கள் : "ஈழத்திலிருந்து அகதிகளாக வந்து பெங்களூரில் பராமரிக்கப்படும் 230 தமிழ்க் குழந்தைகள் பட்டினியால் வாடுகிறார்கள்; ஆவன செய்யுங்கள்" என்று அந்தப் பள்ளி நிர்வாகிகள் அன்றைய முதல்வராக இருந்த தேவேகௌடாவிடம் முறையிட்டும் ஒரு பலனுமில்லை! தேவேகௌடா பிரதமரான பிறகும் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை! இதனால், 'அவருக்கு கர்நாடக மக்களிடம்தான் பிரியம்; இலங்கையிலிருந்து வந்த தமிழ் அகதிக் குழந்தைகளிடம் அக்கறை இல்லை; பட்டினி போட்டு விட்டார்' என்று எண்ணி விடாதீர்கள்.

அவர் தூங்குவதாக நீங்கள் நினைக்கும் போது கூட ஏழை பாழைகளின் வாழ்க்கைத் தரம் உயர தீவிரமான யோசனையில் ஆழ்ந்திருப்பவராக்கும்!

செம்பியன்



• பார்வையாளர்கள்...


சிரப்பு அஞ்சலியாக

ஓர் இரவு நாடகத்தைப் பார்த்த அமரர் கல்கி, அண்ணாவுடன் கருத்து வேறுபாடு கொண்டிருந்தாலும், ஒரு நாடகாசிரியர் என்கிற முறையில் அவரது திறமையை வியந்தார். அந்த நாடகத்துக்கு ஒரு முறை தலைமை தாங்கி, அண்ணாவை பெர்னார்ட் ஷாவுக்கு நிகரான நாடகாசிரியர் என்று மனம் விட்டுப் பாராட்டினார். அந்த நிகழ்ச்சியை நேரில் கண்டவர் பேராசிரியர் அன்பழகன். அமரர் கல்கி நினைவுதின நிகழ்ச்சியில் அவர் தலைமையுரையாற்றியபோது, அந்தச் சம்பவத்தை நினைவு கூர்ந்தார். மாற்றான்தோட்டத்து மல்லிகையை அங்கீகரிக்கும் அதே பண்பாட்டின் தொடர்ச்சியாகத்தான் அமைந்தது கல்வியமைச்சரின் உரை.

"கல்கியோடு பல கொள்கை மாறுபாடுகள் உடையவன்தான் நானும்..." என்று ஆரம்பித்தார் அமைச்சர். தாம் பச்சையப்பன் கல்லூரியில் பணியாற்றியபோது, கல்கி ஒரு விழா மேடையில் பேச, அப்போது அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தை 'சர்வ கலாட்டா சாலை' என்று அவர் நகைச்சுவையாய்க் குறிப்பிட, அதே மேடையில் தாம் கல்கியின் அக் கருத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்ததைக் குறிப்பிட்டார்... இன்றளவும் பல கருத்து மாறுபாடுகள் தொடர்கின்றன என்றார். ஆயினும், தமது சொற்பொழிவில் கல்கியின் சாதனைகளைச் சரமாகக் கோத்து அமைச்சர் வழங்கியபோது, ஒரு குறுவாழ்க்கை வரலாற்றுச் சித்திரமாகவே அது அமைந்தது!

'தேசிய இயக்கத்தில் சேர்ந்து, திருச்செங்கோடு காந்தி ஆசிரமத்தில் பணியாற்றி, சிறை வாசமும் அனுபவித்தார் கல்கி. ஆனால் தமிழ் அவரை சிறைகொண்டது. எழுத்து மூலம் தேசியத்துக்கும் தமிழுக்கும் பணியாற்றுபவராக முழுமையாக உருவானார். திரு.வி.க.வுடனும் பின்னர் ஆனந்தவிகடனில் வாசனுடனும் சேர்ந்து பத்திரிகைப் பணியில் ஈடுபட்டார். விகடனுக்கு ஒரு தோற்றத்தை ஏற்படுத்திக் கொடுத்தவர். பின்னர் கல்கி இதழைத் தொடங்கி ஓர் எழுத்தாளர் ஓர் ஏட்டை நடத்திக் காட்ட முடியும் என்று திரு.வி.க.வுக்கு அடுத்தபடியாக நிரூபித்தவர் அவர்தான்.

'கலைகளில் மிகுந்த ஈடுபாடு உடையவர். பரதநாட்டியம் உயர்நிலை அடையப் பாடுபட்டவர். கலை விமர்சனங்களை ஒரு கலையாக்கியவர்; தமிழிசைக்குப் புதுவாழ்வு தந்தவர். கலை கலைக்காக என்று இல்லாமல், கலை வாழ்க்கைக்காக என்று உறுதியாக நம்பியவர். அந்த நோக்குடன்தான் அவர் எழுத்துக்களும் அமைந்திருந்தன. இந்தக் கொள்கை போல் வேறு பல கொள்கைகளிலும் ராஜாஜிதான் அவருக்கு ஆசான். ஒரு சக தமிழரை அவர்



• அமைச்சரோடு சுமதி, சுப்பு ஆறுமுகம், அவ்வை நடராஜன் உரையாற்றுகிறார்....

ஒரு சிரிப்பு அஞ்சலி!

தலைவராகக் கொண்டதில் எனக்கு மகிழ்ச்சி. ஏறத்தாழ முப்பத்தைந்து ஆண்டுக் காலம் அவர் எழுத்து செங்கோல் செலுத்தியது.

'எளிமையான வாழ்க்கை முறையை மேற் கொண்டு, தமிழுக்கும், தேசியத்துக்கும், கலைக் கும் காவிரிக்கும் தொண்டாற்றியவர் கல்கி' என்று தம் உரையை முடித்தார் அமைச்சர்.

'பேசும்போது நகைச்சுவையுடன் பேசி விடலாம். அதை எழுத்தில் கொண்டு வருவது கடினம். எழுத அமரும்போது பொதுவாக ஓர் இறுக்கம் வந்து விடும். அதை மீறிக்கொண்டு நகைச்சுவை ததும்ப எழுதுவதற்கு உள்ளம் கலகலப்பாக இருக்க வேண்டும். அப்படி இருந்ததால்தான் கல்கியால் நகைச்சுவை மிளிர எழுத முடிந்தது. எந்த நாளிலும் யாரும் நோகா மலிருக்கும்படி, சிரித்து மகிழும்படியிருப்ப தற்காக அவராக வரவழைத்துக் கொண்ட கலைதான் நகைச்சுவை...' – கல்கியின் நகைச் சுவையை ஆராய்ந்த அவ்வை நடராஜன் அதற்கு ஏராளமான உதாரணங்களை எடுத் துக்காட்டியபோது, மயிலை ஸ்ரீநிவாஸ சாஸ்திரி அரங்கத்தில் கூடியிருந்த கல்கி ரசிகர்கள் தங்களை மறந்து சிரித்து மகிழ்ந்தனர்.

'ஆயிரம் ஆனாலும் மாயவரம் ஆகாது; அதனால்தான் மாயவரம் 'ஆகாது' என்று பலர் ஓடிப் போய் விட்டார்கள்.'

'சிலப்பதிகாரம் உணர்த்திய நீதியின் பய னாகத்தான் பெண்கள் சிலம்பு அணிவதையே நிறுத்தி விட்டார்கள்!'

'Les Miserables' என்கிற நாவல் ஒரு பேருண்மையை உணர்த்துகிறது. ஃப்ரெஞ்சு நாட்டுப் பாதிரிமார்களைப் போல் நம் நாட்டு மதத் தலைவர்களும் மடாதிபதிகளும் பெரும் அபகீர்த்தி உடையவர்கள்!'

என்றெல்லாம் கல்கி துணிந்து நையாண்டி செய்ததை எடுத்துக்காட்டினார் அவ்வை.

ஆழ்வார்க்கடியான் போன்ற பாத்திரங் களின் படைப்பிலும், தலைப்பு சூட்டுவதிலும், ஒரு சொல்லை மாற்றிப் போட்டு நகைச்சுவை சேர்ப்பதிலும் அவருக்கு இருந்த வல்லமையை ஆராய்ந்தார்.

'சிரிப்பையும் சிலிர்ப்பையும் கல்கியால் உண்டாக்க முடிந்திருக்கிறது; சிந்தனையைத் தூண்ட முடிந்திருக்கிறது...' என்று மெய்யான வியப்புணர்வோடு அவ்வை பேசியபோது அவர் குரலே கம்மிப் போயிற்று – உணர்ச்சி மிகுதியால் அல்ல... தொண்டை கட்டிக் கொண்டிருந்ததால்!

சமதி கல்கியின் கதைகளில் ஊடும் பாவுமாக இருக்கும் பெண் விடுதலை சிந்தனைகளை எடுத்துரைத்தார். எந்தவொரு



"கட்சில ஏதோ புரட்சிகரமான தீர்மானம் போட்டிருக்காங்களாமே?"

"ஆமா, தலைவர் மீது வழக்குகள் நடக்கும் ஸ்பெஷல் கோர்ட் கட்டடத்துக்கு இப்ப உள்ள பெயரை மாற்றி தலைவர் பெயரையே சூட்டணும்னு தீர்மானம் போட்டிருக்காங்க!"

– மேலக்கால் கு.செ.

இடத்திலும் இது 'பெண் விடுதலைக்கான பிரசாரம்' என்ற பிரகடனம் இன்றி, கதைப் போக்கோடும் பாத்திர இயல்போடும் அந்தச் சிந்தனைகளை இழைய விட்டிருக்கும் நேர்த்தியைச் சுட்டிக்காட்டினார். அந்த சிந்தனைகளினூடே நகைச்சுவை, சோகம், நையாண்டி, அதிர்ச்சி, எதிர்பாராத திருப்பம் என்று யுக்திகளும் பல்சுவைகளும் வெளிப்படும்படி செய்த ஆற்றலைக் குறிப்பிட்டார்.

தியாக பூமியின் சாவித்திரி தன் கணவனுக்கு ஜீவனாம்சம் தருவதாகச் சொல்லும் அமரத்துவம் பெற்றுவிட்ட உரையாடல்; கணையாழியின் கனவில் அழகான பெண்ணைக் கண்டு அசடு வழியும் ஆண்கள்; கேதாரியின் தாயார் சிறுகதையில் உள்ள சீர்திருத்த வேகம்... என்று பேசி வந்தவர் 'பவானி பி.ஏ.,பி.எல்' கதையைப் படித்தபோது ஏற்பட்ட வியப்பை சிறப்பாகக் குறிப்பிட்டார். அக்கதையில் அமைந்துள்ள நிலைக்களனும் சூழலும் ஐம்பதாண்டுகள் ஆகியும் வழக்குரைஞர் வட்டாரங்களில் தொடர்ந்து நீடிப்பதைக் குறித்து அதிசயித்தார்.

அன்றைய நிகழ்ச்சியில் முடிவாக இடம் பெற்ற சுப்பு ஆறுமுகம் குழுவினரின் 'பாரதி வந்தார்' வில்லுப்பாட்டு நிகழ்ச்சி, ஓர் அரிய காணிக்கையாகவே அமைந்தது.

'வந்தே மாதரம்' என்று மெய்சிலிர்க்க ஆரம்பித்து, 'வாழியவே பல்லாண்டு காலம்' என்று மனம் குவியும்படி முடிக்கும் வரையில், கலை, இலக்கியம், சினிமா, தேசியம், ஆன்மிகம் என்று பல்துறை உலா வந்தனர் சுப்பு ஆறுமுகம் குழுவினர். இடையிடையே அதிர்வேட்டு நகைச்சுவைக் குறிப்புகளை சுப்பு வழங்கிய போது, இந்தச் சிரிப்பஞ்சலியை விட சிறப் பஞ்சலியொன்று அமரர் கல்கிக்கு சமர்ப்பணமாக முடியாது என்கிற எண்ணம் பிறந்தது.

வில்லுப்பாட்டு என்னும் கிராமியக் கலைக்கு அறிஞர்களின், கலா ரசிகர்களின் அங்கீகாரம் கிடைப்பதற்குக் காரணமாயிருந்தவரே கல்கிதான் என்று நெகிழ்ச்சியுடன் குறிப்பிட்டார் சுப்பு ஆறுமுகம். கல்கி அலுவலகத்தில் ஒரு வில்லுப்பாட்டு நிகழ்ச்சிக்கு அமரர் கல்கி ஏற்பாடு செய்ததையும் பிரமுகர்களும் கலைஞர்களும் அதை அனுபவித்து ரசித்ததையும் நினைவுகூர்ந்தார்.

அமரர் கல்கி நினைவு அறக்கட்டளை கடந்த 7.1.97 அன்று நடத்திய இந்த நிகழ்ச்சியில் வரவேற்புரை வழங்கிய நிர்வாக அறங்காவலர் கி. ராஜேந்திரன், அமரர் கல்கி நூற்றாண்டு விழாவையொட்டி யோசனைகள் வரவேற்கப் படுகின்றன என்று கூறியதுடன் தாமே ஒரு யோசனையையும் முன்வைத்தார்.

இயக்குனர் கே. பாலசந்தர், சிவகாமியின் சபதத்தை தொலைக்காட்சித் தொடராக்கத் திட்டமிட்டிருக்கிறார். அத் தொடர் ஒருசேர ஹிந்தியிலும் தமிழிலும் தயாரிக்கப்பட்டு கல்கி நூற்றாண்டில் 52 வாரத் தொடராக ஒளிபரப்பாக முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். இதற்கான முயற்சியில் தொலைக்காட்சியும் தமிழக அரசும் உதவ வேண்டும். இத்திட்டம் நடைமுறையாக இயக்குனர் பாலசந்தருக்கு கல்கி ரசிகர்கள் கடித வேண்டுகோள் அனுப்ப வேண்டும் என்றார்.

கல்கி வாசகர்களும் கூட தங்கள் பங்குக்குக் கடிதங்களை அனுப்பலாம். கல்கி அலுவலக முகவரிக்கு அனுப்பப்படும் கடிதங்கள் இயக்குனர் பாலசந்தரிடம் சேர்ப்பிக்கப்படும்.

- நமது நிருபர்

படங்கள் : **யோகா**



● செல்லுலார் ஃபோன்களிலிருந்து வெளிவரும் ரேடியோ அலைகள், ஆஸ்பத்திரியில் வைக்கப்பட்டுள்ள மருத்துக் கருவிகளின் இயக்கத்தில் மாற்றங்களை ஏற்படுத்தி பிரச்னைகளை உண்டாக்குகிறது என்பதை ஜப்பானில் நடத்தப்பட்ட ஓர் ஆய்வு உறுதி செய்திருக்கிறது. இதனால் நோயாளிகளுக்கு ஏற்படக் கூடிய ஆபத்தை உணர்ந்து, டோக்கியோவில் உள்ள பன்னிரண்டு மருத்துவ நிலையங்கள் செல்லுலார் ஃபோன்களைப் பயன்படுத்துவதையே மொத்தமாகத் தடை செய்து விட்டன!

நன்றி: 'அவேக்'

தகவல்: கு.ரமேஷ்பாபு

தேரோட்டம் 2

வி. கே. ராமசாமி

"யாரடா நீ?" என்று அந்த ஓட்டல் முதலாளி கேட்டதும் எனக்கொரு எண்ணம் தோன்றியது. 'நாம் பொன்னமராவதி போய்ச் சேர, இவரையே உதவி கேட்டால் என்ன?'

தைரியத்தை வரவழைத்துக் கொண்டு, "ஐயா, என் பேர் ராமசாமி. சொந்த ஊர் விருதுப்பட்டி. நாடகத்துல சேரணும்னு ஆசை. அதான் வீட்டுல சொல்லிக்காம ஓடி வந்துட்டேன். இப்ப வாசல்ல எங்கப்பாவும் அண்ணனும் போய்க்கிட்டிருந்தாங்க. அவங்க கண்ணுல பட்டா நான் தொலைஞ்சேன். அதனால தான் உள்ளாற ஓடி ஒளிஞ்சிக்கலாம்னு பார்த்தேன்" என்று உண்மையைச் சொன்னேன்.

அவருக்கு என் மேல் இரக்கம் வந்து விட்டது. "அடடா, சின்னப் பையனா இருக்கியே? இப்படியா வீட்டை விட்டு ஓடி வர்றது? பஸ் 'ஏத்தி விடறேன், வீட்டுக்குப் போயிடறியா?" என்றார்.

இது ஏதடா கதை தலைகீழாகப் போகிறதே என்று பயந்து, "அதெல்லாம் வேண்டாம். எனக்கு நாடகக் கம்பெனிக்குத்தான் போகணும். பொன்னமராவதிக்கு 'எப்படிப் போகணும்னு சொல்லுங்க; அது போதும்" என்றேன் கறாராக.

மேலும் சிறிது நேரம் வாதாடி விட்டு, என்னை மாற்ற முடியாது என்ற முடிவுக்கு வந்து விட்டார் போலும். ஒரு பையனை பஸ் ஸ்டாண்ட் வரை துணைக்கு அனுப்பி, என்னைப் பொன்னமராவதிக்கு பஸ் ஏத்தி விடச் செய்தார்.

ஒருவழியாக நான் அன்று பிற்பகலுக்குள் பாலகானசபாவின் முகாமை அடைந்து, என் சின்னம்மா மகனைச் சந்தித்தேன். அவர் உதவியுடன் பொன்னுசாமிப் பிள்ளையைச் சந்தித்து, என் விருப்பத்தைச் சொன்னேன். 'பையன் துறுதுறுப்பாக இருக்கிறானே' என்று நினைத்தாரோ என்னவோ - உடனே சேர்த்துக் கொண்டு விட்டார்கள்!

நாடகக் கம்பெனியில் சேர்ந்தவுடனே என் கவனத்தைக் கவர்ந்த விஷயம் - அங்கிருந்த கலைஞர்களின் சுதந்தரப் போராட்ட வேட்கைதான். அங்கிருந்த அத்தனை பேருக்கும் காந்திதான் கடவுள். அவர்கள் போடுகிற நாடகமெல்லாம் தேசபக்தி நாடகங்கள் தாம்! நாடகங்களின் பெயரே, 'தேசபக்தி', 'கதரின் வெற்றி' இப்படித்தான் இருக்கும். நடிகர்கள், தொழில்நுட்பக் கலைஞர்கள் எல்லோரும் கதர்தான் உடுத்துவார்கள். திரைச் சீலைகள், படுதாக்களெல்லாம் கூடக் கதர்த்துணிதான். நாடகக் கம்பெனியில் கை-ராட்டை நிச்சயம் இருக்கும்.

நாடக வாயிலாக தேச சேவை செய்து வந்தார்கள், அந்தக் காலத்தில்.

"கொக்கு பறக்குதடி பாப்பா - வெள்ளைக் கொக்கு பறக்குதடி பாப்பா" என்று பாட ஆரம்பித்தால் ஜனங்கள் அந்தப் பாடலின் நிஜ அர்த்தம் புரிந்து கொண்டு ஆரவாரம் செய்வார்கள்.



இந்தச் சூழ்நிலை, இயல்பாகவே என்னைக் கவரும்விதமாக அமைந்தது. அதற்கொரு காரணம் உண்டு. அது 1936 - 37-ம் வருடக் காலகட்டம். விருதுப்பட்டியில் என் வீட்டு வாசலில் பெரிய திண்ணை ஒன்று உண்டு.


தினமும் இரவு எட்டு, ஒன்பது மணி ஆனால் போதும். சுமார் ஐம்பது, அறுபது காங்கிரஸ்காரர்கள் அங்கே வந்து கூடி, பேச ஆரம்பிப்பார்கள். நாட்டு நடப்பு, அரசியல்,

சமூக நிலைமைகள், போராட்டங்கள், கதர் இயக்கம், அந்நியத் துணி பகிஷ்கரிப்பு என்று அவர்கள் பேச்சு முழுக்க தேசநலன் சம்பந்தப் பட்டதாகவே இருக்கும்.

ஒருபுறம் உருப்படாதவர்களுடன் ஊர் சுற்றிக் கொண்டிருந்தாலும் இன்னொருபுறம் எனக்கு இவர்களின் பேச்சைக் கேட்பதிலும் ஆர்வம் இருந்தது.

வெள்ளையர்களை எதிர்த்துச் செய்ய வேண்டிய காரியங்கள் பற்றி அவர்கள் பேசு வதைக் கேட்கும்போதெல்லாம், 'நாமும் இவர் கள் போல் சுதந்தரப் போராட்ட வீரனாகி விடலாமா?' என்று தோன்றும்.

ஆனால், அப்போது என்னால் செய்ய முடிந்ததெல்லாம் அவர்களுக்குத் தேவையான வெற்றிலை, பாக்கு, பிற பொருட்கள் வாங்கி வந்து தருவது, தண்ணீர் கொண்டு வந்து தரு வது – இதுபோன்ற சிறு சிறு உபகாரங்கள்



தாம். அதை மிக மகிழ்ச்சியோடு செய்வேன்.

இரவு ஒன்பது மணிக்குத் தொடங்கினார் கள் என்றால், கூட்டம் முடிய, நள்ளிரவு ஒன்று, இரண்டு மணி கூட ஆகிவிடும்.

அந்தக் குழுவிலிருந்த அத்தனை பேரும் அப்போது திருமணம் ஆகாதவர்கள். நாடு சுதந்தரம் அடையும் வரை திருமணமே செய்து கொள்வதில்லை என்று சபதம் மேற்கொண் டிருந்தவர்கள். (அதில் ஒருவர், தம் இருப்பிடத் தையே ஒரு சுடுகாட்டுக்கு அருகில் வைத்துக் கொண்டிருந்தார். சுதந்தரம் அடைந்தால்தான் ஊருக்குள் வருவது என்பது அவர் கொள்கை!)

சுதந்தரம் அடைந்த சமயம் அவர்கள் அத் தனை பேருக்கும் வயதாகி விட்டது. எத்தனை பேர் திருமணம் செய்து கொண்டார்கள் என்று தெரியவில்லை. ஆனால் அந்தத் திண் ணைக் குழுவில் இடம்பெற்றிருந்த ஒரிவரைஞர் மட்டும் சுதந்தரத்துக்குப் பின்னும் திருமணமே செய்து கொள்ளவில்லை. அது எனக்கு நன்றா கவே தெரியும். அவர் – பெருந்தலைவர் காமராஜ்.

எங்கள் வீட்டுத் திண்ணையில் கூடிப் பேசிக் கொண்டிருந்த சமயம் திரு. காமராஜ், பெருந்தலைவர் இல்லை. லட்சக்கணக்கான தமிழ்நாட்டுக் காங்கிரஸ் தொண்டர்களில் அவரும் ஒருவர். அவர் தொண்டராக இருந்த காலத்திலேயே அவரிடம் தொண்டனாகப் பணி யாற்றியவன்; காமராஜின் முதல் தொண்டன் என்பதில் இன்றும் எனக்குப் பெருமிதம் உண்டு.

காமராஜரின் குடும்பமும் எங்கள் குடும்ப மும் மிக நெருங்கின நட்புக் கொண்ட குடும் பங்கள். அண்ணா, அக்கா, மாமா, மதனி என்று உறவு முறையிலேயே கூப்பிட்டுக் கொள்கிற அளவுக்கு நெருக்கம்.

இதனால், சின்னப் பையனாக இருந்தாலும் ஆர்வமுடன் சுதந்தர இயக்க வீரர்களுக்கு உதவுகிற எண்ணமுடன் செயல்பட்ட என்னை, அவருக்கு ரொம்பப் பிடிக்கும். என்னைப் பேர் சொல்லிக் கூப்பிட மாட்டார். "லேய், கந் நன்னன் மவனே!" என்று என் அப்பாவின் பெயர் சொல்லித்தான் கூப்பிடுவார்.

ஒருநாள் வழக்கம் போல் இரவுக் கூட்டம் நடந்து கொண்டிருந்த போது, திடீரென்று திரு. காமராஜ் என்னைக் கூப்பிட்டார் : "லேய், கந்நன்னன் மவனே! உன் சிநேகிதப் பசங் களைக் கூட்டிக்கிட்டு, கொடி பிடிச்சிக்கிட்டு, விடுதலை கோஷம் போட்டு, ஊர் முழுக்க சுத்தி வாரியா?"

நான் பரவசமானேன். இதற்குத்தானே காத் திருந்தேன்?

துளியும் தயங்காமல் "சரிங்கய்யா. நாளைக்கே செஞ்சிடறேன்!" என்றேன் உற்சாகமாக.

"நீ பெரிய ஆளா வருவே, போ!" என்று அவர் வாழ்த்தியது இன்றும் கண்முன் நிற்கிறது.

பின்னாளில், நான் நாடக உலகத்திலிருந்து சினிமாவுக்கு வந்து, பல படங்கள் நடித்து, சொந்தமாக சில படங்கள் கூட எடுத்தபின் ஒருதரம் ஊருக்குப் போயிருந்தபோது, பஸ் ஸ்டாண்டில் திரு. காமராஜின் தாயாரைத் தற் செயலாகச் சந்திக்க நேர்ந்தது. கிட்டே போய் "என்னை ஞாபகம் இருக்காம்மா? நான்தான் கந்தன் செட்டியார் மகன் ராமசாமி" என்றேன்.

மிகவும் வயதான நிலையில் இருந்த அந்த அம்மா, கஷ்டப்பட்டு என்னை ஞாபகப்படுத் திக் கொண்டு, "அடடே, நல்லா இருக்கி யாப்பா? நீதானே சினிமாவுக்குப் போனவன்? இப்ப எங்கே இருக்கே?" என்று கேட்டார்.

"மெட்ராஸ்ல இருக்கேம்மா."

"மெட்ராஸ்லேயா? அங்கல்ல எம்மவனும் இருக்கான்! மெட்ராஸுல நீ எங்கே இருக்கே?"

"மாம்பலத்தில்" என்றேன்.

"சரியாப் போச்சு. நம்ம பையன் காமராஜு அங்கதானே இருக்கான்? நீ அப்பப்ப போயி அவனை எட்டி எட்டிப் பாத்துக்கலாமில்லே? உறவுக்காரங்க, தெரிஞ்சவங்க யாருமே கிடை

யாதேப்பா அவன் கூட?" என்று அந்த அம்மா கேட்டபோது நான் சிரிப்பைக் கட்டுப்படுத்த ரொம்பக் கஷ்டப்பட்டேன். அப்போது திரு. காமராஜ் அவர்கள், தமிழ்நாட்டின் முதலமைச்சர்!

இந்த நிகழ்ச்சியைப் பின்பொரு சமயம் நான் காமராஜ் அவர்களிடம் சொல்ல வேண்டி நேர்ந்தது.

சாரதா ஸ்டூடியோவில் ஏதோ ஒரு படம் பார்த்துவிட்டு நானும் சிவாஜி கணேசனும் ஏ.எல். சீனிவாசனும் திரும்பி வந்து கொண்டிருந்தோம்.

அப்போது திரு. காமராஜ் அவர்கள் எதிரே வர, சிவாஜியும் ஏ.எல்.எஸ்ஸும் "ராமசாமி, நீங்க காமராஜோட அம்மாவை சந்திச்ச சம்பவத்தை அவர்கிட்ட சொல்லுங்க!" என்றார்கள். நான் வேண்டாம் என்று மறுக்க, "அட, சொல்லப்பா!" என்று திரு. காமராஜே கேட்கவும், நான் 'அவரை எட்டி எட்டிப் பார்த்துக் கொள்ளச் சொன்னதை'த் தயங்கித் தயங்கிச் சொன்னேன்.

திரு. காமராஜ் தம் வழக்கமான புன்னகை சிந்தியபடி, "அம்மாவுக்கு எம்மேல் அத்தனை பாசம், தெரிஞ்சுதா?" என்று சொல்லி, போய் விட்டார்.

திரு. காமராஜ் அவர்களின் அன்புக்கு நான் பாத்திரமானதன் காரணம், என் தந்தை. அவர் சேர்த்து வைத்த பெயர். ஊரில் மரியாதைக்குரியவர்களில் அவர் ஒருவர்.

எங்களுடையது பணக்காரக் குடும்பம் இல்லைதான். ஆனால் ஏழைமையெல்லாம் கிடையாது. சாப்பாட்டுக்குப் பஞ்சமே இல்லாத குடும்பம். தினசரி குடும்ப உறுப்பினர்கள் சாப்பிடுவது தவிர வீதியில் போகிற, வருகிறவர்களில் ஒரு பத்து பேருக்காவது எங்கள் வீட்டில் உணவு நடக்கும்! யாரும் வராவிட்டால் இழுத்து வைத்தாவது சாப்பாடு போடுவார் என் அப்பா.

இதனால் சுற்றியுள்ள பதினெட்டுப்பட்டி கிராமத்தவருக்கும் எங்கள் குடும்பம் பற்றித் தெரியும். அப்படிப்பட்ட குடும்பத்திலிருந்து ஓடிவந்து இப்படி நாடகக் கம்பெனியில் சேர்ந்து விட்டேனே என்கிற கவலையெல்லாம் எனக்கு இல்லை. ரொம்ப உற்சாகமாகத்தான் இருந்தேன்.

உற்சாகத்துக்கு இன்னொரு காரணம், நான் சேர்ந்த முதல் நாளே எனக்கொரு 'ரோல்' கிடைத்ததுதான்! பாலபார்ட் என்பார்கள். பையன் வேஷம்.

அன்று பொன்னமராவதியில் எங்கள் குழு நடத்த இருந்த நாடகம், பவளக்கொடி. அப்போது சினிமாவில் கொடிகட்டிப் பறந்த, அன்றைய 'சூப்பர் ஸ்டார்' எம்.கே. தியாகராஜ பாகவதர் நடிக்கவிருந்த நாடகம் அது.

பாகவதர் எங்கள் கம்பெனி நடிகர் இல்லை. அவர் சினிமா ஸ்டார். ஆனால் அவரைக் கூப்பிட்டு, நடிக்க வைக்க என்ன அவசியம்?

அதற்கொரு காரணம் இருந்தது. ஓர் ஊரில் நாடகக்குழு முகாம் இட்டு, நாடகங்கள் நடத்தினால் வசூலாகக் கூடிய தொகை, அவரவருக்குப் பிரித்துக் கொடுக்கச் சரியாக இருக்கும். மேல் செலவுகளுக்குக் காணாது.

ஓரிடத்திலிருந்து, மற்றோர் ஊருக்கு கேம்ப்பை மாற்ற வேண்டுமென்றால் நிறைய



செலவாகும். செட், நகைகள், மேக் அப் உபகரணங்கள், ஆடை அணிகள் இவற்றைப் பெட்டியில் அடைத்து லாரியில் ஏற்றி, நடிகர்களுக்கு அவரவர் வசதிப்படி பஸ், ரயிலில் ஏற்றி அனுப்ப, மறு இடம் போய் கேம்ப் போட நிறைய பணம் தேவைப்படும். கம்பெனி நாடகங்களின் வசூல் இதற்குக் காணாது.

அதனால்தான் பிரபல நட்சத்திரங்களைக் கூட்டி வந்து நடிக்க வைப்பார்கள். அதற்குச் சிறப்பாக விளம்பரங்கள் செய்வார்கள். இந்த மாதிரி நாடகங்களுக்கே 'ஸ்பெஷல் நாடகம்' என்றுதான் பெயர்.

அந்த வகையில், யதார்த்தம் பொன்னுசாமிப் பிள்ளை, ஸ்பெஷல் நாடகம் போட விரும்பி, சென்னையிலிருந்து பாகவதரை வரவழைத்திருந்தார். முன்னதாகவே சில நாட்களாக விளம்பரமெல்லாம் பிரமாதமாக நடந்து கொண்டிருக்க, எனக்கு உள்ளூர மகிழ்ச்சி.

நான் வேலைக்குச் சேர்ந்த முதல் நாள் - முதல் நாடகமே ஸ்பெஷல் நாடகமாக அமைந்து விட்டது! அதுவும் எம்.கே.டி. பாகவதர் ஹீரோவாக நடிக்கிற நாடகத்தில் எனக்கொரு பாலபார்ட் வேஷமென்றால் சும்மாவா?

நான் என்னை மறந்த நிலையில் இருந்தேன். உற்சாகமும் எதிர்பார்ப்பும் பரவசமும் போட்டி போட, நாடகம் எப்போது தொடங்கும் என்று காத்திருக்க -

முதல் நாள் மதுரைக்கு என்னைத் தேடி வந்த என் அப்பா, எப்படியோ விஷயம் கேள்விப்பட்டு, பொன்னமராவதிக்கும் வந்து விட்டார்.

(தொடரும்)

சென்ற வாரம்....

இட்லி சுட்டுவிற்கும் மந்தா கிழவியின் பேத்தி பானு. ஏழைமையிலும் படித்து வக்கீலாகும் லட்சியத்தில் செயல்படும் மோகன்ராமைக் காதலிக்கிறாள். ஜெயிலிலிருந்து வெளியில் வந்த தாமு, மோகன்ராமைத் தாக்குவதற்காகப் பகையுணர்ச்சியோடு செல்கிறான். இதையறிந்த பானு, அவனை முந்திக் கொண்டு மோகன் ராமைத் தேடி ஓடுகிறாள்...

ஆசை நெசவு 2

சேலம் மிக வளர்ந்து விட்டது. மனிதக் கூட்டம், ஆறு, குளம், ஏரி என்று ஒன்றை விட்டு வைக்கவில்லை. எல்லா இடங்களி லும் வீடுகள்!

ஆனாலும் குமரகிரி செல்லும் பாதை யில் பச்சைப்பட்டியைக் கடந்த வயல்வெளிகள் இன்னமும் மாறவில்லை.

வட்டக்கிணறுகளில் வழிய வழிய நீர் இருப்ப தாலோ, இல்லை மலை அடிவாரப் பரப்பு என்ப தாலோ, இயற்கை இன்னமும் கொஞ்சம் ஈரத் தோடு வாழ்ந்து கொண்டிருக்கிறது.

அந்தப் பசுமைக்கு நடுவில் மெத்மெத்தென்ற புல் வரப்பை மிதித்தபடி நடந்து கொண்டோ, இல்லை அதன்மேல் வரப்பை மிதித்தபடி நடந்து கொண்டோ, இல்லை அதன்மேல் ஒருக்களித்துப் படுத்துக் கொண்டோ படிப்பதென்பது சுகமான அனுபவமாக இருக்கிறது.

'தடக் தக்.. தடக் தக்...' சதா இரைச்சலிடும் நெசவுத்தறிகளின் ஓட்ட சப்தம் இங்கு இல்லை.

கிழவிக்கு சும்மா இருக்கவே பிடிக்காது.
இன்று இட்லிக் கடை கிடையாது.
'நல்ல நாளுமதுவமா உன் இட்லிய தின்னு நோக எங்களுக்கென்ன தலையெழுத்தா?' என்று இடக்காகக் கேட்டுவிட்டு சிரித்தபடியே போகின்றவர்களைக் கண்டால் கிழவிக்கும் சிரிப்புதான் வருகிறது.
"உம்.... 'ஆசாரி பண்ணின அவமானத்துக்கு ராசாதி ராசாக்களே தலைகுனிவாங்களாம்' அனாத கிழவிதானேடா... நீங்க இதுவும் பேசுவீங்க – இன்னமும் பேசுவீங்க" என்கிறாள்.

'உமாமகேஸ்வரா... உலகைக் காக்கும் பரம் பொருளே..'– என்று தெரு வீதி விளக்கு கம்பத்தில் இருந்து ஸ்பீக்கரில் திருவிளையாடல் வசனம் கேட்காது... (லட்சத்து எட்டாவது தடவையாக..)

குறிப்பாக நெஞ்சைக்குத்தும் அம்மாவின் இருமல் சப்தம் இங்கே காதில் விழுந்து அவன் பாச நினைப்பை கிளறிப்பார்க்காது. நிம்மதியாகப் படிக்கலாம். இன்னமும் சில பரீட்சைக்கள்தான்.

அதன்பிறகு வக்கீல் பகவந்த ராவ் ஜூனியரா கச் சேர்த்துக் கொள்வதாகக் கூறியிருக்கிறார். பெருமாள் கோயில் பட்டரோ தனது சொந்த வீட்டு வில்லங்க வழக்கைத் தான் முதலில் தீர்த்து தரவேண்டும் என்று துளசியும் தீர்த்தமும் தரும் போது மறவாமல் கூறி வருகிறார்.

நினைக்க நினைக்கச் சுகமாக இருக்கிறது மோகன் ராமுக்கு. படிப்புக்கு நடுவில் ஒரு புல் துண்டை எடுத்துக் கடித்தபடி சற்று ரிலாக்ஸ் ஆகிறான். இரும்பிப் பார்க் கிறான். கிட்டத்தட்ட ஒரு கிலோ மீட்டர் தூரத்தில் நாமமலை தெரிகிறது. ஜனங்கள் ஏறி இறங்குவது தெரிகிறது. அப்படியே நடுவில் வரப்பின் மேல் கானியப்பனும் தெரிகிறான்!

தலையில் பெரிய கூடை– கூடைமேல் இத்தான் சாக்கு போட்டு மூடிய நிலையில் அந்தச் சனியன்!

அவன் அங்கு வரும் முன்பே வாடை மோகன் ராம் மூச்சை நிரட வந்து விட் டது.

அடி வயிற்றை ஒரு குச்சியால் குத்திப் புரட்டிப் போடுவது போல் நாற்றம்.



வாண்ட பழகிப் போன மலைச் சாராயத்தை கூடையில் வைத்து சுத்தரி, வெண்டையை விற்பது போலத் தூக்கிக் கொண்டு வருவது ஒன்றும் சேலம் நகருக்குப் புதிய விஷய மில்லை.

விடலைகள் சரக்கு வீதியில் சுமந்து செல்லப்படும் போது, ''டேய் கரகம் போவுதுடா...'' என்று கூக்குரலிட்டபடி கூடவே ஓடுவார்கள்.

காளியப்பன் கூட அவர்களை விரட்டா மல் பார்த்து சிரிப்பான்.

போலீஸ், கோர்ட், வழக்கு என்று பல விஷயங்களை ஜெயித்த சிரிப்பு அது.

இப்போதும் காளியப்பன் சிரிக்கிறான். மோகன்ராம் வசிக்கும் தெருவுக்குத்தான் சரக் கும் போய்க் கொண்டிருக்கிறது.

ஜவஹர் பாபுவின் தகப்பன் பம்பாய் மணியம்தான் காளியப்பனின் பாஸ்.

சாராயம் விற்றே வீதிக்கு நாலு வீடு வாங்கியவன் இந்த பம்பாய் மணியம். அதில் மோகன் ராமின் பூர்வீக சொத் தான வீடு ஒன்றும் அடக்கம். அவன் அப்பா குடித்தே அழித்த முதல் விஷயம் கூட....

இன்றைக்கெல்லாம் இருந்தால் இரண்டு லட்சம் போகும்.

வெறும் இருபதினாயிரம் கடனுக்கு மணி யத்துக்கு விலையாகப் போய் விட்டது. நினைக் கவே நெருப்பாகச் சுடும் அந்த சங்கதி காளியப் பனைப் பார்க்கவும் மோகன்ராம் நெஞ்சில் மூண்டு எழுகிறது. காளியப்பன் கடந்து போன பின்பும் அணையாமல் எரிந்து கொண்டிருக் கிறது.

இந்த வேளையில்தான் சுசிலா அங்கு காலடி எடுத்து வைக்கிறாள். அதீதமான கொலுசு சப்தத்தோடு...

"டேய் மோகன் நீ இங்கையா இருக்கே?" - என்று கேட்டபடி ஓடி வேறு வருகிறாள். மோகனுக்கும் அவளை அங்கு பார்க்கவும்



பகீர் என்றாகிறது. சங்கடத்துடன் முகத்தைத் திருப்பிக் கொள்கிறான்.

"அங்க உன் அம்மா நெஞ்சு வலில துடிச்சு கிட்டு இருக்காடா'' என்று முகத்தைத் துடைத்தபடி பேசுகிறான்.

அவனுக்குத் தூக்கிவாரிப் போடுகிறது. புத்தகத்தை மடக்கியபடி எழுந்து கொள் கிறான்.

"இதைச் சொல்ல நீ வரணுமா... யாரை யாவது அனுப்பக் கூடாதா?'' – எங்கோ பார்த்தபடி சிடுசிடுவென பேசுபவனைப் பட படப்போடு பார்க்கிறாள் சுசிலா.

"கிளம்புடா அப்புறமா கதை பேசலாம்" என்கிறாள். நடந்தபடி அவனிடம் பேச்சு.

''கதை அல்ல இது. என் அவஸ்தை எனக்குத்தான் தெரியும். உன்னோட என்னை யாராவது பார்த்தா என்ன நினைப்பாங்க?''

''அடுத்தவங்க நினைப்ப பத்தி கவலைப் படற ஆளா நீ... சீக்கிரம் போடா வீட்டுக்கு...''

முறைத்துக் கொண்டே வேட்டியை ஏற்றிக் கட்டிக் கொள்கிறான். விறுவிறுவென்று நடக்க ஆரம்பிக்கிறான். சுசிலா, 'அப்பாடா' என்று பெருமூச்செரிகிறாள். கால் அங்குலம் பவுடர் தோய்ந்த முகத்தை, செயற்கை ரசம் பூசிய உதடை, ஷாம்பூவால் ஒட்டாத கூந்தலை, இறுக்கமான உடல் அமைப்பை, ஹீல்ஸ் செருப்பை என்று அவள் வசம் உள்ள விஷயங் களைப் பார்ப்பவர்களுக்கு அவள் எந்த வகைப் பெண் என்பது தெரிந்து விடும்.

அவள் பார்வை இப்போது நாமமலை செல்லும் திசை நோக்கித் திரும்புகிறது. மூச்சிறைக்க பானு ஓடிவந்து கொண்டிருப் பதும் தெரிகிறது.

சட்டென்று சுசிலாவைப் பார்த்துவிட்டு ஓட்டத்தை நடையாக்கிக் கொண்டு அவள் பம்மிப் பம்மி வருவதைப் பார்க்கவும் சுசிலா விடம் சிரிப்பு.

''எங்கடி இந்தப் பக்கம்?'' – பலமாகவே கேட்கிறாள்.

''சும்மா...''

''சும்மா மோகன்ராமைப் பாக்கலாம்னு... அப்படித்தானே?''

பானு லேசாய் மௌனத் திரைல் கொள்ள, பின்னாலேயே ஆவேச கதியில் தாமு வந்து கொண்டிருந்தான்.

அவனைப் பார்க்கவும் சுசிலாவின் விழி களில் விரிவு.

''இப்பத்தான் வெளிய வந்துருக்கான். அதுக்குள்ற இவனுக்கு உள்ற போகணும்னு ஆசை வந்துடுச்சு – அதான் கிளப்பிகிட்டு வந்துட்டான்.''

விரிந்த விழியோடு சிடுசிடு முகத்தோடு சுசிலா பேசுவது பானுவுக்குப் புரிந்தும் புரியாமலும் போகும்போது அவன் நெருங்கி

விட்டான். உடன் ஜால்ரா படை!

"என்னா கசி... எப்படி இருக்குறே?" - விஸ்தாரமான விசாரிப்போடும் வந்த களைப்போடும் ஆசுவாசிக்கிறான்.

"ஆமா எப்ப வந்தே வெளில...?" - கசிலாவிடமும் ஸ்நேக பாவம்.

"நேத்துதான். போகட்டும் அந்த மோகன் ராம் பயலப் பார்த்தியா?"

"இல்லியே... என்னா விஷயம் தாமு?"

"பயல கொஞ்சம் தட்டி வைக்கணும்."

"எதுக்கு?"

"அது உனக்குத் தேவையில்லாத விஷயம். அப்புறம்... கிராக்கி பிடிக்க மலைப் பக்கம் சுத்தாம இதென்ன இந்த வயக்காட்டு பக்கம்...?"

"அது உனக்கும் தேவையில்லாத விஷயம்." கசிலாவின் பதில் தாமுவை நச்சென்று குட்டுப் பட்ட மாதிரி ஆக்குகிறது. முறைத்தபடி பார்ப்பவன் பானுவையும் அவள் உடன் பார்த்துவிட்டு, "ஆமா இதென்ன இந்தப் பொண்ணும் உன்னை மாதிரி கிராக்கியாயிட்டாளா?" என்று கேட்க, பானு முகம் போன போக்கில் ஏக கலக்கம்.

"அளந்து பேசு தாமு... அது வாழ வேண்டிய பொண்ணு" கசிலாவிடம் சட்டென்று ஆவேச கதி தொற்றுகிறது.

"என்ன நான் தப்பா பேசிட்டேன்? இவ கிழவி மந்தாவோட பேத்திதானே?" - அவனும் விடுகிற மாதிரி இல்லை.

"யாரா இருந்தா உனக்கென்ன?"

"எனக்கென்னவா... திரும்பத் திரும்ப சீறுனா எப்படி? நீ யாருன்னு உனக்கே தெரியும். உன் கூட குடும்பப் பொண்ணுங்க பழக மாட்டாங்கன்னும் தெரியும். கூட்டி கழிச்சு பாரு... நான் சொன்னதுல என்ன தப்பு? அதோட இது பிறப்புலயும் தெளிவு கிடையாது. அம்மாதான் நம்ம சாதிக்காரி. அப்பன் ஒரு முஸ்லீம். இப்ப ரெண்டு பேருமே உசுரோடையும் இல்ல. இந்த நிலையில இவ வயித்தைக் கழுவிக்கணும்னா வேற வழி?"

பானு அதற்கு மேல் அவன் பேச்சைக் கேட்கப் பிடிக்காமல் அங்கிருந்து ஓட ஆரம்பித்தாள். நெஞ்சில் இடி விழுந்த மாதிரி கலங்கியபடி அவள் ஓடுவதைப் பார்க்கும் கசிலாவுக்குப் பரிதாபமாக இருக்கிறது.

"பாவி... உன் நாக்குல தீயை வைக்க. அந்தப் பொண்ணு மனசுல நெருப்ப அள்ளி கொட்டிட்டியேடா! அது செத்தாலும் சாகும். ஆனா என்னை மாதிரி மட்டும் ஆகாதுடா... ஆகவே ஆகாது..."


"ஆக்கி காட்டிட்டா?" - தாமு எந்த அடிப் படையில் இப்படிக் கேட்கிறான் என்று தெரியவில்லை. இனியும் பேசக்கூடாது என்ற முடிவுக்கு வந்தவளாக விறுவிறுவென்று அங்கிருந்து அகல ஆரம்பித்தாள்.



"டாக்டர் எனக்கு ஞாபக மறதி அதிகமா போச்சு."

"அப்படின்னு சொல்லித்தான் கால் மணி நேரத்திற்கு முன்னாடி என்கிட்ட ட்ரீட்மெண்ட் பண்ணிக்கிட்டு போனீங்களே, மறந்துட்டீங்களா?"

- பா. ஜெயக்குமார்



"ஏங்க! எனக்கு ஒரு நெக்லஸ் வாங்கித் தரீங்களா? கூலி இல்லை; சேதாரம் இல்லை, 'கல்' கட்டணமில்லை."

"அதெல்லாம் சரி! என்கிட்ட பணம் இல்லை!"


- ஜூலி



"என்னங்க இது. நடமாடும் ஃபைனான்ஸ் கம்பெனியா? புதுசா இருக்கே?"

"ஓடிப்போக வசதியா இருக்குமே!"

- பாலு



சில அடி தூரம் சென்றவள் நின்று அவனை ஒருமுறை முறைத்துவிட்டு சொல்கிறாள்.

"மோகன்ராம் இங்கதான் இருந்தான். ஒரு பொய்ய சொல்லி நான்தான் அவனை வீட்டுக்கு அனுப்பி வெச்சேன். உன்னைத் தொட்டு அவன் கை அசிங்கமாயிடக் கூடாதுன்னுதான் இப்படி செஞ்சேன். இந்த சாமர்த்தியத்தை பானு விஷயத்துலயும் காட்ட எனக்குத் தெரியாம இல்லை. திருந்தி வாழுற வழியைப் பாரு. முண்டா தட்டிட்டு திரும்ப ஜெயிலுக்குப் போயிடாதே..." சுசிலா பேச்சு அவனை அப்படியே கட்டிப் போடுகிறது. புழுங்க விடுகிறது.

மகாலட்சுமி இராட்டை சுற்றிக் கொண்டிருந்தாள். திருவட்டத்து வெள்ளி ஜரிகை இராட்டையின் தார்க்குச்சியில் காதோரம் பறக்கும் வண்டு போல் சப்தமிட்டபடி ஏறிக் கொண்டிருந்தது. 'ரொய்ங்ங்ங... ரொய்ங்ங்ங..'

வேகமாக வீட்டினுள் நுழையும் மோகன்ராம் அந்தக் காட்சியைப் பார்த்து அதிசயிக்கிறான்.

"அம்மா என்ன இது? உனக்கு நெஞ்சு வலின்னாங்களே?" - கேள்வியோடு அவள் அருகே சென்று குறையாத பதட்டத்தோடு அமருகிறான்.

"எனக்கு நெஞ்சு வலியா - யாருடா சொன்னது?"

"சுசிலா."

"அவளா?" - மிக மிக சாவதானமாகக் கேட்டு விட்டு திரும்ப இராட்டையை சுழற்ற ஆரம்பிக்கிறாள் மகாலட்சுமி.

"என்னம்மா அவளாங்கறே?"

"ஆமாடா... அவ சொன்னா ஏதாவது சரியான காரணம் இருக்கும். நீ போய் வேலையைப் பார்."

"சரியான காரணமா? என்னம்மா சொல்றே?"

"ஆமா நீ மலைக்குப் போகலையா - ஊரே போயிருக்கேடா?"

"நீ பேச்ச மாத்தாதே! அந்த சுசிலா எதுக்கு இப்படிச் சொன்னா?"

"என்கிட்ட கேட்டா... போய் அவகிட்டையே கேளு..."

மோகன்ராம் அம்மாவை வெறிக்கிறான். ஏதோ ஒரு வகையில் ஏமாற்றப்பட்ட மாதிரி ஒரு இனம் தெரியாத வேதனை.

"தோ பார்... அவ எப்படிப்பட்ட பொண்ணுன்னு நான் சொல்லத் தேவையில்லை. அவளைப் பாக்கறதே பாவம்னு நினைக்கறவன் நான். இதுல அவ நம்ம குடும்ப விஷயத்துல இந்த மாதிரி தலையிட்டு ஏதாவது விளையாட்டு பண்ணிக்கிட்டு திரிஞ்சா நான் சும்மா விட மாட்டேன். ஆமா..."

நிஜமான கோபத்தோடு புத்தகத்தை தறிமேடையில் பதவிசாக வைத்துவிட்டு வீதியில் இறங்க ஆரம்பிக்கிறான் மோகன்ராம்.

> ● புகழ் பெருகுவது பதவி வருவதற்காக!
> பதவி வருவது புகழ் போவதற்காக!
> – கண்ணதாசன்
> தகவல் : எஸ்.எஸ். பூங்கதிர்

குண்டும் குழியுமான வீதி.

எப்போதோ போட்ட தார்ச்சாலை முற்றிலும் தொலைந்த நிலை. பார்த்துத்தான் நடக்க வேண்டும். வீதிக்காரர்களுக்கு அது அநிச்சையாகவே கைவரும். ஆனாலும் அவர்களுக்கும் சவாலான விஷயம் தெரு நாய்கள்! அதிலும் ஒரு வாலில்லாத செம்பழுப்பு நாட்டு நாய் ஒன்று ஏகப்பட்ட பேரை பிடுங்கிக் குதறியிருக்கிறது. அதற்கு யாரும் அந்த வீதி வழியே சப்தம் போட்டபடி போகக் கூடாது. ஒரு ஸ்கூட்டர்காரர் தெரியாத்தனமாக வீதிப் பக்கம் வந்து அதனிடம் கடிபட்டு ஓடின கதைதான் தற்போது வீதியின் பிரதான சிரிப்பம்சமான பேச்சு.

அதிலும் இராத்திரியில் ராட்சஸனின் வாக்கிங் ஸ்டிக் போல் தலை வளைந்து நிற்கும் எரியாத விளக்குக் கம்பத்துக்குக் கீழே பார்த்து நடக்க வேண்டும். ஏனென்றால் கம்பத்தின் ஓரமாகக் குழிபறித்து கதகதப்பாகப் படுத்திருக்கும் தெரு நாய்களின் பட்டா பூமி அது.

நாய்கள் மட்டுமா? சாக்கடைப் பன்றிகளையும் கோழிகளையும் மறந்தால் எப்படி?

இத்தனையோடு நகரின் ஐம்பது தியேட்டர் போஸ்டர்களுக்கும் இடம்கொடுத்திருக்கும் வீட்டு முகப்புச் சுவர்கள்.

சலிப்போடு சகலத்தையும் பார்த்தபடி நடக்கிறான். வீதியே வெறிச்சிட்டுக் கிடக்கிறது. ஒரு பாதி பேர் நாம மலைக்கும் மறு பாதி பேர் சினிமா தியேட்டருக்குமாகப் போய் அடங்கி விட்டிருக்கிறார்கள்.

தொண்டு கிழங்கள் மட்டுமே வீடுகளில் காவலாக...

ஊரில் டீ குடிக்கக் கூட ஒரு கடை இருக்காது.

இந்நிலையில் எங்கே கிளம்பி விட்டோம்? கோபத்தோடு நோக்கமில்லாமல் கிளம்பி விட்டது அவனுக்குள் உரைக்கும்போதுதான் அந்தக் காட்சி அவன் கண்ணில் படுகிறது. பகீர் உணர்வு கவ்வித் திருக - ஐய்யய்யோ!

(தொடரும்)

படித்ததில் பிடித்தது :



ஓர் அரிய தொகுப்பு...

'சில புத்தகங்கள் சுவை பார்க்க, சில புத்தகங்கள் விழுங்க, சில புத்தகங்கள் கரைத்துக் குடிக்க' என்று ஆங்கிலத்தில் ஒரு பழமொழி சொல்வார்கள். சில புத்தகங்கள் இம் மூன்றும் அல்லாமல் ஒரு 'mystique' அனுபவம் தந்து பரவசத்தில் ஆழ்த்த...

பெ. சு. மணி அவர்கள் எழுதியுள்ள நீண்ட ஆய்வு முன்னுரையோடு கூடிய 'வ.வே.சு. ஐயரின் கம்பராமாயணக் கட்டுரைகள்' என்ற நூலை இந்த நான்காவது ரகத்தில்தான் சேர்க்க வேண்டும்.

முதல் பரவசம் - வ.வே.சு. ஐயர் வாழ்க்கையின் முக்கிய நிகழ்ச்சிகள் என்று ஒரு பகுதியை இணைத்திருப்பது. 1910 மார்ச் 10 - லண்டனில் 'தனிநபர் பயங்கரவாதம் புரட்சியின் முதற்கட்டம்' என்று அவர் பிரகடனம் செய்தது, 1911-இல் இந்தியாவில், வாஞ்சிநாதனுக்கு துப்பாக்கி சுடும் பயிற்சி கொடுத்தது, அதே வருடம் மே மாதம் மேடம் காமா அனுப்பிய பிரௌனிங் பிஸ்டலை, வ.வே.சு. ஐயர் வாஞ்சிநாதன் வசம் ஒப்படைத்தது, பிரிட்டிஷ் ஒற்றர்களை சர்தார்ஜி வேடம் போட்டு ஏமாற்றி, புதுச்சேரி வந்தது... என்று சாகசமும் துணிச்சலும் நிறைந்த தேசபக்தரின் வாழ்வு 1925 ஜூன் 3 அன்று பாபநாசம் அருவியில் 'ஏன்' என்று தெரியாமலே விழுந்து, முடிந்து போனது (மகள் சுபத்ராவைக் காப்பாற்றும் முயற்சியிலும் இருக்கலாம்) வரையிலான சுருக்கமான குறிப்புகள்.

இதே மனிதரின் இன்னொரு முகம்தான், ஒன்பது மாத பெல்லாரி சிறைவாழ்விலும் பிறகும் கம்பனில் தோய்ந்து, 'உலக காப்பியக் கர்த்தாக்கள் அனைவரை விடவும் கம்பனே மேம்பட்டவன்' என்று ஆராய்ச்சியின் மூலம் நிறுவியது. மற்றும் செய்யுள்களின் பதங்களை சந்தி பிரித்து, தேவையில்லாதவை என்று தோன்றியவற்றை நீக்கி, சுருக்கமாக கம்பராமாயணத்தை பட்புதுப்பிக்க அவர் செய்த முயற்சி.

("1399 பாடல்கள் உள்ள பாலகாண்டத்திலிருந்து 545 பாடல்களைத் திரட்டி, குறிப்புரையுடன் ஒரு புத்தகத்தை 1917-ல் ஐயர் வெளியிட்டார். அத்துடன் சரி. அயோத்தியா காண்டம் வெளிவரவில்லை. யாராவது உள்ளங் குழைந்து அரும்பாடுபட்டு நூல் வெளியிட முற்பட்டால் அவரை மறுபடி அந்தப் பாதையில் விடுவார்களா அருமைத் தமிழர்கள்?")

இந்த முயற்சிக்கு எதிராகப் பெரும் கோஷங்கள் எழுந்தபோது வ.வெ.சு. ஐயர் அவற்றைத் திறமையாகவும் பணிவாகவும் சமாளித்த விதம் இருக்கிறதே... ஒரு சாம்பிள் பாருங்கள் :

பா. ஆதிமூர்த்தி என்பவர் 'ஐயரின் மேற்படிப் பதிப்பு தமிழின் மரணத்துக்கு வழி காட்டுகிறது' என்று எழுதிவிட்டார். ஐயரின் பதில் :

'நமது நாட்டில் அறிவுடையவர்களில் பெரும்பாலோர் தமிழை திரஸ்கரித்து மேனாட்டு பாஷைகளையே கற்று, அவைகளையே சுவைத்துக் கொண்டு வருகையில் இதுபோன்ற சுருக்கம் அவர்களைத் தங்கள் பாஷைகளிலுள்ள மகா காவியத்தையும் பார்க்காமலிருக்கச் சரியான காரணமில்லை என்று நினைக்கும்படி செய்யும். தமிழில் ஆழ்ந்திருப்பவர்களுக்குக் கூட பாலிலிருந்து வெண்ணெயைத் திரட்டி எடுப்பது போல மிகவும் அரிய செய்யுள்களைத் தனியே திரட்டி வைப்பதில் அதிருப்தி ஏற்பட நியாயமில்லை. ஆகையால் இப்பதிப்பு அறிவாளிகளில் ஒரு சாரார் தமிழைப் படிக்காமல் நிறுத்துவதைத் தடுப்பதற்கென்றே பிறந்திருப்பதால் தமிழின் இளமையை மறுபடி கொண்டு வருவதற்காகவே உதவி புரியும் என நம்புகிறேன்!' - இவற்றையெல்லாம் இந்தக் கட்டுரைத் தொகுப்பில் காண முடிகிறது. ஐயர் எழுதின சுவாரசியமான

கடிதங்கள் சிலவும் உண்டு.

வ.வே.சு. ஐயரின் கவிதைக் கான டெஃபனிஷன் நம்மைப் புல்லரிக்க வைக்கிறது. 'மகோன்னதமான கவிதையின் லக்ஷணத்தைச் சுருக்கமாகச் சொல்லுவதானால் அது மனிதனுடைய அறிவை விவகார உலகத்தினின்று தட்டி எழுப்பி அதற்கு அகண்ட உணர்ச்சியை உண்டாக்க வேண்டியது என்பதே.'

கம்பனின் சிறப்பை ஐயர் வர்ணிப்பதே மேற்சொன்ன அவரின் இலக்கணத்திற்கு பொருந்தும் ஒரு கவிதைதான்!

'மற்ற கவிஞர்களை படத்திலும் அரண்மனை மண்டபச் சுவர்களிலும் சித்திரம் எழுதுபவர்களாகப் பாவித்தால், கம்பனை வானமாகிற முகட்டையே தன் ஓவியத் தொழிலுக்கு இடமாகக் கொண்டு ஆஜானுபாகுவான சித்திரங்களை வரைகிறவனாகக் கொள்ள வேண்டும். கம்பனின் கவிதையானது பல்லவச் சிற்பிகளின் பெரிய வீச்சையும், சாளுக்கியச் சிற்பிகளின் சிற்றுளி வேலையையும், மொகலாயர் காலத்துச் சின்னஞ்சிறு சித்திரம் வரைபவர்களின் கை நயத்தையும் ஒருங்கே ஞாபகத்துக்குக் கொண்டு வரக்கூடியதாக இருக்கிறது. நினைத்துப் பார்த்தால் வேறு ஒரு கவியினிடத்திலும் இத்தனை வேறுபட்ட அருங்குணங்கள் இந்த அளவுக்கு அகப்படாது என்று தோன்றுகிறது!'

வ.வே.சு. ஐயரின் multi dimensional personalityயை வெளிக்கொண்டு வரும் முயற்சியில் பெரும் வெற்றி பெற்றிருக்கிறது இந்தப் புத்தகம். தேடித் தேடி கம்பனில் ஆழ்ந்து 'கவிதையின் வரம்பைக் காட்டும் மகா வாக்கியங்கள்' என்று கம்பனை ஏத்திய இந்த விசித்திர மனிதரை கிட்டத்தட்ட தமிழகம் மறந்து போய் விட்டது. நினைவுபடுத்திய பெ.சு. மணிக்கு நன்றி சொல்ல வேண்டும்.

– **பாரதி பாஸ்கர்**

வ.வே.சு. ஐயரின் கம்பராமாயணக் கட்டுரைகள்/ பெ.சு. மணி/பூங்கொடி பதிப்பகம், 14, சித்திரக்குளம் மேற்கு வீதி, சென்னை – 4/ ரூ.60.00

பார்வைக்கு வந்தவை

● **இந்துதர்மம்/சோ/அல்லயன்ஸ் கம்பெனி, 244, ராமகிருஷ்ணா மடம் சாலை, சென்னை – 4/ரூ. 40.00**

காஞ்சிப் பெரியவர் ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சுவாமிகளின் அருளுரைகளிலிருந்து திரட்டிய முத்துக்கள்.

● **அரும்புகளுக்கு ஒரு அரசின் கதை/அ.வெற்றிவேலன்/கங்கை புத்தக நிலையம், சென்னை – 17/ரூ. 25.00**

பதிப்பகத்துறையில் சாதனைகள் படைத்த வானதி திருநாவுக்கரசின் வாழ்க்கை வரலாறு. குழந்தைகளுக்காக எழுதப்பட்டுள்ளது.

● **இசைமேதை இளையராஜா/பரிவன் ஜெயராமன்/கங்கை பதிப்பகம், சென்னை – 17/ ரூ. 20.00**

இசையமைப்பாளர் இளையராஜாவைப் பாடல்களில் பாராட்டுகிறார் ஆசிரியர்.

● **கறுப்பு மொழி/அறிவழகன்/தஞ்சை வெளிப் பதிப்பகம், தே. பழவங்குடி, ஓட்டிமேடு – அ.தி., விருத்தாசலம் – 606 103/ரூ. 20.00**

மாப்பிள்ளைக்கு
தாலி தோஷம்
அறுபட்டது
வாழைக்குருத்து.
– தனித் கவிதைகள்.

● **பெருமைமிகு பெண்மை/டாக்டர். ஆர். எ. சுப்பிரமணியன்/ஸ்ரீ செந்தில் பதிப்பகம், 78-எ. காங்கிரஸ் ஹவுஸ் ரோடு, புதுப்பேட்டை, குடியாத்தம் – 632 602./ரூ. 24.00.**

பெண்மையின் சிறப்புகளை உயர்த்திக் கூறும் கட்டுரைகள்.

● **உரிமைக்குக் குரல் கொடுப்போம்/கே. எஸ். ராதாகிருஷ்ணன்/நக்கீரன் பதிப்பகம், 11, 5-வது தெரு, ஆழ்வார் பேட்டை, சென்னை – 18/ரூ. 50.**

சிந்திக்கத் தூண்டும் சமூக, அரசியல் விமர்சனப் பார்வை கொண்ட கட்டுரைகள்.

● **சித்தர்கள் பரிபாஷை அகராதி/டாக்டர் இரா. மாணிக்கவாசகம்/திருமகள் நிலையம், 55, வெங்கட்நாராயணா சாலை, சென்னை – 17/ரூ. 60.00**

பதினெண் சித்தர்கள் தம் பாடல்களில், மறைமுகமாகக் கருத்துக்களை உணர்த்தக் கையாண்ட பல சொற்களும் அவற்றின் அர்த்தங்களும். (கடல் – பிறவி; ரத்தவீசம் – மாதுளை; இரத்தம் – குங்குமப்பூ; மீனாட்சிமைந்தன் – வீரம்.)

● **இந்த நாளில் அன்று/என். ஸ்ரீனிவாசன்/அல்லயன்ஸ் கம்பெனி, சென்னை – 4./ரூ. 150.00**

ஜனவரி முதல் ஜூன் வரை ஒவ்வொரு தினமும், உலகம் முழுதும் நடந்த முக்கியமான சம்பவங்களின் தொகுப்பு. குவிஸ் மாஸ்டர்களுக்கு மிக உபயோகமான நூல். புதிய விஷயங்கள் தெரிந்து கொள்வதில் ஆர்வமுள்ள ஏனையோருக்கும்.

பன்னீர்ப் பூக்களின் மிருதுவான வாசனை தவழ்ந்து வந்து கொண்டிருந்தது. பால் நிலவோடு போட்டி போட்டுக் கொண்டு நட்சத்திரங்கள் மின்னிச் சிரித்தன. மல்லாந்து மொட்டை மாடியில் படுத்துக் கொண்டிருந்த சுகன்யா, வானத்தை ரசித்தாள். நீண்ட புடைவைத் தலைப்பை சும்மாடு போல் சுருட்டி தலைக்குசரமாக்கியிருந்தாள். கட்டாந்தரை முதுகுக்கும் இடுப்புக்கும் இதமாக இருந்தது. கூந்தல் வழியே சிலுசிலுவென்று காற்று புகுந்து கழுத்தை வருடியது. உள்ளுக்குள் பாட்டு கிளம்பி உதடு வரை வந்தது. ஹாஸ்டலில் இருக்கும்போது சசி கற்றுத் தந்த தமிழ்ப் பாட்டு.

"அன்பு நிறைந்த நெஞ்சம் தனிலே, அறிவு நிறைந்திருக்கும்..."

ஒரு வரி பாடிவிட்டு நிறுத்திக் கொண்டாள் சுகன்யா. 'நிலவால் குளிர்ந்த இரவே சங்கீதமாய் கவிந்திருக்க, தனியே பாட்டு எதற்கு...?'

ஸ்ரீராமுக்கும் அவளுக்கும் எப்போதும் சண்டை வருவது இந்த விஷயத்தில்தான். இதைப் போன்ற அரிய இரவுகளில் இந்த மொட்டை மாடி சுகம் கிடைக்கப்பெற்றால், மௌனமாகி விடுவான் அவன். கேள்விகளுக்கும் பரிமாற்றங்களுக்குமான கனிந்த நேரமாக அது அவளுக்குத் தோன்ற, வளவளவென்று வாய் நிறையப் பேசுவாள்.

"கொஞ்சம் நேரம் சும்மா இரேன்..." என்

?

25

ராஜேஷ்குமார்



உள்ளே வரலாமா?

பான். வீம்புக்காகவே பேசிப் பேசி அவளைத் தூண்டினாலும் சிரித்துவிட்டு மௌனமாகி விடுவாள்.

இப்போது, அவனில்லாத இந்தத் தனியிரவில், ஒரு வரி பாடிய கணத்தில்தான் அவனுடைய மௌனத்துக்கும், அமைதி வேட்கைக்கும் அர்த்தம் புரிந்தது.

இயற்கைக்கும் இரவின் அழகுக்கும் செலுத்தும் மரியாதை அந்த மௌனம். பிரபஞ்சப் பேரழகின் முன் வணங்கி நிற்கும் உயர்நிலை.

'ஹாண்ட் பேகை மறந்து வைத்தியநாதன் வீட்டிலேயே வைத்துவிட்டு வந்தது எவ்வளவு நல்லதாய்ப் போயிற்று! வீட்டுக்குள் நுழைய சாவி இல்லாமல் போனதால்தானே இந்த அனுபவம்!' சுகன்யா பன்னீர் மணம் ஏந்திய காற்றை நெஞ்சு நிரம்ப உள்ளிழுத்தாள் மெதுவாக.



வாசல் கேட் ஒலி நாராசமாய் எழுந்து அமைதி குலைத்தது. மெள்ள ஒருக்களித்து எழுந்து மாடிச் சுவரருகே போய் எட்டிப் பார்த்தாள்.

ராமநாதன் உள்ளே வருவது தெருவிளக்கு வெளிச்சத்தில் தெளிவாகத் தெரிந்தது. கையில் அவளுடைய ஹாண்ட் பேகை வைத்திருந்தார்.

வீட்டின் வெளியே பக்கவாட்டிலிருந்த மாடிப்படியிறங்கிப் போனாள் சுகன்யா.

இருண்டு கிடந்த வீட்டின் முன் நின்று கவலையுடன் பார்த்துக் கொண்டிருந்தார் ராமநாதன்.

"அப்பா....!"

"இருக்கியா...?" அவள் குரல் கேட்டதும் கவலை கலைந்து விட்டாலும் இறுக்கமாகவே தொடர்ந்தார். "என்ன பண்ற அங்க - மேல இருட்டுலே...?"

"வீட்டுக்குள்ள போகச் சாவி இல்லை... ஹேண்ட் பேகை மறந்து சேகர் வீட்டுல விட்டுட்டு வந்துட்டேன்."

"இந்தா..." கைப்பையை அவர் நீட்ட, அதிலிருந்து சாவி எடுத்து வாசல் கதவைத் திறந்து விளக்குகளைப் போட்டாள்.

"வாங்கப்பா..."

உள்ளே வந்தவர், நேருக்கு நேராக அவளைப் பார்த்துப் பேசினார்.

"என்னதான் நினைச்சுண்டிருக்கே நீ உன் மனசுல...?"

சுகன்யா பதில் பேசாமல் அவரைப் பார்த்தாள்.

"உன் பாட்டுக்கு வசந்தியையும் சேகரையும் பிளேன்ல ஏத்தி பெங்களூருக்கு அனுப்பிச்சுட்டியாம்.... சம்பந்தியானா இந்த க்ஷணம் அங்கே போய் அவங்களைத் தேடிக் கண்டு பிடிங்கறார்..."

"அவர் 'காணவில்லை'ன்னு விளம்பரம் கொடுத்தா கூட அவங்களைக் கண்டுபிடிக்க முடியாது... போய்ச் சொல்லுங்க!"

"போதும் உன் துடுக்கு! என்ன பிரச்னையானாலும் எங்கிட்டேயோ, அம்மாகிட்டேயோ சொல்லித் தொலைச்சிருக்கலாமில்லையா...? ஏன் இப்படி எங்க குடும்ப மானத்தைக் கப்பலேத்தறே..."

சட்டென்று அந்நியப்படுத்தி விட்டார். 'எங்க குடும்பம்' என்ற சொல்லில் அப்படியே வெளியே நிறுத்தி வைத்து விட்டார்.

துவண்டு உட்கார்ந்தாள் சுகன்யா. ராமநாதன் இன்னமும் நின்று கொண்டேயிருந்தார்.

"இதோ பாருங்க அப்பா... உங்களை அப்பான்னு இனிமேலும் கூப்பிடறதா வேண்டாமான்னு சந்தேகம் வரது... பயம் வரது..."

அவர் பதில் பேசவில்லை.

"சரி... ஸ்ரீராம் அப்பா... அப்படிச் சொல்றதுதான் பொருத்தம். வசந்தியோட பிரச்னை என்னங்கறது உங்களுக்குத் தெரிஞ்சிருக்க நியாயமில்லை..."

"சைக்கியாட்ரிஸ்ட்கிட்டே வேற கூட்டிண்டு போனியாமே...?"

"அது ரொம்ப நாசூக்காகக் கையாள வேண்டிய விஷயம். நாலு பேருக்குத் தெரிஞ்சு தலைக்குத் தலை அறிவுரை சொல்லி, ஆத்திரப்பட்டு வசந்திக்கு உதவி பண்ணியிருக்க முடியாது..."

"அப்படியொரு முடிவுக்கு நீயா எப்படி வரலாம்...? பெத்தவா நாங்க இருக்கோம். எங்களை விட அக்கறையா யாரு கவனிப்பா....?"

"அப்படி உங்க பொண்ணு நினைச்சிருந்தா தன்னோட பிரச்னையை உங்ககிட்டேயோ, அவ அம்மாகிட்டேயோதானே எடுத்துச் சொல்லியிருப்பா...? எங்கிட்டே வந்து கல்யாணத்தன்னிக்கு ராத்திரி 'எனக்கு பயமாயிருக்கு மன்னி... இது வேண்டாம்...'னு அழுதிருப்பாளா...?"

ராமநாதன் அதிர்ந்து போனார்.

"நீ சொல்லவேயில்லையே..."

"சொல்ல வேண்டாம்னு தீர்மானிச்சதுனாலதான் சொல்லலை..."

"ஸ்ரீராம் கூட ஒண்ணும் சொல்லலையே..."

"அவருக்குத் தெரியாது...."

அவர் மேலும் அதிர்ச்சியுற்றார்.

"உங்ககிட்டே சொல்ல வேண்டாம்னு வசந்தியே கேட்டுண்டா. சேகரும் தன்னோட அப்பா அம்மாகிட்டே சொல்லலைன்னு உறுதி கொடுத்தான்..... கடைசியில எல்லாம் கண்ணாடிப் பாத்திரம் மாதிரி உடைஞ்சு போச்சு."

ராமநாதன் எதுவும் பேசாமல் கவலையுடன் பார்த்தார்.

"ரொம்ப கஷ்டப்பட்டு இரண்டு பேரையும் சம்மதிக்க வைச்சு டாக்டர் மகேஷ்கிட்டே அழைச்சுட்டுப் போயி, அவரோட கவுன்சலிங்னாலே அவங்களுக்குக் கொஞ்சம் பளு குறைஞ்சு வர சமயத்துல திரும்பவும் பிரச்னை... டாக்டர் வீட்டு வாசல்ல சேகரோட ஃப்ரெண்ட் ஒருத்தன் பார்த்துட்டான்."

"எல்லாத்தையும் சம்பந்தி சொன்னார்.... எதுக்கு உண்மையை மறைச்சீங்கன்னு சண்டைக்கு வந்தார்..."

"என்னையும் ரொம்ப திட்டினார் உங்க சம்பந்தி – இங்கிலீஷ்ல...! என்னவோ சொன்னாரே... ஆங்! 'impertinent upstart' அப்படின்னார். அந்தக் கோபத்துலதான் ஹாண்ட்

தங்க நகை பரிசு!

இந்த இருபத்தாறு வாரத் தொடர், ஒவ்வொரு வாரமும் ஒவ்வொரு கதாசிரியர் பெயரில் வெளியாகி வருகிறது; ஆனால் அவர்களுள் ஒரே ஒரு நபர்தான் இதை எழுதி வருகிறார். தொடரை எழுதியவர் யார் என்பதைக் கண்டுபிடிப்பது உங்கள்

பேகை எடுக்காம வந்துட்டேன். கொஞ்ச நேரம் லோகல் லைப்ரரியில போய் உட்கார்ந்துட்டு வீடு வந்தப்புறம்தான் சாவி ஞாபகம் வந்தது. சரி, இருட்டிப் போச்சு; காலையில குமார்கிட்டே சொல்லி எடுத்துட்டு வரச் சொல்லலாம்னு மொட்டை மாடியிலே படுத்திருந்தேன். நீங்களே எடுத்துட்டு வந்துட்டீங்க ஹாண்ட் பேகை..."

"ஏன்மா இருட்டுல தனியா இருந்தே. அங்கே வந்திருக்கலாமில்லையா நீ..." – மாமனார் சொல்லவில்லை. சிறிது நேரம் யோசித்து விட்டுப் பேசினார். "சம்பந்தி இடத்துல நான் இருந்திருந்தாலும் அப்படித்தான் திட்டியிருப்பேன்.... சரி இப்பவாவது சொல்லு, அவங்க எங்க போயிருக்காங்க...?"

"உண்மையிலே எனக்கே தெரியாது. பெங்களூர்லே ஃப்ரெண்ட்ஸ்கிட்டே சொல்லி தங்கற ஏற்பாடெல்லாம் செய்திருக்கேன்..."

"பெங்களூர் போன் பண்ணிக் கேட்டுச் சொல்லு..."

"வேண்டாம்..."

"இல்லை, எனக்குத் தெரியணும். நான் வசந்திகிட்டே பேசணும். சம்பந்திக்குப் பதில் சொல்லணும்.... கேட்டுச் சொல்லு..."

"அது மட்டும் என்னால முடியாது."

"என்ன...?"

"எனக்கு சேகர்-வசந்தி தங்கற இடம் தெரியவந்தாலும் உங்ககிட்டே சொல்ல மாட்டேன்.... சொல்ல மாட்டேன்...!" சுகன்யா கோபமாகப் பேசினாள்.

"சுகன்யா, என்னை அனாவசியமா ரொம்ப பேச வைக்கற நீ! வசந்தி, நாங்க பார்த்து வளர்த்த பொண்ணு. அவளை எங்களுக்குத் தெரியாதா...? நேத்து வந்த உனக்குத்தான் அவ மனசு புரியும்ங்கற மாதிரி நீ நடந்துக்கிட்டதை ஒத்துக்கவே முடியாது."

"ரொம்ப நல்லது. சினிமா டயலாக் மாதிரி பேசி நீங்க என்னை வெட்டி விட்டது ரொம்ப சௌகரியமாய்ப் போச்சு. எப்போ நான் உங்கள்ள ஒருத்தியில்லைன்னு ஆயிடுச்சோ, அப்பவே உங்களுக்கு நான் சிறப்பு மரியாதை தரவேண்டியது அவசியமில்லைன்னும் ஆயிடுது! அதனால நானும் உங்க மனசு புண்படுமோன்ற கவலையில்லாமல் பேசலாம்...."

"ஐயோ! இனிமேல்தான் என் மனசு புண்படணுமாக்கும்..." ராமநாதன் அழுதுவிடு

சாமர்த்தியம். அடுத்த வாரம் வரை காத்திருந்து, அந்த இதழில் வெளியாகும் கூப்பனில் விடை எழுதி அனுப்புங்கள். சரியான விடைக்கு, தங்க நகை பரிசு! பலர் சரியாக எழுதினால் குலுக்கலில் ஒருவரே பரிசு பெறுவார். ஆசிரியர் தீர்ப்பே இறுதி.

வார் போலிருந்தது.

அவருடைய உச்சகட்ட உணர்ச்சி வசப்பட்ட நிலை சுகன்யாவின் ஆத்திரத்தையே மேலும் தூண்டியது.

"ஒண்ணு தெரிஞ்சுக்கங்க ஸார்..." அப்போதும் மிஸ்டர் ராமநாதன் என்று அழைக்கும் துணிவு வரவில்லை.

குரலை உயர்த்தாமல் உறுதியாகத் தொடர்ந்தாள் : "உங்ககிட்டே வந்து இதுமாதிரி பிரச்னைன்னு சொல்லியிருந்தா உடனே அந்தப் பொண்ணை கூப்பிட்டுத் திட்டியிருப்பீங்க. ஸ்ரீராம் அம்மாவும் ஏகமா கோபிச்சுக்கிட்டு 'அனுசரணையா நடந்துக்கத் தெரியாத பொண்ணு ஒரு பொண்ணா!'ன்னு வசந்தியோட குற்றஉணர்வை இன்னும் அதிகமாக்கியிருப்பாங்க... எல்லாருமா சேர்ந்து ஒரு அரும்பைப் பூக்க விடாம கசக்கற மாதிரி அந்தப் பெண்ணோட மனசைக் கசக்கிப் போட்டிருப்பீங்க..."

பேச்சற்றுப் போனார் ராமநாதன். அது சுகன்யாவுக்கு வசதியாய் அமைந்தது.

"வசந்தி உங்களுக்குப் பெண்ணாய் இருக்கலாம். சேகர் வைத்தியநாதனுடைய பையன் தான்... ஆனா அதனாலேயே எனக்கும் அவங்களுக்கும் தனியா பந்தம் இருக்கக்கூடாதுன்னு நீங்க சட்டம் போட முடியாது! வசந்தி உங்களுக்குப் பொண்ணுன்னா எனக்கு நாத்தனார். உங்க உறவுல இருக்கற அத்தனை உரிமைகளும் எங்க உறவுலயும் உண்டு. அந்த உறவுலயும் உரிமையும் நீங்க தலையிட முடியாது. அட சே! உறவையே விட்டுத் தள்ளுங்க.... ஒரு பொண்ணுக்கு இன்னொரு பொண்ணு காட்ட வேண்டிய ப்ரியம் இது. இதுல குறுக்கிடறதுக்கு நீங்க யாருன்னு நான் கேட்கறேன், இப்போ...?"

ராமநாதன் எழுந்தார். அவர் கண்களில் நீர் பளபளத்தது. சுவரில் தொங்கிய ஸ்ரீராமின் கல்யாண போட்டோவை நெருங்கி உற்றுப் பார்த்தார்.

'அவன் மட்டும் இருந்திருந்தால் இப்படியெல்லாம் சந்திரகோளமாகியிருக்காதோ...?'

அவர் எண்ணத்தை உணர்ந்தது போல் சுகி கோபப்பட்டாள்.

"ஸ்ரீராம் இருந்திருந்தாலும் அவர்கிட்டே இதைப் பத்தி நான் பேசியிருக்க மாட்டேன். எப்ப வசந்திக்கும் சேகருக்கும் வாக்கு குடுத்துட்டேனோ, அவங்களா விரும்பினாலொழிய அதை நான் மீற மாட்டேன். அவங்களா சொல்லியிருந்தா அது வேற விஷயம்."

சுகன்யாவின் தீவிரமும் நல்லெண்ணமும் புரியாமல் இல்லை ராமநாதனுக்கு. போட்டோவைத் தொடர்ந்து முறைத்துக் கொண்டு இருந்தார். மாலையும் கழுத்துமாக அமைதியான கண்களுடன் ஸ்ரீராம்... அவனருகே நின்ற அந்தக் கணத்தை வெளிப்படையாய் ரசித்தபடி சுகன்யா. அனாவசிய கூச்சமோ போலி பவ்யமோ அற்ற அந்தத் தோற்றத்தில் ஒரு புதிய கம்பீரம் இப்போது அவருக்குத் தெரிந்தது. நிழலிலிருந்து பார்வையை அகற்றி நிஜத்தைப் பார்த்தபோதும் அதே கம்பீரம் பிரகாசித்தது.

காலையில் எழுந்தபோதே பசித்தது. வீட்டில் எந்தக் காயும் இல்லை. ரொட்டி கூட இல்லை. குளித்துவிட்டுப் போய் வாங்கி வர வேண்டும்.

நேற்றிரவு குரலுயர்த்தாமல் நியாயம் உணர்த்தியதில் மாமனார் அடங்கி ஆசுவாசமானார். கிளம்பும்போது அவளையும் உடன் வரச் சொல்லி அழைத்தார்.

"ஸ்ரீராம் வரவரைக்கும் அங்கே வந்து இரேன்..."

"வேண்டாம்..."

"என்மா? ரொம்ப கோபிச்சுண்டுட்டேனா...? மனசுல வைச்சுக்காதே... ரொம்ப படபடப்பாயிடுத்து... சம்பந்தி கடுமையா பேசிட்டாரில்லையா...? அதான்..."

"இல்லைப்பா, நான் இங்கயே இருக்கேன்... வீடெல்லாம் சுத்தம் செய்யணும். நிறைய வேலை இருக்கு..."

"எப்ப வேணா வாம்மா..." அழைப்புச் சொல்லிவிட்டுப் போனவரை அனுப்பி வைத்த பிறகு தான் இலேசாக கிலி பிடித்துக் கொண்டது.

இவ்வளவு தன்னம்பிக்கையோடு அடித்துப் பேசி இரண்டு அப்பாக்களையும் சமாளித்தாகி விட்டது. பெங்களூரில் என்ன நடந்திருக்கும்? பத்திரமாய்ப் போய்ச் சேர்ந்திருப்பார்களா? சேகரின் பொறுமை தொடருமா? வசந்தியின் பயம் அகலுமா...?

வலுக்கட்டாயமாய்க் கேள்விகளை மூட்டை கட்டி வைத்துவிட்டு, சமைப்பதற்குச் சோம்பல் கொண்டு, வெறும் மோர் குடித்து விட்டுத் தூங்கினாள்.

அதுதான் காலையில் எழும் நேரத்திலேயே இப்படிப் பசிக்கிறது. கூடவே நேற்றிரவின் கேள்விகளும் மெள்ளச் சுற்றிவர ஆரம்பித்தன.

'இப்படியே பயந்தால் ஆகாது' என மனத்தைத் தேற்றிக் கொண்ட நேரத்தில் பக்கத்து வீட்டு சரோஜா ஜன்னல் வழியே அழைத்தாள் : "சுகி உனக்கு போன் வந்திருக்கு... பெங்களூர் எஸ்.டி.டியாம்..."

(அடுத்த இதழில் முடியும்)






தர்ம சப்தத்தினாலே சொல்லப் படக்கூடியவன் பரமாத்மா. அவன் நடத்திக் காட்டினதெல்லாம் தர்மம் தான். மனிதனாய்ப் பிறந்த நாம் பின் பற்ற வேண்டிய கடமை என்ன என் பதை பரமாத்மா ராமாவதாரத்திலே காட்டியருளினான்.

ஸ்ரீமத் பாகவதத்தில், சுகப்ரும்ம மஹரிஷி இதை விளக்கிச் சொல்லி யிருக்கிறார். பரீக்ஷித்தைப் பார்த்து அவர் இதைப் பேசியிருக்கிறார்.

மனிதனாக ராமன் பிறந்தான் என்று கதை கேட்கும்போது, ராக்ஷஸ வதைக்காகத்தான் அப்படி அவதரித் தான், ராவணனை வதைக்கவே அந்த அவதாரம் என்று எண்ணிக் கொள்கிறோம்.

அது மாத்திரமே காரணம் இல்லை. ராக்ஷஸ வதை என்பது ஒரு வியாஜம். முக்கிய குறிக்கோள்



என்னவென்றால்,

மனிதர்களை சிக்ஷிப்பதற்காக! மனிதருடைய கடமை என்ன...? ஒரு தந்தையாய் இருக்கக்கூடியவர் எப்படி இருக்க வேண்டும்? தாயாராய் இருக்கக்கூடியவர் எப்படி இருக்க வேண்

...ையொன்றுமில்லை

டும்? புத்ரனாய் இருக்கக்கூடியவனின் கடமை என்ன? அதிலே ஜேஷ்டபுத்திரனின் கடமை என்ன...? இளையவர்களாக இருக்கக்கூடியவர்களின் கடமை என்ன...? பந்து மித்திரர்களிடத்திலே நாம் எப்படி இருக்க வேண்டும்? விரோதிகளிடத்திலே எப்படிப் பழக வேண்டும்? இந்த பூமியில் நாம் எப்படி வாழ வேண்டும்? சம தர்மம் என்றால் என்னது? ...இப்படி எல்லாவற்றையும் காட்டி, நாம் செய்ய வேண்டியதைச் செய்து முடித்தோமா என்று யோசிக்க வைக்கிறான்.

திருமலையிலே, பெரிய திருமலை நம்பிகள் என்ற ஆசார்யர் எழுந்தருளியிருந்தார். ராமானுஜருடைய சொந்த மாமா அவர். பஞ்சாசார்ய பதாச்ரயர் என்று ராமானுஜருக்குப் பெயர். ஐந்து ஆசார்யர்களை அணுகி ஒவ்வொருத்தரிடம் ஒவ்வொரு வித்தையை அப்யசித்தார்.

அந்தக் காலத்தில் வித்வான்கள் மிகவும் சிரமப்பட்டு அப்யாஸம் செய்தார்கள். இந்தக் காலத்தில் அவ்வளவு சிரமம் இல்லை. ஏனென்றால் எங்கும் கல்விக்கூடங்கள் நிறைந்திருக்கின்றன. படிக்க வாய்ப்பு உள்ளது. முன்காலத்தில் அப்படி இல்லையே...!

அஹோபில மடத்தில் இஞ்சிமேட்டு ஸ்ரீ அழகிய சிங்கர், காசி வரை நடந்தே சென்று தர்க்கம் பயின்று வந்தார்! எத்தனை சிரமப்பட்டிருக்கிறார் பாருங்கள்! அந்த சிரமம் பிறர் படக்கூடாது என்றுதான் மதுராந்தகத்தில் பாடசாலையை நிறுவப் பண்ணி தர்க்கம் சொல்லிக் கொடுக்க வைத்தார்.


ராமானுஜருக்குத் திரும்பி வருவோம்... மாமாவான பெரிய திருமலை நம்பியிடத்திலே ராமாயணம் கேட்கணும் என்று ஆசைப்பட்டாரல்லவா? திருமலை ஏறிப் போய் அவரைப் பிரார்த்தித்தார்.

பெரிய திருமலை நம்பிகள் உடனே பிடி கொடுக்கவில்லை. 'இப்போ இல்லை; அப்புறமா வா...' என்று சொல்லி அனுப்பி விட்டார்! மீண்டும் அணுகியபோதும் அதே பதில். இப்படி 18 முறை அவரை அலைக்கழித்தார் நம்பிகள். கடைசியாக 'சரி இப்போது சொல்கிறேன்' என்று ஒப்புக் கொண்டார்!

ராமானுஜரின் பொறுமையைப் பாருங்கள்!

முக்கூர் லக்ஷ்மிநரசிம்மாச்சார்யார்

ஒரிருமுறை கேட்டு மறுத்தாலே, 'சரி ஊர் உலகத்தில் இவருக்கு மட்டும்தானா ராமாயணம் தெரியும்?' என்று அலுத்துக் கொண்டு வேறு ஆசார்யரைத் தேடத் தோன்றும். ஆனால் ராமானுஜர் அப்படிச் செய்யவில்லை.





அருள்வாக்கு

ராமாயண-பாரதக் கதைகள் நம் தேச ஜனங்களின் ரத்தத்திலேயே ஊறிப் போனவை.

இந்த இதிஹாஸ படனம் குறைந்து போய்விட்ட இந்த நூறபது, ஐம்பது வருஷத்துக்கு முன்புவரை பாமர ஜனங்கள் உள்பட எல்லோருமே வெளி தேசத்தார் வியக்கும்படியான நல்லொழுக்கங்களோடு யோக்யமாக இருந்து வந்தார்கள் என்றால் அதற்கு முதல் காரணம் ராமாயணமும் பாரதமும்தான். பாரதப் பிரவசனம் விடாமல் ஒவ்வொரு ஊர்க் கோயிலிலும் நடக்க வேண்டும் என்பதற்காகத் தமிழ் ராஜாக்கள் மானியம் கொடுத்து வந்திருக்கிறார்கள். முப்பது, நாற்பது வருஷத்துக்கு முந்தி வரையில் பூசாரி உடுக்கடித்துக் கொண்டு பாரதம் பாடுவதை கேட்கத்தான் ஜனங்கள் கூட்டம் கூட்டமாகப் போவார்கள். அதுதான் அவர்களுக்கு ஸினிமா, டிராமா எல்லாம். ஆனால் இந்த ஸினிமா டிராமாக்களினால் ஒழுக்கத்துக்கு ஏற்பட்டிருக்கிற ஹானிகள் இல்லாமல், பாரதக் கதை கேட்டுக் கேட்டே அவர்கள் ஸத்யத்துக்கு பயந்துக்கொண்டு, சூது இல்லாமல் நல்ல வாழ்க்கை நெறியில் போனார்கள். பாரதத்துக்கு இந்தத் தமிழ் தேசத்திலிருக்கிற மதிப்பு, கிராம தேவதை ஆலயத்தை, ''திரௌபதை அம்மன் கோயில்'' என்று சொல்வதிலிருந்து தெரிகிறது.

ஒவ்வொரு பெரிய புராணத்தையும் எடுத்துக் கொண்டால் அதிலே தனித்தனிக் கதையாக அநேகம் இருக்கும். ஒவ்வொரு கதையும் ஒரு குறிப்பிட்ட தர்மத்தை வலியுறுத்துவதாக இருக்கும். இதிஹாஸத்திலோ, ஆரம்பத்திலிருந்து கடைசி வரை ஒரே கதையாக இருக்கும். நடுவே வேறு பல உபாக்யானங்கள் வந்தாலும் கூட அவையும் பிரதானமாக ஒரு கதையைச் சுற்றியே இருக்கும். புராணத்தில் ஒவ்வொரு கதை, ஒவ்வொரு தர்மத்தைச் சொல்கிறது என்றால் இதிஹாஸத்தின் மையமான கதையில் ஸகல தர்மங்களும் நடத்திக் காட்டப்பட்டிருக்கும். உதாரணமாக, தனிக்கதைகளான ஹரிச்சந்திர உபாக்யானம் ஸத்யம் என்ற ஒரு தர்மத்தை மட்டும் சொல்கிறது; சிரவணன் கதை பித்ரு பக்தியை மட்டும் சொல்கிறது; நளாயினி கதை கற்பை மட்டும் சொல்கிறது; ரந்தி தேவன் கதை பரமத் தியாகத்தை, கருணையை மாத்திரம் சொல்கிறது. ஆனால் ராமர், பஞ்ச பாண்டவர்கள் இவர்களுடைய வாழ்க்கையைச் சுற்றி அமைந்த இதிஹாஸங்களில் இவர்கள் ஸகல தர்மங்களையும் நடத்திக் காட்டுகிறார்கள்.

- ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகள்.

அந்த ஆசார்யரிடத்திலேதான் கேட்கணும் என்று காத்திருந்தார்.

பெரியவர்களும் பார்த்துத்தான் உபதேசம் பண்ணுவார்கள். 'சிந்தாமல் கொள்ளக்கூடிய கலமா? அதற்குத் தரிக்கும் சக்தி இருக்கிறதா?' என்று பார்த்துத்தான் உபதேசம் பண்ணுவார்கள். குரங்கு கையில் பூமாலை கொடுப்பது போல் காரியம் செய்ய மாட்டார்கள்.

நல்ல தாகம் இருக்கலாம்... அதற்காக மண்டை ஓட்டிலே தீர்த்தம் கொடுத்தால் குடிக்கப் பிடிக்குமா? இல்லையே! பசுவின் பாலைக் கறந்து நாய்த் தோலிலே வைத்தால் பருகப் பிடிக்குமா...! அப்படித்தான் கல்வியும். ஆசார்யர்கள் பாத்திரம் அறிந்துதான் புகட்டுவார்கள். நாற்சந்தியில் அவல் பொறியை அவிழ்த்துக் கொட்டியதுபோல் வித்யையை வீணடிக்க மாட்டார்கள்.

சாஸ்திரக்ஞர்கள் பேசும்போது, 'உத்தம சிஷ்யனின் குணம் என்ன...' என்பதைச் சொல்லியிருக்கிறார்கள்.

தைல புத்தி உடையவன் உத்தம சிஷ்யன் என்று சொல்வார்கள்.

ஒரு பாத்திரத்தில் தீர்த்தத்தை வைத்துக் கொண்டு மேலே எண்ணெய்யை விட்டோமானால், தீர்த்தத்தின் மேலே அந்த எண்ணெய் அப்படியே பரவும். அந்த மாதிரி, கேட்ட விஷயத்தை நன்றாகப் புரிந்து கொண்டு, இதரர்களுக்கும் அதைச் சொல்லித் தெளிவிப்பான் அவன். அதைத்தான் தைல (எண்ணெய்) புத்தி என்பது.

இன்னொரு வகை உண்டு. கிரத புத்தி. நெய்யை வழித்து ஒரு பாத்திரத்தில் ஜலத்தில் போட்டோமானால், அந்த நெய் அப்படியே மிதக்கும்! அந்த மாதிரி ஆசார்யர் இடத்திலே கேட்ட விஷயத்தை தான் மட்டும் அனுபவிப்பவர் இந்த கிரதபுத்திக்காரர். யாராவது கேட்டால் ஒன்றும் சொல்லத் தெரியாது. உள்ளுக்குள்ளே ஏகப்பட்ட விஷயங்கள் ஓடும்! ஆனால் இதரர்களுக்குச் சொல்லித் தெளிவைப் பிறப்பிக்கும்படியான சக்தி இராது.

இன்னொரு புத்தி கம்பள புத்தி! கீழே துப்பட்டி, ஜமக்காளமெல்லாம் போட்டிருக்கிறது... காலட்சேபமெல்லாம் முடிந்த பிறகு ஒருத்தர் அதை எடுத்து மடித்து வைப்பார் அல்லவா...? அவர் வெறுமனே மடிக்காமல், தும்பு தூசி போகிறதுக்காக ஒரு உதறு உதறி மடிப்பார். கம்பள புத்திக்காரர் அப்படித்தான் - ஆசார்யரிடம் வரும்போது ஒன்றும் தெரியாமல் வருவார். திரும்பிப் போகும் போதும் உதறிய துப்பட்டி போல், ஒன்றும் ஒட்டிக் கொள்ளாமல் போய் விடுவார்!

ஒரு விஷயமும் புத்தியில் ஏறாமல் இருப்பவரும் உண்டு - களிமண் புத்திக்காரர்!

இந்த நால்வகையினருள் தைல புத்திக்

காரர்களைக் கண்டால் ஆசார்யர்களுக்கு ரொம்பப் ப்ரியம். கன்றுக்குட்டியினிடத்திலே பகவானது எப்படி வாத்ஸல்யத்தோடு அன்பைப் பொழிகிறதோ அந்த மாதிரி கங்கா பிரவாகமாகப் பொழிவார்கள்.

பதினெட்டு முறை ராமானுஜரை சோதித்த ஆசார்யர் அவர் பொறுமையைக் கண்டு அப்படித்தான் பொழிந்தார்.

இவ்வளவு பொறுமை இருந்தால்தான் ராமாயணம் புரியும்! திடீரென்று கேட்டுக் கொள்கிற விஷயமில்லை அது.

பதினெட்டு முறையும் பொறுமை காத்த ராமானுஜருக்கு பதினெட்டு வித அர்த்தங்களை ராமாயணத்துக்குச் சொன்னார் பெரிய திருமலை நம்பிகள்!

இப்படிப்பட்ட ராமாயணத்தில் தன்னைத் தெளிவாக பரமாத்மா காட்டிக் கொடுத்திருக்கிறான். பரப்ரும்மமான தன்னை ஆச்ரயிக்கும்படி சொல்கிறான். 'தான் வெறும் மனிதனல்ல.... மனித வேஷத்தில் வந்திருப்பவன்' என்று உணர்த்தினான்.

அவன் மனித வேஷம் போட்டிருந்ததால் அதற்கேற்ப நடிக்க வேண்டியதாய்ப் போயிற்று! தான் பரமாத்மா என்பது அவனுக்குத் தெரியாமல் போய் விடுமா? ஒரு நாடகத்தில் ஒரு புருஷன், ஸ்த்ரீ வேஷம் போட்டுக் கொள்கிறான் - ஸ்த்ரீயைப் போன்ற நடை, உடை, பாவனை அவனுக்கு... அதனால், தான் புருஷன் என்பது தெரியாமல் போய் விடுமா?! அந்த மாதிரி பரமாத்மாவும் உயர்ந்த ரீதியில், தான் பரமாத்மா என்பது தெரிந்தே மனித ரூபம் தரித்தான்.

'சரி, இந்தப் பரமாத்மாவை அடைவதற்கு என்ன வழி?' என்று கேட்டால், அதற்கும் அவன் செயலிலேயே பதில் கிடைக்கிறது.

பரமாத்மா எடுத்துக் கொண்ட காரியம் என்ன...? துஷ்ட : சந்துஷ்டியை - மகிழ்ச்சியைத் தந்த காரியம் - ஹிதம் (மனத்துக்கு இதம்) ஏற்படுத்திய காரியம் - அந்தக் காரியம்...? சரணாகத ரக்ஷணம் என்னும் காரியம்!

ராமானுஜ நூற்றந்தாதி என்று ஒரு நூல். உயர்ந்த பிரபன்ன காயத்ரி என்று அதற்குப் பெயர். திருவரங்கத்தமுதனார் என்கிற ஆசார்யர், ராமானுஜர் வாழ்ந்த காலத்திலேயே இதை எழுதி, அவர் எதிரிலேயே வாசித்துக் காண்பித்தார். அவ்வளவு உயர்ந்தது!

ப்ரபன்னர்கள் நித்தியம் இதை ஒரு தடவை சொல்ல வேண்டும் என்று பெரியவர்கள் விதித்திருக்கிறார்கள். அந்த நூலிலே, 'படி கொண்ட கீர்த்தி ராமாயணமென்னும் பக்தி வெள்ளம்' என்று குறிப்பிட்டிருக்கிறது.

பக்திப் பிரவாகம் ராமாயணம்! எங்கு தொட்டாலும் பக்தி இருக்கிறது; எங்கு தொட்டாலும் சரணாகதி இருக்கிறது.

அதனால்தான் பகவானே பக்தி, சரணாகதியின் மேன்மைகளைப் பேசினான். பவித்ரம் இதம் உத்தமம் என்றான் பகவத் கீதையில் பரமாத்மா!

'என்னுடைய திருவடியில் கைங்கர்யம் பண்ணணும் என்கிற எண்ணம் யாருக்கு இருக்கிறதோ... அவர்கள் என்னை அடையலாம். என்னை அடைய இரண்டு வழிகள் உண்டு.

'முதல் வழி : பக்தி மார்கம் - இது ரொம்ப உயர்ந்தது. உத்தமமானது, பவித்ரமானது. அப்படிப்பட்ட பக்தி யோகத்தால் நான் அடையத் தகுந்தவன்...

'அப்படியில்லையென்றால், 'பிரபத்யாவா' - சரணாகதியினாலே அடையத் தகுந்தவன் நான். இவை தவிர மற்றதனால் என்னை அடைய முடியாது!' என்று பகவானே பேசியிருக்கிறான்.

ஆகையினாலே, நம்மைப் போல மோக்ஷ நோன்பில்லாதவர்கள், சாமான்யர்களாய் இருக்கக்கூடியவர்களுக்காகவே பரமாத்மா சொன்னான் :

"என் திருவடியைப் பற்று... பற்றினால், பக்தி யோகம் கொடுக்கக்கூடிய சந்தோஷத்தை உனக்கு நான் கொடுப்பேன்..."

பக்தி, சரணாகதி தவிர, ஆராய்ந்து பார்த்தால் இன்னொன்றும் இருக்கிறது ராமாயணத்தில் :

அதுதான் புருஷகாரம். புருஷகாரம் என்றால்...? ஸௌபாக்ய! மஹாலக்ஷ்மி நமக்காக பகவானிடத்திலே பரிந்து பேசுகிறாள்!

(தொடரும்)




"உங்க கொள்ளுத் தாத்தாவுக்கும் நான்தான் ஆபரேஷன் பண்ணினேன். உங்க தாத்தாவுக்கும் நான்தான் பண்ணினேன். உங்க அப்பாவுக்கும் நான்தான் ஆபரேஷன் பண்ணினேன்."

"எங்க குடும்பத்தையே அழிச்சிட்டியேடா பாவி!"

- வெ. ராஜாராமன்


ஒன், ஃபோர்,
எனக்கு ஜாதி மதமெல்லாம் கிடையாது தான்.. ஆனாலும் இந்தக் காதலை ஏத்துக்க முடியாது...
ரிஜிஸ்டர் ஆபீஸ்
ரிஜிஸ்டர் கல்யாணமா? இன்னும் ரிஜிஸ்ட்ரார் வரலையே! வெயிட் பண்ணுங்க..
அவர் வர்றதுக் குள்ளே கல்யாணம் முடிஞ் சாகணும்! நான் அவரோட மகளாச்சே!
ஸ்கூல் டீச்சரைக் காதலிச்சு தப்பாப் போச்சுடா!
ஏன் என்னா ஆச்சு?
சொன்ன பயத்துக்கு பீச்சுக்குப் போகலேன்னா முட்டி போடச் சொல்றாளே!
ஏண்டா, புது மனைவியை அழைச்சுகிட்டு ஜாலியா எங் கேயாவது போயிட்டு வரது தானே!
எங்கே போறது..? காதலிச்சப்போதே எல்லா இடமும் சுத்தியாச்சே!
தமிழாசிரியர்
நீங்க என் பெண்ணை காதலிச்சு திருமணம் செய்து கொள்வதில் எனக்கு ஆட்சேபணையில்லை!.. ஆனால், என் பெண்ணை டார்லிங்னு ஆங்கிலத்தில் கொஞ்சக் கூடாது...



த்ரீ...
எங்க நம்ப காதலைப்பத்தி உங்க அப்பாகிட்டே பேசிட்டீங்களா?
... இவ்வளவு காதல் டயலாக் பேசறீங்களே.. இன்னைய ரிப்பீட்டா? இல்லை.. நாளைய ரிகர்சலா?
நடிகர் சீனாதானா
சொத்துக்காகத்தானே என் பொண்ணைக் காதலிக்கிறே?
பாங்க் மானேஜர்
எங்க புது சேமிப்புத் திட்டம் 'காதலர் ஸ்பெஷல்'! காதலிக்க ஆரம்பிச்சதும் மாதம் ரூ. ஐநூறு கட்டினா கல்யாண செலவுக்கு மொத்தமா பணம் தருவோம்!
ஐயோ!
அதெல்லாமில்லீங்க.. சொத்தையெல்லாம் என் பேருக்கு எழுதி வச்சபிறகும் உங்க பொண்ணைக் காதலிப்பேங்க!

ஊதுவத்தி, ரோஜாமலர், சந்தனப் புகையையும் மீறி ரத்தினசாமியின் உடல் ஒரு மாதிரி கெட்டுப்போன வாசனை வர ஆரம்பித்ததில், அக்கம் பக்கத்து பெரியவர்களைக் கூடிப் பேசி இளையவன் கிரியைகள் பண்ணினால் அதற்கு ஒரு தர்பை மாற்றும் பரிகாரம் இருக்கிறது என்று ஐயர் சொல்ல, எடுத்து விட்டார்கள். "அவன் வந்தால் நான் சொல்லிக் கொள்கிறேன். பல்லாயிரம் மைலில் இருக்கிறான். எப்படி வர முடியும்?" என்றார் பெரியப்பா என்று அழைக்கப்பட்ட தூரத்து உறவுக்காரர்.

"வச்சிரு பார்க்கணும்னு திருப்பித் திருப்பி ட்ரங்க்கால் போட்டு சொன்னானே பெரியப்பா."

"அதெல்லாம் நடைமுறையில் இவ்வளவு தான் சாத்தியம். இது ஒன்னும் அமெரிக்கா இல்லை. இவ்வளவு நேரம் தாங்கினதே பெரிசு. இப்பவே முகம் நீலபலூன் மாதிரி வீங்கிருச்சு".

அவர்கள் காட்டுக்குப் போய் தீயிலிட்டு விட்டுத் திரும்பும்போது வெயில் தணிந்து டெண்டில் ஒலி பெருக்கியில் ஊசி நிரடும் சப்தம் கேட்டு 'அழகிய லைலா' காற்றில் நடுங்கும் போது திருச்சியிலிருந்து டாக்ஸி எடுத்து புழுதித் தோகையுடன் காட்டுக்கே சங்கரலிங்கம் வந்து விட்டான். வேட்டிக்கு மாற்றிக் கொள்ளக்கூட நேரமின்றி கலைந்த தலையும் தளர்ந்த நடையும் நனைந்த வியர்வையும் மூன்று நாள் தாடியுமாக வேற்று கிரகத்திலிருந்து வந்தவன் போல் தோற்றமளித்தான்.

"அப்பாவை எரிச்சுட்டியா தம்பி?" என்ற குரல் நடுங்கியது.

"ஆமாண்ணே! காத்துக் காத்துப் பார்த்தோம். நீங்க எப்ப வருவிங்கன்னு..."

கோபமும் துக்கமும் பொங்க 'நான்தான் போன்ல சொல்லியிருந்தேனே, வச்சிருங்க முக முழி பார்க்கணும்னுட்டு."

"பெரியப்பாதான் எரிச்சுரலாம்னு."

"அய்யோ எம்மேல போடாதப்பா. தீர்மானம் உன்னதுன்னு சொல்லிட்டுத்தானே யோசனை சொன்னேன்."

சங்கரலிங்கம் பாதையிலேயே உட்கார்ந்து தலையைப் பிடித்துக் கொண்டு அழுதான்.

"தம்பி என்ன இது, ரோட்டில் உக்காந்திட்டு. வா வீட்டுக்குப்போகலாம். துரை, அண்ணனை அழைச்சுட்டுப் போப்பா."

"இவர் யாருங்க."

"மூத்த மவன். அமெரிக்காவில வெள்ளைக்காரவங்களுக்கு இங்கிலீசு சொல்லித் தராறு. பெரிய ப்ரொபசரு."

"வெய்ட் பண்ணிருக்கக் கூடாதா? ரெண்டு மணி நேரம்!"

"இல்லைப்பா, நீ உங்கப்பாரை அந்த நிலையில் பார்த்திருந்தா ரொம்ப வருத்தப்பட்டிருப்ப. நீ அமெரிக்கா போனப்ப பார்த்த அப்பா முகமே உனக்கு நினைவில் நிக்கட்டும்னு."

இது யாரு என்பது போல் அவரை நிமிர்ந்து பார்த்தான். நாசி நுனியில் முத்தாகக் கண்ணீர் தொங்கிக் கொண்டிருந்தது.

"பாழாப்போற ஊர்ல ஐஸ் பாக்ஸ் கெடையாதா?"

"திருச்சிலருந்து வரவழைக்கணும். ரொம்ப செலவாகும்?"

"செலவானா என்ன? நான் சம்பாதிக்கலையா? பெரியவரே, எனக்கு அங்கு எத்தினி



சுஜாதா



கத்துக்கு முடை நாற்றம் மூக்கைத் தாக்கியது. இந்த வீட்டில்தான் நள முதல் பதினெட்டு வருஷங்களைக் கழித்திருக்கிறோம் என்பதை நம்பக் கஷ்டமாக இருந்தது.

"அப்பாவை எங்க படுக்கப்போட்டிருந்திங்க?"

துரை பதில் சொல்லத் தயங்க, பெரிய நாயகி "கூடத்தில்தான். ஆர்லிக்ஸ் பாட்டில் எல்லாம் இன்னும் இருக்கு பாருங்க."

"அப்பா படம் எதும் இருக்குதா துரை."

துரைராஜன் சங்கடமாகப் பார்த்து, "போட்டோ எடுக்கலாம்னு திருச்சில ரத்னா ஸ்டுடியோவில சொல்லி வச்சிருந்தேன் அண்ணே. அதுக்குள்ள பொசுக்குன்னு போய்ட்டாரு."

"யு மீன் அவர் போட்டோ ஒண்ணு கூட இல்லையா, நம்ம வீட்டில்?"

"பழைய போட்டோ ஒண்ணு இருக்குது. சின்ன வயசில் எடுத்தது."

"அவரு சி… …?"

"ஆமாம்."

"என்ன மனுசங்கப்பா நீங்க" என்று தலையில் அடித்துக் கொண்டான்.

"அவரு …ஸ்தகமெல்லாம் பரண்ல இருக்குது."

ஏணிபோட்டுப் பரண் மேல் ஏறினான். அட்டைப் பெட்டிகளும் பாத்திரம் கட்டிய சாக்குப் பைகளும் கள்ளிப் பெட்டிகளும் அவன் ஆடிய மரக்குதிரையும், இடையே அப்பாவின் புத்தகங்களும் கிடந்தன. ஒன்றைப் பிரித்துப் பார்த்ததில்–

'பயம், மோகம், கர்வம் துறந்து நாம் யார், எங்குள்ளோம், எப்படியுள்ளோம்?

ஒரு சாதாரணத் தாரகையின் குழந்தைகள்,

ஒரு சாதாரணத் தாரகையின் குழந்தைகள்!

சம்பளம் தெரியுமா. எவ்வளவு பணம் அனுப்பிச்சிருக்கேன் தெரியுமா? இவங்களுக்கு..." என்றான் கோபத்துடன்.

"வெய்ட் பண்ணிருக்கலாமில்லை" என்றார் ஒருவர் மையமாக.

"யோவ் பொத்திக்கிட்டு சும்மாக்கெட. அவங்க பேமிலி வெவகாரம்."

வீட்டிற்குள் நுழையும் போதே சங்கரலிங்

வயசான அறிவுள்ள கிரகத்தின்

பாறை முந்தானையைப்பிடித்துத் தொங்கும்

பிற்பட்ட, சோனிக் குழந்தைகள்

என்பதை அறிவது எத்தனை கடினம்?–

ஆடன்.

சங்கரலிங்கத்துக்கு பிரமிப்பாக இ…

திருச்சி அருகே ஒரு கிராமத்தில் இ…

கொண்டு ஆடனின் கவிதையை …

பெயர்த்திருக்கிறாரா? இத்தனை நாளாக ஆடன் கற்றுத் தந்திருக்கிறேன். இவ்வளவு எளிமையாக மொழி பெயர்க்கத் தோன்றவில்லையே.

"துரை, இந்த மாதிரி புத்தகங்கள் மற்றதெல்லாம் எங்கே?"

"எல்லாம் அங்கதான் இருக்கணும். அவர்தான் படிச்சது, எளுதினது, போதும்னு எல்லாத்தையும் பரண்ல போடச் சொல்லிட்டாரு."

"நம்ம அப்பாவை நாமே சரியாத் தெரிஞ்சுக்கலை துரை."

'கண்ணு தெரியற வரைக்கும் நல்லா படிச்சாரு, எழுதினாரு.'

"கண்ணு போயிருச்சா."

"ஆமாம் கடைசில."

மற்றொரு புத்தகத்தைப் பிரித்தபோது மணி மணி எழுத்துக்கள் கரையான் அரிப்பினால் மணல்போலச் சரிந்தன.

"எப்ப பாத்தாலும், எழுதிக்கிட்டே இருப்பாரு. கடைசி கடைசிலதான் எழுத முடியலை. படிக்க முடியலை. இனிமே என்னடா வாழ்க்கை'ன்னுட்டாரு."

பரணிலிருந்து இறங்கி வந்தான்.

"மாசம் இருநூறு டாலர் அனுப்பிச்சேனே. சோறு போட்டிங்களா இல்லையா?"

"அதெல்லாம் புஷ்டியாத்தான் ஆகாரம் கொடுத்தோம். அது என்ன ஆச்சு... ஆடிப் பண்டிகைக்கு குளிக்கறன்னு என்ன சொல்லியும் கேக்காம தலைல தண்ணியை கொட்டிக்கிட்டாரு. கடைசி காலத்தில் ரொம்பப் பிடிவாதம். அப்பப்ப புகைஞ்சு புகைஞ்சு இருமிக்கிட்டு இருந்தாரு. அப்பால பெரிசாப்போயி புத்தூர் ஆஸ்பத்திரிக்கு கொண்டு போறதுக்குள்ள..."

"இங்க யாரு வைத்தியம் பார்த்தாங்க?"

"பிச்சைப்பிள்ளைதாங்க."

"இங்கிலீஷ் வைத்தியர் யாரும் இல்லையா."

"இந்த ஊர்ல அதெல்லாம் எங்க அண்ணே" என்றான் சங்கடப் பார்வையுடன்.

"மேலும் பிச்சைபிள்ளை நம்ம குடும்பத்துக்கே பரம்பரையா வைத்தியம் பார்த்தவரு"- பெரியநாயகி உள்ளே சென்றாள்.

"அவரை நான் பார்க்கணும்."

"தாராளமா அவரையே கேட்டுப்பாருங்க. என்ன மாதிரி பெரியவரை நாங்க பாத்துக்கிட்டோம்னு."

அறையின் மறைவிலிருந்து பெரிய நாயகியின் குரல் ஒலித்தது.

"காசு பணம் மட்டும் போதுமா, உடல் உழைப்பால சேவை செய்ய ஆளு வேணுமில்லை? பத்து பதினைஞ்சு மாசமா பீவாரி, மூத்திரம் வாரி அதும் கடைசில பைத்தியமே புடிச்சுருச்சு. தலைமாட்டில யாரு ஒண்ணுக்குப் போனதுன்னு திரும்பத் திரும்ப கேட்டுக்கிட்டே இருந்தாரு."

"தலைவரே... யாரையும் எளிதுல நம்ப வேணாம்!"

"என்னய்யா சேதி?"

"நம்ம கட்சில புதுசா 'பினாமிகள் முன்னேற்ற அணி' துவக்கியிருக்காங்க!"

-அம்பைதேவா

சங்கரலிங்கம் தம்பியைப் பார்த்து "பாரு துரை. நான் யாரையும் குறை சொல்லலை. உன் சம்சாரம் தப்பா எண்ணிக்கிட்டு இருக்காங்க. எனக்கு வேண்டியதெல்லாம் அவர் ஞாபகத்துக்கு ஒரு போட்டோ. அது கூட எடுத்து வெக்கலைன்னா எனக்கு மனத்தாங்கலா இருக்குது."

"இந்த ஊர்ல போட்டோ கடையெல்லாம் எங்கண்ணே இருக்குது?"

"என்ன போட்டோ வச்சு என்ன பிரயோசனம். மனசில நிக்கறாரில்லை. பொஸ்தவமெல்லாம் பத்திரமா இருக்குதில்லை?" என்று பெரிய நாயகி புடைவைத் தலைப்பால் வாயை மூடிக் கொண்டு விசும்பினாள்.

"பத்திரமா? தொட்டா பொடிப் பொடியா உதிருது! பொஸ்தவத்தையாவது சரியா வச்சுக்கக் கூடாதா?"

"மூத்தவன் செயலா இருக்குறான். அவன் சம்சாரமும் குழந்தைகளும் லட்சங்கோடியில் புரள்றாங்க. சின்னவனுக்குத்தான் எதும் சரியா செய்ய முடியலைன்னு ஆதங்கப்படுவாரு."

சங்கரலிங்கம் குரல் வந்த திக்கை நோக்கிப் பேசினான். "பாருங்க, துரைக்கும் எங்கப்பா எல்லா வசதிகளும் தந்தாரு..."

"தெரியும் தெரியும். இவருக்குத்தான் படிப்பு வரலை. சகவாசம் சரியில்லை."

"உங்க புருசனுக்கு படிப்பு வரலை; பாக்டரி வெச்சு கொடுன்னு அப்பா எளுதிருந்தாரு. பத்தாயிரம் டாலர் அனுப்பிச்சேனே, என்ன செஞ்சிங்க?"

"அதென்னவோ அவருக்குத்தான் தெரியும்."

"சரி இப்ப என்ன அதைப் பத்தி."

"அதை என்ன செய்திங்க?"

"எல்லாம் உங்கப்பாரு வைத்திய செலவுக்குத்தான் ஆயிருச்சுன்னு சொல்லுங்களேன்."

"எங்கயும் கூட்டிட்டு போகலை. நாட்டு வைத்தியம் பார்த்தோம்னிங்க?"

"அது கடைசில. அதுக்கு முந்தி?"

"என்னவோ போட்டு குழப்பறிங்க."

"அப்பாவே போன பிற்பாடு இப்ப இதுக்கெல்லாம் அர்த்தமில்லை."

வெறுத்துப்போய் வீட்டை விட்டு



வெளியே வந்தான். மெல்ல கலிவரதன் கண்மாய் வரை நடந்தான். காவேரியை ஊருக்குள் வராமல் தடுக்க கரை உயர்த்திக் கட்டியதில் அதில் வெட்டிய பாதையில் மண்ணில் வேட்டிகள் காய்ந்து கொண்டிருந்தன. தென்னந் தோப்பு தூங்கிக் கொண்டிருந்தது. குயில்கள் அவ்வப்போது கூப்பிட்டன. இந்தக் காட்சியை இருபத்தைந்து வருஷத்துக்கு முன் இவன் விட்டுச் சென்றது. அப்படியே பத்திரமாக இவனுக்காகக் காத்திருப்பது போல.

ஒரு சாதாரணத் தாரகையின் பிற்பட்ட சோனிக் குழந்தைகள்!

மைகாட்! இவருடன் நான் பேசியிருக்க வேண்டும். பழகியிருக்க வேண்டும். எப்படிப்பட்ட மனிதர் என்பதை அறியுமுன்பே அமெரிக்கா சென்றுவிட்டேன். இப்போது தாமதமாகி விட்டது. ஊர் மாறவே இல்லை. தேசத்தின் மாறுதல் காற்றுகள் இந்தப் பக்கம் வீசவே இல்லை. அவன் கண்ட நாகரிகத்தின் ஒரே ஒரு அடையாளம், ஒரே ஒரு வித்தியாசம், சுடுகாட்டில் குழல் விளக்கும் நதிக்கரையில் புறக்கணித்த நிரோத் பாக்கெட்டும்தான். என்னால் இந்த ஊரில் தங்க முடியாது. திருச்சிக்குப் போய் தங்கிக் கொள்ளலாம். இந்த ஊரில் பாத்ரூம் போகவே முடியாது. டாய்லெட் பேப்பர் கிடையாது. டபுள்யு சி கிடையாது.

"எங்க கிளம்பிட்டிங்க அண்ணே."

"திருச்சிக்குப் போய் தங்கிட்டு ஊருக்குப் போறேன்."

"அதெப்படி? அப்பாவுக்கு நீங்கதானே எல்லா காரியமும் செய்யணும். நான் பிரதிநிதியாகத்தானே செஞ்சேன்?"

"எனக்கு இதில எல்லாம் அர்த்தம் இருக்கறதா தெரியலை துரை. முக தரிசனம் கெடைக்கலை. போட்டோவாவது கெடைக்கும்னு நெனைச்சேன். அதும் இல்லை. எந்த நினைப்போட வந்தனோ நடக்கலை. அவர் யாருன்னே தெரிஞ்சுக்க முயற்சி பண்ணலை."

"என்னண்ணே செய்யறது. நாங்களும் கண்ணும் கருத்துமாகத்தான் பாத்துக்கிட்டோம். தூரதேசம் போய்ட்டிங்க. கடைசி காலத்தில் ரொம்ப ட்ரபிள் கொடுத்தாரு."

"அதான் சொன்னியே, இவங்கள்ளாம் யாரு."

"இது சரஸ்வதி. இது கவிதா. இது தமிழ்செல்வன். ஏய் எல்லாம் பெரியப்பாவுக்கு வணக்கம் சொல்லுங்க."

"வணக்கம் பெரியப்பா" என்று ஒரு ஒத்திகை செய்யப்பட்ட கோரஸ் எழுந்தது.

"இவன்தான் தாத்தாவுக்கு ரொம்ப பிடிச்ச பேரன். உங்க குழந்தைங்கள் எல்லாம் நல்லா படிக்குதா."

"எனக்கு ஒரு புள்ளைதானே! அவன் எங்கூட இல்லை. காலேஜ் போறான். பதினாறு வயசானதுமே தனியா போய்ட்டான். லீவுக்கு வருவான். இப்பவே சம்பாதிக்கிறான். ஏம்மா கவிதா நல்லா படிக்கிறயா."

"நான் கவிதா இல்லை, சரஸ்வதி" என்று அந்தப் பெண் தலையாட்டிக் கொண்டு, 'பிலிமாலயா'வில் ஆழ்ந்தது.

"இதுக்கெல்லாம் சாக்லேட்டு வாங்க வரக்கூட நேரமில்லாம போட்டது போட்டபடி ஓடி வந்துட்டேன்."

"உங்களைப் பத்தி சொல்லிக்கிட்டே இருப்பாரு. மூத்தவன்தான் கெட்டிக்காரன். இளையது மோழை. அமெரிக்காவில் போய் நீங்க சம்பாதிக்கிறது ரொம்பப் பெருமை அவருக்கு. நாங்கதான் குடுத்து வைக்கலை. நீங்களாவது உயர்வா இருக்கிறதில் சந்தோஷம்... விசயத்தை சொல்லிருங்க."

"என்ன விசயம்?"

"அது வந்து" என்று துரை சங்கடமாகப் பார்த்தான்.

"இப்ப வேணாம். பத்து நாள் இருக்கப் போறாங்களே அண்ணன்."

"என்ன விசயம்?"

"தென்னூர் வீடு அப்புறம் கொஞ்சம் நெலம் இருக்குது. அதை டிஸ்போஸ் பண்ணணும்."

"அப்பா என்ன சொன்னாரு?"

"தாரானமா வித்துக்க. உனக்குத்தான் பொட்டைப் புள்ளைங்க. சங்கரலிங்கத்துக் கிட்ட ஒருவார்த்தை சொல்லிட்டு வித்துருன்னாரு. எப்படியும் உங்க கையெழுத்து இல்லாம விக்க முடியாது."

"எவ்வளவு வரும்?"

"வீடு அறுவது வருசம் பளசு. மனைக்குத்தான் மதிப்பு. என்ன, கிட்டி முட்டிப் பார்த்தா பத்தாயிரம் வரும். நிலம் குத்தகைக்காரன்கிட்ட மாட்டிக்கிட்டு இருக்குது. விக்கறுக்கு அவனுக்குப் பணம் கொடுக்கணும். அதுக்கு ஒரு பத்தாயிரம் தேறும்."

"ஒண்ணு பண்ணுங்க. நான் அந்த இருபதாயிரத்தை கொடுத்துர்றேன். அப்பா நெனைவா அந்த நிலத்தையும் வீட்டையும் வெச்சக்கலாம். என் பேர்ல எடுத்துக்கறேன். சரிதானே."

"அது கூட சரிதான்" என்று துரை மனைவியைப் பார்த்தான்.

அவன் வெளியே போனதும் பெரிய

இந்தியாவில் ஆண்டுதோறும் கழிக்கப்படும் ரூபாய் நோட்டுக்களின் எண்ணிக்கை 500 கோடி. இதன் எடை 4500டன். இத்தனை காகிதத்தை எரிப்பது சாதாரண விஷயமா? கொஞ்சம் கவனக் குறைவாக இருந்தால் நோட்டுக்கள் மீண்டும் புழக்கத்துக்கு வந்து விடும் அல்லவா? எனவே இவற்றை எரிப்பதற்காக 9 கோடி ரூபாய் செலவில் இரண்டு கருவிகளை ஜெர்மனியில் இருந்து தருவித்து இருக்கிறார்கள்.

இக்கருவி, ரூபாய் நோட்டுக்களை துண்டு துண்டாக நறுக்கி, எரித்து, கரி உருண்டைகளாக்கி விடுகிறது. சிறிதும் புகை வெளிவராது என்பது சிறப்பம்சம்.

– பிரதீப்

நாயகி துரையைப் பிடித்துக் கொண்டாள்.

"என்ன, அதுகூட செரிதான்? எப்படி சரியாகும்? அந்த வீடு பத்தாயிரம்தான் போகுமா. சகரான இடம் தென்னூர்ல."

"மதிப்பை குறைவா சொல்லப் போயி பிசகிருச்சு. அவன் கொடுக்கறதுன்னா சரியான மதிப்பு போட்டே வாங்கிக்கலாமே."

"இவரு என்ன அமெரிக்காவை விட்டு வரப்போறாரா. எதுக்காக இந்த மாதிரி கல்லுளி மங்கத்தனம் பண்றாரு. எப்ப பாத்தாலும் நம்ம மேல சந்தேகம். அப்பாவை சரியா வெச்சுக்கலைன்னு."

"அப்பாவை சரியா வெச்சுக்கிட்டமா பெரியநாயகி?"

"இப்ப அந்த பேச்சை எடுக்காதிங்க. பெரியவரு போய்ட்டாரு. எனக்கில்ல தெரியும் என்ன பாடு படுத்தினாருனு."

"எனக்கும் தெரியும் என்னபாடு படுத்தினேன்னு."

"பாருங்க, அவரு இருக்கறவரைக்கும் நம்ம சண்டை வேண்டாம். அவர்கிட்ட விடுதலை பத்திரத்தில் கையெழுத்து போட்டு கொடுக்க சொல்லிருங்க. கிழவனாருக்கு இவ்வளவு செஞ்சதுக்கு இந்த பிசாத்து வீடாவது நமக்கு வரட்டும். இவர்தான் அமெரிக்காவில் ஏகாந்திரமா சம்பாதிக்கிறாரே. எதுக்கு நம்ம மடியில கைவைக்கணும்? எந் தம்பிக்கு அந்த வீட்டை இடிச்சி காம்ப்ளெக்ஸ் கட்டணும்னு உத்தேசம். அவரு வாங்கினா இடிக்க விட மாட்டாரு. அப்பாருக்கு ஏதாவது நினைவு மண்டபம் எழுப்பணும்பாரு!"

"சரி நான் பேசறன்."

இரண்டு மூன்று நாளாக ஒவ்வொருத்தராக வந்து துக்கம் கேட்டதில் பேசுவதற்கு அவகாசம் கிடைக்கவில்லை. அமெரிக்காவுக்கு ட்ரங்கால் போட பேட்டைவாய்த்தலை தபால் ஆபீசுக்குப் போய்த் [illegible] வருவதாகச் சென்றவன் சீக்கிரமே வந்து விட்டான்.

"நல்லூர் மார்கெட்லயே ஒரு எஸ்.டி.டி. பூத் இருந்திச்சு. போன் பேசிட்டேன். நல்லூர் நிறையவே மாறிடுச்சு" என்றான்.

"எங்க? அப்படி ஒண்ணும் மாறலை. அண்ணே வீட்டைப் பத்தி பேசலாமா. நெலம் கெடக்கட்டும்."

"யோசிச்சு பார்த்தேன். தம்பி நான் எதும் கையெழுத்து போடறதா இல்லை!"

"ஏன்" என்றான் துரை, முகம் இறுகி.

"ரெண்டு பேத்துக்கும் அப்பாவோட சொத்துக்கு எந்த வித அருகதையும் கிடையாது."

"என்ன அப்படி சொல்லிட்டீங்க!"

"நீங்க சொன்னது எல்லாமே பொய். நான் தீர விசாரிச்சுட்டேன். அவருக்கு சரியாவே வைத்தியம் பார்க்கலை. பிச்சைப்பிள்ளையை சந்திச்சேன். அவரை கூப்பிடறப்போ மாட்டுத் தொழுவத்துக்குப் பக்கத்தில் இருட்டறையில் படுக்கப் போட்டிருந்திங்களாம். நெஞ்செல்லாம் கபம் கட்டியிருந்ததாம். அவரே இங்கிலீஷ் வைத்தியம் பார்க்க சொன்னாராம். கடை வீதில எட்டு இங்கிலீஷ் டாக்டர் இருக்காங்க. மூணு போட்டோக் கடை இருக்குது."


"அவரு போட்டோ எடுத்துக்க சம்மதிக்கலைன்னா நான் என்ன செய்ய முடியும். கண்பார்வை போயிருச்சே."

"தம்பி! பொய் சொல்றதை முதல்ல நிறுத்து. நீங்க எப்படி அப்பாவை பாத்துக்கிட்டிங்கன்னு எனக்கு தெரிஞ்சுருச்சு. அவரு சொத்துக்கு உனக்கு எந்த விதத்லயும் தகுதி இல்ல. அவரை சரியா பார்த்திருந்தா இன்னம் பத்து வருசம் இருந்திருப்பாரு."

"உங்களுக்கு மட்டும் தகுதி இருக்குங்கறிங்களா?"

"எனக்கும்தான் கிடையாது. அவரு உயிரோட இருக்கறப்ப நான் வந்து பார்க்கலை. அவரு எப்பேர்ப்பட்ட மனுசர் அவர். யாருன்னு தெரிஞ்சு வெச்சுக்க பிரயத்தனப்படாம என் சுயநலத்துக்காகவே டாலரை துரத்திக்கிட்டு இருந்திருக்கேன். அமெரிக்காவில் இருந்து டாலர் அனுப்ச்சா மட்டும் என் கடமை தீரலை. அவர் சொத்தை விக்கறதுக்கு நம்ம ரெண்டு பேருக்குமே தகுதி இல்லை. அதனால் அவசரப்படவேண்டாம். அந்த வீட்டை இடிச்சி காம்ப்ளெக்ஸ் கட்டணும்னு உத்தேசம். பரண் முழுக்க அவர் எழுதி வெச்ச நோட்டுப் புத்தகங்கள் இருக்கு. அதுகளை முதல்ல ஜாக்கிரதையா எடுத்து படிக்க பார்த்து அதை பப்ளிஷ் பண்ண முயற்சிக்கலாம். இல்லை அவர் எப்படிப்பட்ட மனிதர்னு தெரிஞ்சுக்க வாவது முயற்சிக்கலாம். அவசரம் இல்லை."

சங்கரலிங்கம் அமெரிக்கா திரும்பிச் சென்ற ஒரு மாதத்தில் அந்த வீடு விற்கப் பட்டது. மூத்தவன் கையெழுத்தில்லாமல் பத்திரப் பதிவு செய்வார்களா என்பதெல்லாம் சார்பதிவாளர் அலுவலகத்தில் ஒரு சின்ன ஏற்பாடு.



பாலம்

● தொடர்ந்து நடத்த முடியாமல் போன கடையில் டூவீலர் ஸ்பேர்பார்ட்ஸ் உள்ளன. வேண்டுவோர் தொடர்பு கொள்ளவும்.

என். வெற்றிவேல்,
ஊராட்சி ஒன்றிய
குடியிருப்பு,
சாத்தான்குளம் 628 704,
வ.உ.சி. (மாவ)

● சிட்டி, சிவபாதசுந்தரம் எழுதிய தமிழ்ச் சிறுகதை - வரலாறும் வளர்ச்சியும் என்ற நூலும் ந. பிச்சமூர்த்தியின் படைப்புகளும் வாங்கிக் கொள்ள விரும்புகிறேன்.

சா. பாலசுப்பிரமணியம்,
2/3, சுப்பராயர் அக்ரஹாரம்,
மதுரை - 1.

● என்னிடம் 400க்கு மேற்பட்ட உலக முக்கிய நாடுகளில் உள்ள இந்து கோயில்களின் முழு விலாசங்களும் உள்ளன. தேவையுள்ளோர் எழுதவும்.

டி.என். சீனிவாசன்,
பிளாட் 32. இரண்டாவது மெயின் சாலை,
டாக்டர் ராமமூர்த்தி நகர்,
கீழ்க்கட்டளை, சென்னை-43.

● அறுபதுகளில் வெளியான எனது நூல்கள் மறுபதிப்புக்குத் தேவைப்படுகின்றன: உதயரேகை, மனோரமா, கனவுகள் ஆயிரம், நீலவேணி, பூமணம், யாருக்குச் சொந்தம்? - வேண்டும் விலை தருகிறேன். வைத்திருப்போர் அனுப்பி உதவவும்.

வை. சுப்பிரமணியன்,
C 14, பகுதி I
சத்துவாச்சாரி, வேலூர் 632 009.

● திருவல்லிக்கேணி இந்து உயர்நிலைப் பள்ளியில் 1980ல் பள்ளிப் படிப்பு முடித்த நண்பன் வி. குருராஜனுடன் தொடர்பு கொள்ள விரும்புகிறேன்.

ஜி. சந்தானம்,
96, கற்பகம்நகர், சேலையூர் (அ),
சென்னை-73.

● Louis Nizer எழுதிய The Jury Returns என்ற பழைய புத்தகம் விலைக்குத் தேவை.

மாணிக்கவாசகம்,
14, வ.உ.சி. ரோடு,
கன்டோன்மெண்ட், திருச்சி - 620 001.

● இஸ்ரேல் நாட்டு தொழில் நுட்பத்தில் தயாரிக்கப்பட்ட Bio Fertilizer பயிர்களுக்கு பயன் படுத்துகிறேன். இதன் சிறப்பு குறித்து விவசாயி களுக்கு விளக்கச் சித்த மாக இருக்கிறேன்.

ஆர். ராம்சரண்
11/2, சாவடி
தெரு
கொண்டபாளையம் (அ),
சோளிங்கர்,
631 102.

● ஸ்ரீமத் மகாபாரதம் - தமிழில் எம்.வி. இராமானுஜாசாரியார் மொழி பெயர்ப்பு தேவை. விலை விவரங்கள் தெரிவிக்கவும்.

எஸ். ராமசாமி,
2/239, B, செல்வ விநாயகர் கோயில் தெரு,
சதானந்தபுரம் (அ),
ஸ்ரீனிவாசநகர், சென்னை -63

● பொன்னாங்கண்ணி தைலம் தயாரித்துத் தருகிறோம். தேவையுள்ளோர் அணுகவும்.

இராம. சுப்பையன்
பெருகவளர்ந்தான் (அ) 614 705
நாகை கா.மி (மாவ)

● 1930. 31-ல் எஸ். பார்த்தசாரதி ஐயங்கார், "திருவரங்கம் பெரிய கோயில்" என்ற இதழை நடத்தினார். அப்பிரதிகள் ஆய்வுக்குத் தேவை.

எஸ்.வி. பார்த்தசாரதி,
30/5, காஜாமலை காலனி,
திருச்சி 620 020.

● ஹோமியோபதி மருத்துவம் பற்றி ஓய்வு நேரத்தில் கற்றுக் கொண்டு தொழில் நடத்த விருப்பம். அரசு அங்கீகாரம் பெற்ற அஞ்சல் வழிக் கல்வி உள்ளதா? தகவல் கோருகிறேன்.

டி.எஸ். கோபாலகிருஷ்ணன்,
18, புஜங்கராவ் தெரு,
சாலவன்பேட்டை, வேலூர் 632 001

● இலவசமாக ஹிந்தி கற்றுத் தரப்படும். பிராத்மிக் முதல் ப்ரவீண் வரை. நேரடி வகுப்புகள் மட்டுமே.

த. சரவணன்,
அபிநவ் ஹிந்தி வித்யாலயா,
அரசு மேல்நிலைப் பள்ளி அருகில்,
முத்துப்பேட்டை,திருவாரூர் (மாவ)

(பாலம் பகுதி மூலம் தொடர்பு கொள்ளும் வாசகர்களின் வெற்றி தோல்விகளுக்கு கல்கி காரியாலயம் பொறுப்பு ஏற்க இயலாது. - ஆர்.)

தொலையாத

"ஒரு பேனா தொலைஞ்சதுக்காகவா இத்தனை ஆர்ப்பாட்டம்?" என்று கேலியாய்க் கேட்டாள் வசந்தி. நான் எதுவும் பதில் சொல்லவில்லை. சொல்லப் பிடிக்கவில்லை. அந்த பேனாவை கேலி செய்வது என்பது எனது நேற்றைய காதலையே கேலி செய்வது போல்.

அந்த பேனா, காதல் சின்னம். அதைப் பற்றி இவளுக்கு என்ன தெரியும்? அதன் மேன்மையைச் சொன்னாலும் இவளுக்கு விளங்குமா?

அந்த பேனாவைத் தவிர்த்து – நான் வேறு எந்த பேனாவையும் உபயோகிக்கவே மாட்டேன். அந்த பேனாவோடு இருப்பது என்பது என் ஈஸ்வரியோடு இருப்பது மாதிரி.

இரண்டு வருஷத்திற்கு முன் என் பிறந்த தினத்திற்குப் பரிசாக அளித்தாள். "இதில்தான் இனி நீங்க கதை எழுதணும். இந்த என் பேனாவால் நீங்க எழுதும்போது நானே எழுதற மாதிரி எனக்குத் தோன்றும்" என்று சிரித்தாள்.

அவளை இழந்து விட்ட பின்னாலும், அவள் இறந்து விட்ட பின்னாலும் – இந்த பேனாவால் அவள் என்னோடு இருப்பதாகவே நான் உணர்கிறேன். மை ஊற்றும் பேனா அது. பிங்க் கலர்... பிங்க் கலரில் பேனாவைப் பார்ப்பது அரிது. அந்த பேனாவைப் பார்க்கும் எவரும், "எங்க சார் இந்த பேனா வாங்கினீங்க?" என்று கேட்டு அந்த பேனாவால் ஒரு வார்த்தையாவது எழுத விரும்புவர். இல்லை குறைந்த பட்சம் அந்த பேனாவை தொடவாவது விரும்புவர். நான் அதற்கு அனுமதியேன். ஈஸ்வரி சொன்னாள் : "இந்த பேனாவை வாங்க, செலக்ட் பண்ண நாலஞ்சு கடையாவது அலைஞ்சு இருப்பேன்" என்று.

இது என் காதல் பரிசு. எனக்கு மாத்திரமே உரித்தான காதல் பரிசு. அந்த பேனா தொலைந்தது என் பாதி ஜீவனே போன மாதிரி உள்ளது.

இப்போது என் மனைவி கூட அந்த பேனாவை தொட்டால் எனக்கு கோபம் வரும். அவள் பரிகாசம் பண்ணுவாள். "என்னங்க... கேவலம் ஒரு பேனாவை தொட்டதுக்காக இத்தனை கூச்சல் போடுறீங்க. அந்த பேனாவை தொடாதேனா, தொடலை."

அவள் என் பேனாவைத் தொடக் கூடாது என்பதற்காக அவள் எழுதுவதற்காக வேறு ஒரு பேனா வாங்கிக் கொடுத்து விட்டேன். அவள் எழுதுவதற்கென்று பெரிதாய் ஒன்றும் இல்லை. பத்திரிகையில் வரும் குறுக்கெழுத்துப் போட்டி, ரேடியோ, டீ.வி.யில் வரும் அபத்தமான போட்டிகளில் கலந்து கொள்வாள்.

என் பேனாவை நான் தினசரி லேசான ஈரத்துணியில் துடைத்து எப்போதும் பளபளவென்று வைத்து இருப்பேன். இரண்டு வருஷம் ஆகியும் இன்றும் புதுப் பேனாவைப் போல்தான் வைத்து இருந்தேன். எதுவரை இந்த பேனாவை இப்படியே பாதுகாப்பேன்?

ஈஸ்வரியின் நினைவு தொலையும் வரையா? அவளுடன் இருந்த நாட்கள் ரம்மியமானவை. ஆனாலும் அவள் கோரமாய் இறந்தது எத்தனை துரதிருஷ்டமான ஒன்று!

கல்யாணம் பண்ணிக் கொள்ள இருவரும் முடிவு பண்ணி இருந்தோம். தேதி மட்டும்தான் முடிவு பண்ண வேண்டி இருந்தது. அவள் வீட்டில் எங்கள் திருமணத்திற்கு ஒப்புக் கொண்டார்கள். என் வீட்டில் மறுப்பு. அவள் வீட்டார் முன்னிலையில் திருமணம் செய்ய முடிவு பண்ணியாயிற்று.

அன்று ஷாப்பிங் போய் விட்டு மெயின் ரோட்டைக் கடந்த போது அசுர வேகத்தில் வந்த லாரி அவளை மோதித் தள்ளிவிட்டுப் போனது. அந்த நொடியே உயிர்நீத்தாள். எத்தனை மென்மையானவள். அந்த லாரியின் சக்கரத்தில் சிக்கி சின்னாபின்னமாகி விட்டாள். வாழ்க்கையே வெறுமையாய் இருந்தது.

அவள் தந்த பொருட்கள் ஏதேனும் – அவளின் நினைவாய் வைத்துக் கொள்ள இருக்கிறதா என்று தேடினேன். எதுவும் இல்லை - இந்த பேனாவைத் தவிர... இந்த பேனா கூட அவள் இருந்தவரை நான் உப


யோசித்ததே இல்லை. அப்போது இந்த பேனாவின் மகோன் னதம் எனக்கு விளங்கவில்லை.

அவள் இறந்த பின்னால் இந்தச் சின்னஞ்சிறு பேனா வைக் கொண்டு நான் ஆறுதல் அடைகிறேன். சில சமயம் நான் கற்பனை செய்வேன். இந்த சின்ன பேனாவிற்கு கைகால் முளைத்து அப்படியே ஈஸ்வரியின் வடிவம் பெறுவதை...

எப்படியோ பெற்றோரின் வற்புறுத்தலால் வசந்தியை மணம் முடித்துக் கொண்டேன். வசந் தியை மணம் செய்து கொண்ட பின்னரும் முழு மையாய் இவளுடன் இல்லறம் நடத்த முடியவில்லை. ஈஸ்வரியின் நினை வால் - இவளுடன் ஒழுக்கமான வாழ்க்கை வாழ முடியவில்லை. ஈஸ்வரியுடன் நடக்க வேண்டிய என் தாம்பத்ய வாழ்க்கை எவளு டனோ - அது எனக்கு வேதனை அளிக்கிறது.

அதற்காக இவளை நான் புண்படுத்துவதில்லை.

காணாமற்போன பேனா வைப் பற்றி இவள் எப்போ தாவது கேலி பேச்சு பேசு வதுண்டு. அப்போது நான் இவளை வார்த்தைகளால் புண்படுத்துவேன். ஒருமுறை அந்த பேனாவிற்காக இவளை



காதல்

அடித்து கூட விட்டேன்!

அன்றொரு நாள்... சட்டைப்பையில் என் பேனாவை சொருகி வைத்து இருந்தேன். துவைப்பதற்கு சட்டென்று சட்டையை எடுத்தான். பேனா கீழே விழுந்து விட்டது. விழுந்த வேகத்தில் இங்க் சிதறியது. பேனாவின் மூடி கழன்டு கொண்டது.

சப்தம் கேட்டுத் திரும்பிய நான் - பேனாவின் நிலையைப் பார்த்து அதிர்ந்து போனேன். அடிபட்டுக் கிடக்கும் சிறு குழந்தையைத் தூக்குவதைப் போல் மென்மையாய் பேனாவை எடுத்தேன். இங்க் சிதறி பிங்க் நிற பேனா - அலங்கோலமாய், தன் அழகை தொலைத்து விட்டு இருந்தது. எனக்குக் கோபம் வந்து விட்டது.


"உனக்கு வர வர பொறுப்பே இல்லை. பேனாவை இப் படித்தான் கீழே போடுறதா..." என்று அவன் முதுகில் அறைந்தேன். பேனா வுடன் பையில் இருந்த பணமும்

யோகி

சிதற விழுந்தது. அதற்காக நான் வருந்தவில்லை. நான் பேனாவிற் காக அவனை அடித்தது அவனை அதிர்ச்சியடையச் செய்து விட்டது.

இரண்டு நாள் என்னிடம் அவன் பேசவில்லை. எனக்கு அதுவேறு இம்சையாய் இருந் தது. நான் அவனை அடிக்கும் அளவிற்கு அவன் எந்தத் தவறும் செய்யவில்லையே. அப் படியே தவறு செய்து இருந்தா லும் அவனை அடிக்க எந்த உரி மையும் எனக்கு இல்லையே

ஈஸ்வரி சொல்வாள். "நமக் காக, நம் தேவைக்காக பிறரை நாம் புண்படுத்தவோ, இம்சிக் கவோ கூடாது. எப்போதும் நாம் கோபத்திலும் சரி, இன்பத் திலும் சரி, ஒரே மாதிரிதான் நேசிக்கணும்" என்று. உடனே வசந்தியை சமாதானப்



"ஒன்மேன், ஒன் போஸ்ட்'டுங்கற பாலிசியை அந்தத் தபால்காரர் தப்பாப் புரிஞ்சுகிட்டு இருக்காருன்னு எப்படிச் சொல்றே?"

"இன்னிக்கு எனக்கு மூணு லெட்டர் வந்தது. ஆனா, ஒண்ணே ஒண்ணை மட்டும்தான் தந்துட்டுப் போறாரு!"

- பாலு

படுத்தினேன்.

"ஒரு பேனா கீழே விழுந்ததுக்கு என்னை அடிக்கிறதா" என்று கேட்டு அவன் என் சமாதானத்தை ஏற்றுக் கொள்ளவில்லை.

ஊரில் இருந்து வசந்தியின் அம்மா இரண்டு நாள் கழித்து வந்து இருந்தபோது - வசந்தி சொன்னாள்: "அம்மா இவருக்கு கிறுக்குத்தான் பிடிச்சு இருக்கு. ஒரு பேனா கீழே விழுந்ததற்கு என்னை அடிக்கிறார். நீயும் அப்பாவும் இவரோட உத்தியோகத்தைப் பார்த்து ஏமாந்துட்டீங்க. இவர் ஒரு நல்ல கணவரா இல்லேம்மா. ஒரு அன்பான பேச்சு, ஒரு அனுசரணையான குணம் எதுவும் இல்லை" என்றாள். எனக்கு சுரீர் என்றது. உண்மைதான். நான் என்னை மாற்றிக் கொள்ள இயலாதா...

பேனா தொலைந்து மூன்று நாட்கள் ஆகிவிட்டன. கிடைத்தபாடில்லை. 'பேனா தொலைந்ததில் இருந்து நான் சரியாகச் சாப்பிடுவதில்லை' என்று வசந்தி வருத்தப்பட்டாள். உண்மைதான். என் மூளை முழுக்க பேனாவின் நினைவுதான். எங்கு தொலைந்து இருக்கும்? பஸ்ஸில்தான் தொலைந்து இருக்க வேண்டும். பஸ்ஸில் [illegible] முடியும். மூன்று நாட்கள் ஆகிவிட்டன. எவராவது பார்த்து இருந்தால் - அதை எடுத்துக் கொண்டு போய் இருப்பார்கள். சிறுவர்கள் கையில் சிக்கி இருந்தால் அக்குவேறு, ஆணிவேறாகக் கழட்டி ஆராய்ச்சி செய்து இருப்பார்கள்.

வழக்கமாய்ப் போகும் பஸ்தானே. கண்டக்டரிடம் கேட்டால் என்ன... கண்டக்டர் வழக்கமாய் அதே ரூட்டில் வருபவர்தான்.

கேட்டேன். சிரித்தார். "ஹி... ஹி..." என்று.

"ஏங்க அவனவன் பஸ்ல எதை எதையோ தொலைச்சிட்டு கிடைக்காம திண்டாடுறான். நீங்க தம்மாத்துண்டு பேனாவைக் கேட்கறீங்க..."

நான் எத்தனை சீரியஸாய் கேட்டதை இவர் ஹாஸ்ய உணர்வோடு எடுத்துக் கொண்டு நகைக்கிறார். தம்மாத்துண்டு பேனாவா அது... காதல் சின்னம்... போடா உனக்கென்ன தெரியும் என்று முணுமுணுத்தவாறு நடந்தேன்.

என்னவோ தெரியவில்லை. ஒரு மனிதனின் இறப்பைப் போன்று அந்த பேனாவின் தொலைதல் என்னை இம்சிக்கிறது. ஈஸ்வரியின் நினைவாய் - எஞ்சி இருந்த ஒரு நினைவுச் சின்னத்தையும் தொலைத்து விட்டேனே. எத்தனை அஜாக்கிரதையாய் இருந்து இருக்கிறேன். இரண்டு நாளாய் வசந்தியின் பேனாவில்தான் எழுதுகிறேன். என்னவோ திருப்தி இல்லாமல் எழுதுவது போல எழுதுகிறேன்.

அதோடு வசந்தியைத் திட்டுகிறேன். "பேனாவா வைச்சு இருக்கே? நிப் வளைஞ்சு இருக்கு. உன் மூஞ்சி மாதிரி."

"நீங்க வாங்கிக் கொடுத்த பேனாதானே... அப்படித்தான் இருக்கும்" என்று வசந்தி சிரித்தாள்.

மறுநாள் ஆபீஸிலிருந்து திரும்பியபோது, அந்த பேனா - தொலைந்த என் பிங்க் நிற பேனா டேபிள் மேல் இருந்தது. ஆனந்தக் கூச்சலிட்டேன். வசந்தி சமையற்கட்டில் இருந்து வந்தாள். "எங்க இருந்தது வசந்தி இந்த பேனா!" என்று பேனாவிற்கு முத்தமிட்டேன்.

நான் பேனாவிற்கு முத்தமிடுவதைப் பார்த்து வசந்தி நாணினாள். அவளுக்குக் கூட நான் இத்தனை நேசத்துடன் முத்தம் கொடுத்து இருக்க மாட்டேன்.

வசந்தி எதுவும் சொல்லாமல் சிரித்தாள். "என்ன சிரிக்கிறே?"

"இது தொலைஞ்ச பேனா இல்ல... அதே மாதிரி இருக்கும் புது பேனா."

"இல்ல... பொய் சொல்றே... அதே பேனா தான். நீ எடுத்து ஒளிச்சு வைச்சிட்டு என்னை நோகடிச்சு இருக்கே?"

"அய்யோ இல்லேங்க... புதுப் பேனாங்க. இதோ பாக்ஸைப் பாருங்க. புது பேனாதான். ஒரு பேனாவிற்காக நீங்க இத்தனை ஆர்ப்பாட்டம் பண்ணினதைப் பார்த்ததும் அதே மாதிரி பேனா வாங்கிட முடிவு பண்ணி - வாங்கப் போனேன். இந்த கலரில் பேனா கிடைக்கலை. அப்புறம் அலைஞ்சு, திரிஞ்சு ஒருவழியா வாங்கிட்டேன். என் பரிசு, உங்களுக்கு."

எனக்கு சுரீர் என்றது. ஈஸ்வரியைப் போன்றே இவளும் அலைந்து திரிந்துதான் இந்த பேனா வாங்கி இருக்கிறாள். என் அமைதிக்காக, என் நிம்மதிக்காக...

ஒருகணம் எனக்கு வசந்தியே ஈஸ்வரியாகத் தெரிவது போலிருந்தது.

நோயல்ல: பேய்!

✉ தலைவலி போய் திருகு வலி வந்த கதைதான் காங்கிரசுக்கு! ஒருவருக்கு ஒரு பதவி என்பதெல்லாம் சும்மா ஒரு பேச்சுக்குத்தான். பதவி ஆசை நோயல்ல; பேய்! ஆட்டுவிக்காமல் ஓயாது. கேசரி மட்டும் எப்படி விதி விலக்காவார்?

மயிலாடுதுறை, தினாசனா திருமலைராயன்.

✉ நாடாளுமன்ற கட்சித் தலைவரை, முறையான தேர்தல் நடத்தித் தேர்ந்தெடுக்காமல், ஒப்புதல் அபிப்பிராயமென்ற குறுக்கு வழியில் கணக்குப் போட்டுப் பார்க்கும் சீதாராம் கேசரிக்கு, சவுக்கடி தந்தது போலிருந்தது தலையங்கம். சபாஷ்!

கும்பகோணம், எஸ்.கே.மூர்த்தி.

✉ சும்மா சொல்லக்கூடாது. 'தில்லி நியூஸ்' பகுதியில் இடம்பெறும் செய்திகள் அனைத்தும் சூப்பர்!

ஊஞ்சவேலாம்பட்டி, டி. பசுபதி.

✉ 'அம்ருதாவின் ஆசை' என்ற சாக்கில் 'V' எழுத்தை புத்தாண்டின் முதல் இதழின் அட்டையில் போட்டு எங்களுக்குப் 'புதுமை'யாக வாழ்த்துக்களைக் கூறியதோடு, ஜாலி போட்டியிலும் 'புதுமை' இடம்பெறச் செய்த உங்களைப் பாராட்டாமல் இருக்க முடியவில்லை.

சென்னை - 61, உமா சுப்பிரமணியன்.

✉ 'யாருமே தொழாத கோவில்!' தலைப்பே உருக வைக்கும் கவிதை நயம். நயம்பட உரை என்பது இது தானே? தமிழ் வளர்ச்சிக்கென ஒரு தனி அமைச்சரையே நியமித்த கலைஞர் அரசு, தமிழுக்கே பெருமை சேர்த்த உ.வே.சா. அவர்களின் நூலகம் செம்மையாகச் செயல்பட ஆவன செய்ய வேண்டும்!

மதுரை, வி.பி. காந்திமதி.

✉ அம்ருதாவின் ஆசை 'V'சானல் அட்டைப்பட கட்டுரை படித்தேன். தமிழில் பேசவும் படிக்கவும் தான் வருமே தவிர, எழுத வராது என்ற செய்தியும், அவருக்குத் திருமணமாகி குழந்தை இருக்கிறது என்ற 'அதிர்ச்சியூட்டும்' செய்தியும் இதுவரை அறியாதவை.

பெங்களூர் - 47, மு.புஷ்பராசன்.

✉ எல்லோரும் அவசரத்தில் புரட்டும் தினத்தந்தியில் விளம்பரம் கொடுத்திருந்த 'நல்ல தம்பி'யை கல்கியில் ஹைலைட் செய்து இருக்கிறீர்கள்! அவருக்கு வாய்ப்புக் கிடைத்தால் அந்தப் புண்ணியம் உங்களுக்குத்தான்!

பொன்மலை, ஆர்.பிரகாஷ்.

✉ 'ஜெ. வழக்குகள்; தடுமாறுகிறதா தமிழக அரசு?' கட்டுரை படித்தேன். சட்டம் ஒரு இருட்டறையாயிருப்பினும் அரசு வழக்குரைஞரின் வாதத் திறமையால் உண்மைகள் வெளிச்சத்துக்கு வராமல் போகாது; ஏழு வழக்குகளிலுமா ஏமாற்றம் ஏற்பட வாய்ப்பு இருக்கும்? மக்கள் விழிப்புணர்ச்சியைக் கலைஞர் அறியாதவரா!

பொறையாறு, கானா. கணேசன்.

✉ ஜெயலலிதா விஷயத்தில் தமிழக அரசு தடுமாறுகிறது என்ற ரீதியில் எழுதியிருப்பது உண்மையல்ல. கட்சியிலும் சரி, ஆட்சியிலும் சரி; கலைஞர் பழம்தின்று கொட்டை போட்ட பழுத்த அரசியல்வாதி. எதையும் நிதானமாக, அதே சமயம் சாமர்த்தியமாகச் செய்யக்கூடிய ஆற்றல் மிக்கவர் அவர். ஜெயலலிதாவின் கைது விஷயத்தில் அங்கொன்றும், இங்கொன்றுமாய் சில தவறுகள் ஏற்பட்டு இருக்கலாம். அவற்றையெல்லாம் விதி விலக்காக எடுத்துக் கொள்ள வேண்டுமே தவிர விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளக் கூடாது. ஜெயலலிதா குற்றவாளியா இல்லையா என முடிவு செய்ய வேண்டியது இனி நீதிமன்றம் தான்.

சென்னை - 15, ஆர். ஜான்சிராணி

✉ 'எங்கே பார்க்கவே முடியவில்லை?' என்று டி.வி ரசிகர்கள் சிந்தித்துக் கொண்டிருக்கும் நேரம் பார்த்து 'மெட்ரோ' ப்ரியாவை சந்தித்துப் பேட்டி கண்டு வெளியிட்டது 'கல்கி'யின் சாமர்த்தியத்தைக் காட்டுகிறது.

நாமக்கல், வி. ராமகிருஷ்ணன்.

✉ நீண்ட இடைவெளிக்குப் பிறகு உமது விமர்சகர் ஒரு படத்தைப் பாராட்டி எழுதியிருப்பது 'கோபாலா கோபாலா'வாகத்தான் இருக்கும்!

விசலூர் - 1, ஜி.ஜி. கிருஷ்ணன்.

உனக்குப் பிறகான நாட்களில்...



கரம்பாய்ப் போன கழனியில்
குறுக்கே விழும் பாதையாய்
என் நிகழ்வுகளின் மேல்
வெற்றுச் சுமைகள்

மேய்ந்து போனதால்
கதிரற்று,
பச்சையோடிக் கிடக்கும்
வரப்போரப் பயிராய்
ஒதுங்கிக் கிடப்பதில்
சுகமாய் இருக்கிறது.
குருவி மறந்த கூட்டின் ஓரம்
சேற்றில் ஒட்டிச்
செத்துக் கிடக்கும்
மின்மினியாய்
கிழிந்த என் சட்டையில்
நீ எழுதிய கடிதம்

நொறுங்கிக் கிடக்கும்
கட்டை வண்டிமேல்
தலைசாய்த்துக் கழிகிறது
பொழுது

கிளையின் உச்சியில்
காய்ந்துபோய்
ஈக்களற்றுக் கிடக்கும்
தேன்கூடாய்
நான்

நீ உடைத்துப் போன
என் வாழ்க்கையை
வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கும்
என்னை
எப்படிப் புரியவைப்பது உனக்கு.

— பச்சியப்பன்



ராகிங் -ஜப்பான் ஸ்டைல்!

ஜப்பானை குழந்தைகளின் சொர்க்கம் என்பார்கள். பள்ளி நேரம் கொஞ்சம் அதிகமென்றாலும், வேறு பல நிம்மதிகள் உண்டு. போதை மருந்துப் பிரச்னைகள் ரொம்ப அரிது. குழந்தைகள் - செக்ஸ் போன்ற அதிர்ச்சியான விவகாரங்கள் எல்லாம் அங்கே கிட்டத்தட்ட கிடையவே கிடையாது. அங்கு தேசிய அளவில் ''குழந்தைகள் தினம்'' கூட உண்டு.

ஆனால் ஓரிரு வருடங்களாக அங்கே பள்ளி லெவலிலேயே "இஜிமே" கொடுமைகள் அதிகமாகி வருகின்றன. இஜிமே என்பது ஜப்பான் ஸ்டைல் ராகிங் - கொஞ்சம் தீவிர வகை.

பொதுவாக பள்ளிகள், தங்கள் வளாகத்துக்குள் மாணவர்கள் கட்டுப்பாட்டுடன் இருக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பது இயல்பு. ஆனால் ஜப்பானில் ஒரு படி அதிகம். பள்ளிக்கு வெளியில் அவர்கள் கட்டுப்பாடில்லாமல் நடந்து கொண்டதாகத் தெரிந்தால் கூடக் கடுமையான தண்டனை! அப்படியும் ராகிங் கொடுமை நடக்கத்தான் செய்கிறது!

வகுப்பில் சீனியர்கள் செய்யும் ராகிங்கில் முக்கியமான ஒருவகை பணத்தைப் பிடுங்குவது. 'டோபு ஜூனியர் உயர்நிலைப்பள்ளியில் கியோடெரு என்ற மாணவன் படித்துக் கொண்டிருந்தான். அவனை சீனியர்கள் அடிக்கடி பணம் கொடுக்குமாறு வற்புறுத்த, பாக்கெட் மனியெல்லாம் இப்படிக் கரைந்து போனபின் தன் காமிக் புத்தகங்கள், கம்ப்யூட்டர் சாப்ட்வேர் இவற்றை விற்று பணம் கொடுத்திருக்கிறான். பிறகு வீட்டிலிருந்து திருடியும் பணம் அழுதிருக்கிறான். ஒரு சந்தர்ப்பத்தில் அவன் தன்னிடம் பணம் இல்லை என்று கூற, சீனியர்கள் இவனை அழைத்துக் கொண்டு அருகிலுள்ள நதிப் பக்கமாகச் சென்றிருக்கிறார்கள். அவன் தலையைப் பிடித்து பலமுறை அந்த நதி நீரில் முக்கியிருக்கிறார்கள். இதையெல்லாம் ஒரு தாளில் எழுதி வைத்துவிட்டு, தற்கொலை செய்து கொண்டு விட்டான் அந்தச் சிறுவன்.

• கியோடெரு

தன் தற்கொலைக் குறிப்பில் அவன் எழுதியுள்ள சில வாக்கியங்கள் உருக வைக்கின்றன:

''என்னிடமிருந்து பணம் வாங்கியவர்களைத் தண்டிக்க வேண்டாம். அவர்கள் பணம் கேட்டபோதெல்லாம் நான் உடனடியாகக் கொடுத்துக் கொண்டே இருந்தேன். அது தவறு என்பதை உணருகிறேன். முதலிலேயே அவர்கள் உத்தரவுகளுக்கு நான் கீழ்ப்படிந்திருக்கக் கூடாது. நிறைய நாள் வாழ வேண்டும் என்றுதான் எனக்கு ஆசை. என்ன செய்ய? மன்னிக்கவும்.''

இந்தத் தற்கொலை ஜப்பானையே உலுக்க, பிரதமர் முராயாமாவே இதில் தலையிட்டிருக்கிறார். "இனி இது போன்ற சோகம் நடக்காதபடி சட்டம் இயற்றப்படும்" என்று கூறியதுடன் சொன்னதைச் செயல்படுத்தியிருக்கிறார்.

இதற்குப் பிறகு இதுபோன்ற தற்கொலைச் செய்திகள் எதுவும் சமீபத்தில் வரக் காணோம். என்றாலும் அங்குமிங்குமாக மிதமான அளவில் இஜிமே தலை காட்டிக் கொண்டிருக்கத்தான் செய்கிறது, ஜப்பானில்.

— குல்லூ

சிதம்பரம் சொல்லும் 'தர்ம' விளக்கம் எப்படி?

● ப. ராமகிருஷ்ணன், ஆவணத்தாங்கோட்டை. □

? நம் நாட்டில் ஜெயில்களின் எண்ணிக்கை குறைய வாய்ப்பேயில்லையா...?

! அதான் யாகவா முனிவர் சொல்லியிருக்கிறாரே... 2002-ஆம் ஆண்டில் வீட்டைப் பூட்டவே அவசியம் இராது என்று... இன்னும் ஐந்து வருஷம்தானே, பார்க்காமலா போய்விடுவோம்!

● **ஸ்ரீவித்யா காளிதாஸ், சிதம்பரம் – 1.**

? 'கடன் கொடுப்பது வங்கியின் தர்மம்; கடன் வாங்குவது புத்திசாலி வணிகர்களின் தர்மம்; கடன் கொடுக்கச் சொல்வது அரசியல் தர்மம்; வாங்கிய கடனைச் செலுத்தாமல் இருப்பது சிலர் தர்மம்; இதனால் ஏற்படும் சங்கடங்களுக்குப் பெயர்தான் தர்மசங்கடம்' என ப. சிதம்பரம் கூறியுள்ளாரே?

! முதல் இரண்டு வாக்கியங்கள் சரி. மூன்றாவது வாக்கியம் தகுதி அடிப்படையில் கடன் கொடுக்கச் சொல்வது அரசியல் தர்மம் என்று இருக்க வேண்டும். நான்காவது வாக்கியம், 'வாங்கிய கடனைத் திருப்பிச் செலுத்தாமல் இருப்பது அதர்மம்' என்று இருக்க வேண்டும். ஆக, ப.சி.க்கு ஐம்பது மார்க் மட்டுமே.

● எம். சம்பத், வேலாயுதம்பாளையம்.

? விடுதலைப் புலிகள் திடீரென்று எம்.ஜி.ஆர். நினைவு தினம் அனுஷ்டிக்க என்ன காரணம்...?

! சில தமிழக அரசியல் கட்சிகளைத் தாண்டி மக்களிடம் அனுதாபம் பெறும் முயற்சி.

● செ. மீனாட்சி சுந்தரம், தென்காசி.

? சமுதாயத்தில், தனித்துவம் கொண்ட பெண்களின் இல்லற வாழ்க்கை தோல்வியில் முடிந்திருக்கிறதே, காரணம் என்ன?



* புதுமை முயற்சி...

! தனித்தன்மை என்பது ஏதாவது ஒரு துறையில் முத்திரை பதிப்பதால் உண்டாவதாயின், அதற்கு ஏராளமான நேரமும் கவனமும் செலவிட வேண்டியிருக்கிறது. இதையே ஓர் ஆண் செய்தால், சாதனையாளர் என்று பாராட்டி, சராசரி இல்லறப் பொறுப்புகளை அவர் கவனிக்கா விட்டாலும் மன்னிக்கப் படுகிறார். பெண்களை அப்படி மன்னித்து ஏற்கும் பக்குவம் இன்னும் நமக்கு வரவில்லை. அதனால்தான் இல்லறத்தில் பிரச்னைகள் எழுகின்றன.

● தெரிசை ஐயப்பன், திருப்பூர்.

? போன ஜன்மத்தில் பாவம் செய்தால் இந்த ஜன்மத்தில் துன்பம் ஏற்படுகிறது என்கிறார்களே – அது உண்மையா?


! போன ஜன்மம், அடுத்த ஜன்மம் பற்றியெல்லாம் எனக்குத் தெரியாது. ஆனால், போன ஆட்சியில் பாவம் செய்தால் இந்த ஆட்சியில் தண்டனை உண்டு என்று தெரியும்.

● ஆர். முருகானந்தம், எஸ். மாரியூர்.

? சுவிஸ் வங்கி அதிகாரிகளைச் சந்தித்தால் தாங்கள் கேட்க விரும்பும் கேள்வி?

! 'நெம்பர் அகவுண்ட்' என்கிற பெயரில் வரி ஏய்ப்புக்கும் கறுப்புப் பணத்துக்கும் துணை போகலாமா..? வளர்ந்து வரும் நாடுகளின் பொருளாதார சீர்குலைவுக்கு ஒரு காரணமாகலாமா? உங்கள் சட்டம் இதை அனுமதிக்கிறது எனில் அதை மாற்றி, ஆரோக்கியமான பொரு





* நாசுக்கு அறிவுரை!



• 'சரித்திரப் புகழ்!

ளாதாரத்துக்கு வழிவகுக்க வேண்டாமா...?

● **எம். அசோக்ராஜா, அரவக்குறிச்சிப்பட்டி.**

? *கேசரி தலைவரானாலும் ஐக்கிய முன்னணி ஆட்சிக்கு ஆபத்து இல்லை என்கிறாரே கலைஞர்? நம்புகிறீர்களா...?*

! ஐக்கிய முன்னணி ஆட்சிக்கு ஆபத்து வந்தால் வந்து விட்டுப் போகிறது... யாரும் கண்ணீர் விட்டு அழப்போவதில்லை – மறு தேர்தல் நடக்கப் போகிறது. ஆனால், மத்தியில் ஆட்சி மாற்றத்தால் இங்கே தி.மு.க. ஆட்சிக்கு ஆபத்து வராமல் இருந்தால் ஆரோக்கிய அரசியல் பிழைத்துக் கொள்ளும்.

● **வி. சத்தியப்ரியன், சென்னை – 15.**

? *சாதாரண மனிதனுக்கும் அரசியல்வாதிக்கும் என்ன வித்தியாசம்?*

! பர்ஸுக்கும் சூட்கேஸுக்கும் உள்ள வித்தியாசம்தான்!

● **கே. கணேசன், கிருஷ்ணகிரி.**

? *'பாண்டவர்களுக்கு கிருஷ்ணன் எப்படியோ, அப்படித்தான் த.மா.காவுக்கு ரஜினி' என்கிறாரே ப. சிதம்பரம்?*

! 'அரசியல் தொடர்பு இருந்தாலும் அரசியல்வாதி ஆகிவிடாதீர்கள், ப்ளீஸ்' என்று ரஜினிக்கு நாசூக்காகச் சொல்லிக் கொள்கிறார் சிதம்பரம்.

● **எஸ். குமரன், மதுரை.**

? *இந்திய வீரர்கள் தென் ஆப்பிரிக்கா சென்று ஏன் இப்படி விளையாடுகிறார்கள்?*

! ரொம்ப சிம்பிள்! நம்மிடம் வேகப் பந்து வீச்சாளர்கள் இல்லை. அதனால் அந்தப் பாணி போலிங்கை சந்திக்கும் அனுபவம் நமது பாட்ஸ்மெனுக்கு ஏற்படுவதில்லை. அயல் நாட்டார் இங்கு வரும் போது, நமது சுழல் பந்து வீச்சுக்கு வாகாக பிட்சுகள் தயாரித்து வருகிறோம். அங்கோ, அவர்கள் தங்களுடைய வேகப்பந்து வீச்சாளர்களுக்கு உதவும்படி பிட்ச் அமைக்கிறார்கள். ஆகவே, அங்கு போனால் ஃபணால்!

● **மல்லிகை மன்னன், மதுரை – 14.**

? *'எங்களது புரட்சித் தலைவி ஆட்சியில் சாதனைகள் நடந்தன. கருணாநிதியோ, (மாஜி) அ.தி.மு.க. அமைச்சர்களின் வீட்டில் சோதனைகள் செய்து காலம் கழிக்கிறார்' என்று கிண்டல் செய்கிறாரே காளிமுத்து?*

! இந்தச் சோதனைதான் மிகப் பெரிய சாதனை என்பது இவருக்குத் தெரியாது; மக்களுக்குத் தெரியும்!

● **ந. சேதுராமன், கொடுமுடி.**

? *சமீபத்தில் மறைந்த ஓவியர் லதாவைப் பற்றி...?*

! சாண்டில்யனின் சரித்திரத் தொடர் கதைகளுக்கு ஓவியம் வரைந்து பிரபலமடைந்தவர். தெய்வத் திரு உருவங்களையும் கண்ணில் நிற்கும் படங்களாகப் போடக் கூடியவர். நேரத்தின் அருமை தெரிந்து, பத்திரிகை உலக பரபரப்புக்கு ஈடுகொடுத்த உழைப்பாளி. தமது முடிவு நெருங்குவதை உணர்ந்து, குடும்பத்தாரை அருகில் அழைத்து நிறுத்திக் கொண்டார்; சுலோகங்கள் கூற ஆரம்பித்தார் என்பது தெரியவந்ததும் நெகிழ்ந்தேன்.

● **ஜே. ஜகந்நாதன், சேலம் – 15.**

? *புன்னகை, மௌனம், அடக்கம் – இவற்றில் எது அரசியல்வாதிக்கு மிகவும் கைகொடுக்கும்?*



• ஐம்பதே மதிப்பெண்!



• ஆபத்தா? இல்லையா?



• நாசூக்கு அறிவுரை!

! தோற்கும்போது புன்னகை;
தூற்றப்படும்போது மௌனம்;
ஜெயித்தபின் அடக்கம்;
எப்போதும் நேர்மை!

● **சிவராமசுப்பிரமணியன், தூத்துக்குடி.**

? *'மின்சார கனவு', 'இருவர்' பாடல்கள் எப்படி...?*

! 'வெற்றி' என்று விளம்பரங்கள் சொன்னாலும் இரண்டுமே சுமார் ரகம்தான். 'பம்பாய்', 'ரோஜா' லெவலுக்கு வராது. மின்சார கனவில் 'பூ பூக்கும் ஓசை' பாடல் பிரபஞ்சத்தின் ஒலிநயங்களையெல்லாம் பிட்டு வைத்தாலும் இசையில் அதை எட்ட முடியவில்லை. 'இருவர்' படத்தில் பாம்பே ஜெயஸ்ரீ – உன்னிகிருஷ்ணன் இணைந்து பாடியுள்ள டூயட் ஒரு புதுமை. ஆனால், ஜெயஸ்ரீ குரல் 'தோடி'க்குத்தான் லாயக்கு!

> □ ரூ. 25 பரிசு பெறுபவர் :
> பா. ராமகிருஷ்ணன்,
> காயக்காடு,
> ஆவணத்தாங்கோட்டை அஞ்சல்,
> அறந்தாங்கி தாலுகா, புதுகை - 614 624.

நடக்கிற தூரம்

"உன் புருஷன் இன்னைக்கு வந்துடுவாரா?"

காயத்ரி வீட்டுச்சாவியை பக்கத்து வீட்டில் கொடுக்கும்போது பங்கஜம் மாமி வாசற்படியில் நின்று கேட்டது திரும்பவும் ஞாபகம் வந்தது. அவளுக்கு ஏற்கெனவே மனசில் கரை புரண்டு கொண்டிருந்த துக்கத்தை மாமியின் கேள்வி மேலும் தூண்டுவதாயிருந்தது.

"இன்னைக்கு வர்றேன்னுதான் சொன்னார்..." என்றுதான் பதில் சொல்ல வேண்டியிருந்தது. பொய்தான். அவளுக்கே ராம்குமார் ஊர் திரும்பும் நாள் பற்றி நிச்சயமற்றிருந்தது. சொல்லிவிட்டுப் போயிருந்தால் அல்லவா தெரியும்? இன்றைக்கு ஒருவேளை வரலாம். வராமலும் இருக்கலாம். எப்படியானாலும் இன்றைக்கே வர வேண்டுமென்றுதான் மனதின் துடிப்புகள் இருந்தன. காலையிலிருந்தே எதிர்பார்ப்பு கிளம்பியிருந்தது.

மூன்று நாள் முன்பு ஹைதராபாத்துக்கு ஆபீஸ் வேலையாய் கிளம்பிச் சென்றவன். அந்த ஊர்தானா என்றுகூட சரியாய் தெரியவில்லை. போகும்போது சொல்லிக் கொள்ளாமல் போகிற அளவு அப்படி என்னதான் நடந்து விட்டது? நினைக்கும்போதெல்லாம் அழுகை வரும்போல இருந்தது. கஷ்டப்பட்டு அடக்கிக் கொண்டாள்.

காயத்ரி தன் அலுவலகத்தை நோக்கி நடந்தாள். இந்த ரோட்டின் முனை திரும்பினால் வந்துவிடும் தொலைவுதான் அது இருப்பது. நெஞ்சின் துக்கம் கால்களை இழுத்தது.

ராம்குமாருக்கு வாரத்தில் நான்கு நாள் வெளியூரில்தான் வேலை இருக்கும். சென்னை, பெங்களூர், ஹைதராபாத் என்று மாற்றி மாற்றி ஏதாவது ஓர் ஊர். மற்ற நாட்களில் உள்ளூரிலேயே வேலை.

இங்கே இருக்கிறபோது கொஞ்சம் லேட்டாய்த்தான் வேலைக்குப் போவான் ராம்குமார். அம்மாதிரி நாட்களில் காலை அவளது ஆபீஸ்வரை கூட நடந்து வருவான். கையில் புகைந்த சிகரெட்டுடன்.

"ஒரு சிகரெட் பத்த வெச்சா நடந்து போற தூரத்துல உன் ஆபீஸ் இருக்கு" என்பான். அப்படி அவன்கூட, நடந்து வருகிற நாட்களில் சந்தோஷமாக இருக்கும் காயத்ரிக்கு. அதுதான் இப்போ பிரச்னையே ஆகியிருக்கிறது.


அவன் வருவது ஆபீஸ் வாசல் வரைதான். காயத்ரி படிகளில் ஏறி மேலே போனபிறகு மாடி வெராண்டாவிலிருந்து பார்த்தால் அவன் மெதுவாகத் திரும்பிப் போவது தெரியும். ஓர் அரை நிமிடம் பார்த்துக் கொண்டேயிருப்பதும்கூட ஒரு இதம்.

இந்த மூன்று நாளில் ராம்குமாருக்கு தன் மேல் என்ன கோபம் இருந்திருந்தாலும் அது தணிந்திருக்கும் என்று நினைத்தாள் காயத்ரி. நியாயமில்லாத கோபம்தான். ஆனால் மூன்று நாள் படாதபாடு படுத்தி வைத்து விட்டதே. நினைத்து நினைத்து அவளுக்குத் தாங்கவில்லை. அந்த சாயங்காலம் மறுபடி நினைவுக்கு வந்தது.

ராம்குமாரை உடனே.... உடனே பார்க்க வேண்டும் என்று தோன்றியது அவளுக்கு. இந்த நிமிடம்...! இந்த நொடி...! புன்னகைத்த முகமாய் அவன் எதிரே வந்து அவன் நிற்க வேண்டும். 'ஸாரிடா காயத்ரி' என்று சொல்ல வேண்டும். 'ச்சேச்சே... சண்டை வந்ததே என்னால... நான்தான் ஸாரி சொல்லணும்.' மெதுவாய் அவன் தோளில் சாய்ந்து கொண்டு....

ஆபீஸ் வந்திருந்தது. படி ஏறி மாடி வெராண்டாவுக்கு வந்ததும் பார்வை தெருமுனை வரை போய்விட்டு வந்தது. அவன் முகம் தெரியாதா என்றிருந்தது. பொறுக்க முடியாமல் கண்கள் திடீரெனத் தளும்பின. உள்ளே போனதும் பாத்ரூமுக்குப் போய் ஐந்து நிமிடம் மவுனமாய் அழுதாள்.

மத்தியானம் வரை கண்கள் அடிக்கடி வாசலுக்கு அலை பாய்ந்து கொண்டிருந்ததை தவிர்க்க முடியவில்லை. ஊரிலிருந்து திரும்பினால், வீட்டுக்கு வந்தால் நேராய் இங்கே தான் வருவான். வந்துவிட்டேன் என்று அறிவிப்பதற்காக. இன்றும் அப்படித்தான் நடக்கும் என்று நம்ப விரும்பினாள்.



இதற்கு முன் அதிக நாள் ராம்குமாரைப் பிரிந்திருந்தது எப்போது என்று யோசனை ஓடியது. ஒரு பத்து நாள் கொச்சின் போன போது. அப்போது இந்த அவஸ்தை இருந்திருக்கவில்லை. அவன் கோபப்பட்டதும், சொல்லாமலே கிளம்பிப் போனதும்தான் இப்போது மனசு அடித்துக் கொள்வதற்குக் காரணம்.

லஞ்ச் இடைவெளியில் சாப்பிட்டுக் கைகழுவும்போது 'இங்க வா' என்று ராஜி கூப்பிட்டாள்.

"உன் கண்ணு லெட்ஜர்ல இருந்தாலும் மனசு வேறெங்கேயோ இருக்கு. நான் கவனிச்சதில மூணு நாளா நீ சரியில்லை..." என்றாள்.

காயத்ரி அவளின் கண்களுக்கு நேராகப் பார்த்தாள். அதில் வம்புக்கு அலைகிற மனோபாவம் எதுவும் தெரியவில்லை. மாறாக, தன்மையான, ஆறுதலான பார்வையாயிருந்தது அது.

இவளிடம் சொன்னாலென்ன? எப்படியாவது மனபாரத்தை ஏதாவது ஒரு வழியில் இறக்கி வைத்து விட வேண்டும் போல் இருந்தது.

"அவர்கூட சின்ன சண்டை..." சொல்லிவிட்டு நிறுத்தினாள்.

ராஜி "ம்" என்றாள். காயத்ரி முழுவதும் சொல்லக் காத்திருந்தாள்.

"காலைல சில சமயம் அவர் எங்கூட வருவார் தெரியுமா? ஆபிஸ் வரைக்கும். மூணு நாள் முன்னாடிகூட வந்தார். பாதி தூரம் வந்ததும், 'எதுக்கு நீங்க மெனக்கெட்டு எங்கூட வர்றீங்க. நான் போய்க்குவேனே?' அப்படீன்னேன். சட்டுன்னு அங்கயே நின்னுட்டார். சிகரெட்டை வீசி எறிந்தார். 'ஸாரி... நான்கூட வர்றது உனக்கு போரடிக்குதுன்னு எனக்கு தெரியாமப் போச்சு...'ன்னு சொல்லிட்டு வேக வேகமா திரும்பி நடந்து போய்ட்டார். எனக்கு ஒண்ணும் புரியலை ராஜி... ரோட்லயே கண்ணெல்லாம் கலங்கிடுச்சு. என்கூட அவர் வர்றது எனக்கு எத்தனை சந்தோஷம்னு உங்கிட்டயேகூட சொல்லியிருக்கேனே..."

பேசி முடிக்குமுன் காயத்ரிக்கு கண்களில் நீர் திரையிட்டுவிட்டது.



"லீவு போட்டுட்டு அப்பவே திரும்பவும் வீட்டுக்கே போயிடலாம்னு ஆயிடுச்சு. எப்படியோ ஆபீஸ்ல சாயந்திரம்வரை சமாளிச்சுட்டேன். அன்னைக்கு சீக்கிரமே திரும்ப வீட்டுக்குப் போறேன். சூட்கேசுக்குள்ள துணிமணி அடைச்சிட்டிருந்தார். தன்யா படிச்சிட்டுருந்தது. போனதும் 'ஏன் காலைல உங்களுக்கு அப்படிக் கோபம் வருது'ன்னு கேட்டேன். கொஞ்சம் சத்தமா கேட்டுட்டேன் போல. நிமிர்ந்து பார்த்தார். பதில் சொல்லலை. எனக்கும் லேசா கோபம் வந்துச்சு. 'நீங்க தினமும் எங்கூட வந்தா என்ன? வராட்டி எனக்கென்ன?'ன்னு சொல்லிட்டு முகம் கழுவப் போயிட்டேன். ரொம்ப டென்ஷனாயிடுச்சு. வந்து பாத்தா அவரைக் காணோம்... அப்பா ஊருக்குப் போயிட்டார்னு தன்யா சொல்றா... அப்படியே ஒடுஞ்சு போய் உக்காந்துட்டேன்."

"அவருக்கு ஆபீஸ்ல ஏதாவது டென்ஷனா இருந்திருக்கும். அத உன்மேல காட்டியிருக்கலாம் காயத்ரி... மத்தபடி உன் மேல பிரியமாத்தான் இருக்கார்."

ராஜி கேட்டதின் கடைசி வாக்கியம் அவளுக்குள் ஒரு மிதமான நெகிழ்வை ஏற்படுத்தியது. அழுத்தமாய் "ம்" என்றாள்.

"இன்னைக்கு நிச்சயமா வந்துடுவார்னு தோணுது ராஜி..."

இரண்டரை மணிக்கு காயத்ரியைக் கேட்டு ஃபோன் வந்தது. மறுமுனையில் ராம்குமார் பேசினான்.

"காயத்ரி!" என்றான். காயத்ரிக்கு உடம்பில் சந்தோஷம் ஏறி ஜில்வென்று காற்றில் பறக்கிற மாதிரி ஆகிவிட்டது. பேச முடியாமல் சில நொடிகள் நின்றாள்.

"சொல்லுங்க..."

"காயத்ரி... நான் ஹைதராபாத்திலிருந்து பேசறேன். இங்க வேலை இழுத்திடிச்சு. மாட்டிக்கிட்டேன். வர இன்னும் மூணு நாள் ஆகும். செவ்வாய்கிழமை காலைல் வந்துடுவேன். சரியா?"

இன்னும் மூன்று நாள்.

காயத்ரி ஏமாற்றத்தின் விளிம்புக்கு வந்து நின்றாள். உதடுகளை அழுத்தக் கடித்துக் கொண்டாள்.

"சரி..." என்றாள். குரல் சுரத்தில்லாமல் வந்தது.

சித்ரன்

ஜாலி போட்டி - 21 முடிவு

குவிந்து கிடக்கிற செருப்புகளை எண்ணுவது அத்தனை சிரமமில்லை என்று நிரூபித்து விட்டார்கள், நமது வாசகர்கள். அந்தப் பதினைந்து ஜோடி செருப்புகளை அடையாளம் கண்டு சரியாக எழுதி விட்ட ஆயிரக்கணக்கான வாசகர்களுக்குப் பாராட்டுக்கள். குலுக்கலில் தேர்வாகி, ரூ.5000 பரிசு பெறும் எச். கோபாலகிருஷ்ணனுக்கு (7, முனிஸ்வாமி ரோடு, டாங்கர் டவுன், பெங்களூர் - 51) ஸ்பெஷல் வாழ்த்துக்கள்!

- ஆசிரியர்

"ஆர் யூ ஆல்ரைட் காயத்ரி?"

"ம்... நீங்க?"

"ஃபைன். தன்யாகுட்டிகிட்ட சொல்லு. வெச்சிடட்டுமா?"

"சீக்கிரமா வாங்க..."

ஃபோனை கீழே வைப்பதற்குக் கூட பலமில்லாத மாதிரி ஒரு உணர்வு. டேபிளில் தலை கவிழ்ந்து ஒரு ஐந்து நிமிடம் அப்படியே உட்கார்ந்தாள். ராம்குமார் பேசின போது அவன் குரலில் கோபம், வருத்தம் எதுவும் இல்லாததை உணர்ந்தாள். அது ஒரு சின்ன ஆசுவாசத்தைத் தந்தது. இன்றைக்கு வரமாட்டான் என்று நினைத்த போது, துக்கமும் சலிப்பும் வந்தன.

காயத்ரி யோசித்தாள். இப்படி பைத்தியம் பிடித்த மாதிரி உட்கார்ந்திருக்கிறதுக்கு பேசாமல் பர்மிஷன் போட்டுவிட்டு வீட்டுக்குக் கிளம்பலாம் என்று எண்ணம் வந்தது. சொல்லிவிட்டுக் கிளம்பினாள்.

நேராய் தன்யாவின் ஸ்கூலுக்குப் போனபோது அவள் "ஹை! அம்மா..." என்று ஆச்சரியப்பட்டது. "எங்க போறம்? சினிமாவுக்கா?" என்றது உற்சாகமாய்.

"இல்ல, பாட்டி வீட்டுக்கு..." என்றாள். வருகிற வழியில் தோன்றினதுதான் இது. வீட்டுக்குப் போய் என்ன கிழிக்கப் போகிறோம். ப்ரெஸ் காலனிக்குப் போய் அம்மா அப்பாவைப் பார்த்துவிட்டு வந்தால் என்ன? நாளைக்கு ஞாயிற்றுக்கிழமைதானே? தன்யா ஜாலியாய் பாட்டியுடன் விளையாடட்டும்.

பஸ்ஸில் போகும்போது ஃபோனில் கேட்ட ராம்குமாரின் குரலிலேயே மனம் லயித்திருந்தது.

அம்மா ஆச்சரியப்பட்டாள். 'அவர் எங்க?' என்றாள். ஹைதராபாத் போயிருக்கிறதாகவும், செவ்வாய்கிழமை வருவார் என்றும் சொன்னாள். தன்யா அதற்குள் போய் டீ.வி முன்னால் உட்கார்ந்து விட்டிருந்தது.

'நேரா ஆபீஸ்லேர்ந்து இங்க வந்துட்டியா?" ஹேண்ட் பேக்கைப் பார்த்து அப்பா கேட்டார்.

அவர்களைப் பார்த்தும் கொஞ்சம் ஆசுவாசம் கிடைத்த மாதிரி இருந்தது. உள்ளறைக்குப் போய் கொஞ்ச நேரம் படுத்துக் கொண்டாள். ராம்குமாரின் ஞாபகம் திரும்பத் திரும்ப வருவது அவஸ்தையாயிருந்தது. பின்னர் சமையலறைக்குப் போய் அம்மாவுடன் வேலைகளில் ஈடுபட்டதற்கப்புறம் இன்னும் மனசு லேசாகி விட்டது காயத்ரிக்கு. இனி அவன் திரும்பி வருகிற வரையில் இதே பாரமற்ற மனத்துடன் இருக்க முயற்சிக்க வேண்டும் என்று தீர்மானித்துக் கொண்டாள்.

"நாளைக்கு வைத்தீஸ்வரன் சாமி கோயிலுக்குப் போலாமாடி?" என்று அம்மா கேட்டுக் கொண்டிருந்த போது யாரோ கதவு தட்டினார்கள். திறந்தால் ராம்குமார் நின்றிருந்தான்.

காயத்ரி இன்ப அதிர்ச்சி உடலெங்கும் ஓட அப்படியே நின்றாள். ஹைதராபாத்திலிருந்து பேசினவன் அதற்குள் எப்படி இங்கே? நம்ப முடியாத நிலையில் கண்கள் அவன் மேல் நிலைகுத்தி நின்றது.

அம்மா குழப்பத்தோடு இருவரையும் மாறிமாறிப் பார்த்தாள். அவள் கண்களில் சந்தேகம் இருந்தது.

"நீங்க வெளியூர் போயிருக்கிறதா சொன்னாளே இவ...!"

ராம்குமார் சிரித்தான்.

"இல்ல அத்தே! மத்தியானமே வந்துட்டேன். சும்மா ஒரு வெளையாட்டுக்கு லோக்கல்லேர்ந்து ஃபோன் பண்ணினேன்" என்றான். ஓடி வந்து காலைக் கட்டிக் கொண்ட தன்யாவை தூக்கி வைத்துக் கொண்டான்.

என்ன இது விளையாட்டு என்பது மாதிரி ராம்குமாரை அப்பா ஓரக்கண்ணால் பார்த்தார். அவன் முகத்தில் அசடு வழிந்தது. காயத்ரிக்கு அழுகை, ஏமாற்றம், சந்தோஷம், கோபம் என்று எல்லாம் கலந்த ஒரு உணர்ச்சி

யுடன் மலைத்து நின்றிருந்தாள்.

"புறப்படு காயத்ரி..." என்றான் திடீரென்று.

வந்ததும் என்ன கிளம்புவது என்று அம்மா கோபித்துக் கொண்டாள். 'காலையில் போகலாம்' என்றார் அப்பா. காயத்ரிகூட அதையேதான் சொன்னாள் என்றாலும் உடனே ராம்குமாருடன் வீட்டுக்கே கிளம்புவதிலேயே மொத்த விருப்பமாயிருந்தது அவளுக்கு.

"காலைல நான் வேறொரு இடத்துக்குப் போகணும்... இவ இருந்தாத்தான் முடியும். போய்ட்டு அடுத்த வாரம் வர்றோம்..."

அப்பாவையும், அம்மாவையும் எப்படியோ சமாளித்து கிளம்பி விட்டார்கள்.

பஸ் ஸ்டாப்புக்கு நடக்கும்போது சிகரெட் பற்ற வைத்துக் கொண்டு ராம்குமார் சொன்னான்.

"நீ சாயந்திரம் வீட்டுக்கு வந்து இங்க என்னைப் பார்த்ததும் சர்ப்ரைஸ் ஆகணும்னு தான், வந்ததும் பக்கத்து பூத்லேர்ந்து ஃபோன் பண்ணினேன். ஆனா நடந்தது வேற...! நான், உன்னைத் தேடிட்டு வர வேண்டியதாப் போச்சு... ஸாரிம்மா! எம்மேல எதும் கோபமில்லையே"

"என்ன கோபம்?" என்றாள் சன்னமாய். அவன் ஃபோன் பேசி ஏமாற்றியது இப்பொழுது புதிய கோபமாய் உருவெடுத்திருந்தாலும் அதை மீறி ஒரு குதூகலம் மனசில் வந்து உட்கார்ந்திருந்தது.

"போகும்போது உங்கிட்ட சொல்லாம..."

"போதும்..." என்றாள். "அதெல்லாம் எதுக்கு இப்ப?" திரும்ப அவன் கண்களை ஊடுருவிப் பார்த்தாள். மெல்ல அவன் கையைப் பற்றினாள். சிகரெட்டைப் பிடுங்கி ரோட்டோரமாய் வீசினாள். அவன் விரல்களை மென்மையாய் கோத்துக் கொண்டாள்.

இன்னொரு கையை தன்யா பிடித்திருந்தாள். ரைம் பாடிக் கொண்டே வந்தாள்.

"நமக்குக் கல்யாணமாகி அஞ்சு வருஷம் ஆச்சில்லே?" என்றாள் திடீரென்று. ராம் குமார் கோத்திருந்த அவள் கையை இதமாய் இறுக்கினான். அவள் கேட்டதின் அர்த்தம் அவனுக்குப் புரிந்தமாதிரி இருந்தது.

"வீடு வரைக்கும் இப்படியே நடந்தே போயிடலாமா காயத்ரி?" என்றான்.

"போலாமே..." என்று சிரித் தாள்.

இருவரின் கைகளையும், இன்னும் இறுக்கிக் கொண்டாள் காயத்ரி. நடந்து போகிற தூரத்தில்தான் எல்லாமே இருப்ப தாய்ப் பட்டது அவளுக்கு.

கல்கி – பாலு ஜுவல்லர்ஸ் இணைந்து வழங்கும்



வாரம் ஒரு சவரன்

போட்டி – 2

ஸ்ரீ

மூணுக்கென்றால் கோபம் பொத்துக் கொண்டு வந்து விடும் நபரா நீங்கள்? ஆனால் எல்லா சந்தர்ப்பத்திலும், எல்லாரிடத்திலும் கோபத்தைக் கொட்டிவிட முடியாமல் போகுமல்லவா? கஷ்டப்பட்டு எப்படியாவது அடக்கியிருப்பீர்களே! (வெளியே வந்து சபித்திருப்பீர்கள்!) அப்படி, கோபத்தை அடக்கிய அனுபவம் ஒன்றைக் கீழுள்ள கூப்பனில் எழுதியனுப்புங்கள். சிறந்த அனுபவங்கள் பிரசுரமாகி, சன்மானம் பெறும். மிகச் சிறந்த ஓர் அனுபவத்துக்கு ஒரு சவரன் பரிசு! கூப்பன் வந்து சேரக் கடைசித் தேதி 27.1.97. ஆசிரியர் தீர்ப்பே இறுதி.

போட்டி – 2
கோபத்தை அடக்கினேன்:

பெயர்:..

முகவரி:..

....

....

....

நக்சலைட்டுகளை ஆதரிக்கும் நாவலாசிரியர்!



* மகா ஸ்வேதா தேவி

மகாஸ்வேதா தேவி. வயது 71.

இந்த வருட ஞான பீடப் பரிசு பெற்ற வங்க மொழி எழுத்தாளர்.

"என்றென்றைக்கும் மத்திய தர மக்களின் காதலையும் தேவைகளையும்தான் எழுதிக் கொண்டிருக்க வேண்டுமா?'' என்று கேட்கிறார் மகாஸ்வேதா தேவி.

"என்னைப் போலப் பழங்குடி மக்களின், தாழ்த்தப்பட்ட மக்களின் கதையை எழுத வேண்டாம். கல்கத்தா நகரத்தில் பிரச்னைகளா இல்லை? எத்தனை வங்க மொழி எழுத்தாளர்கள் இவற்றைப் பூரணமாக எழுதியிருக்கிறார்கள்?'' என்று ஆவேசமாகக் கேட்கிறார்.

இவரது 'ஆரண்யேர் அதிகார்' (வனங்களுக்கு உரிமை) என்ற நாவல் சாகித்ய அகாடமி பரிசு பெற்றது. சோட்டா நாக்பூரில் பழங்குடி வீரன் பிஸ்ரா முண்டா, பிரிட்டிஷாரை எதிர்த்துப் போராடிய சரித்திர நாவல். நக்ஸலைட் இயக்கத்தில் உயிரிழந்த ஏராளமான இளைஞர்களின் புகழ்பாடும் 'அக்னிகர்ப' (எரிமலை) இவருக்குப் புகழ் சேர்த்த இன்னொரு நாவல்.

பழங்குடியினர், தாழ்த்தப்பட்டவர், வசதியற்றவர், போராளிகள், புரட்சியாளர்கள் எல்லாரும்தாம் இவரது நாவல்களின் பாத்திரங்கள். போலீஸ் காவலில் இருந்த இளைஞனின் மரணத்தை அறிந்து வருந்தும் தாயின் மனநிலையைச் சித்திரிக்கும் இவரது நாவல் 'கைதி எண் 1084ன் தாயார்' மிகவும் பிரசித்தி பெற்ற நாவல்.

இடதுசாரிக்காரர். ஆனால் இடதுசாரி கம்யூனிஸ்ட் அரசைக் கடுமையாகச் சாடுகிறார். 'குற்றங்களும் ஜாதிக் கலவரங்களும் அதிகரித்து, மக்களின் ஆரோக்கியமும் சுகாதாரமும் பாதிக்கப்பட்டது இந்த இடதுசாரி ஆட்சியில்தான்' என்று வன்மையாகக் கண்டிக்கிறார். 'மக்களின் எழுச்சிக்குப் பெயர் பெற்ற மேற்கு வங்கம், இன்று சோர்ந்து துவண்டு போய்க் கிடக்கிறது' என்கிறார் ஆதங்கத்துடன்.

'உப்பு' என்ற இவரது சிறுகதைத் தொகுதியில் பல கதைகள் நக்சலைட்டுகள் பற்றியவை. நக்சலைட்டுகளின் ஆதரவாளர் என்ற முத்திரையைப் பெருமையோடு ஏற்பவர் மகாஸ்வேதா தேவி. பதினைந்து வருடங்களாக வங்கத்திலும், பீகாரிலும் பின்தங்கிய பகுதிகளில்- குறிப்பாக புருலியா மாவட்டத்தில் - பழங்குடியினரின் முன்னேற்றத்துக்காக உழைத்து வருபவர்.

'இப்போது சுயசரிதை எழுதிக் கொண்டிருக்கிறார், 'ப்ரேமா' என்னும் இதழில். இது முடியும்வரை, சிறுகதை, நாவல் எதுவும் எழுதப் போவதில்லையாம்.

'சபர் சமிதி' எனும் பழங்குடியினர் முன்னேற்ற அமைப்புக்கு, தமது ஞானபீடப் பரிசுத் தொகையான இரண்டரை லட்ச ரூபாயைக் கொடுக்கப் போவதாக அறிவித்திருக்கிறார் மகா ஸ்வேதா தேவி.

— சாருகேசி



இந்திய சுதந்தரப் போராட்டத்தின் குறிப்பிடத்தகுந்த சில நிகழ்வுகளை நாட்டிய நாடகமாக வடிவமைத்திருக்கிறார் லட்சுமி விஸ்வநாதன். அவரைச் சந்தித்தபோது...

"ஒரு நாள் இன்டர்நேஷனல் விமன்'ஸ் அசோசியேஷன் கூட்டத்தில் கலந்து கொள்ளப் போயிருந்தேன். இங்கே, சென்னையில்தான். தீரர் சத்தியமூர்த்தியின் மகள் லட்சுமி கிருஷ்ணமூர்த்தி, அந்தக் காலத்து சுதந்தரப் போராட்டச் சம்பவங்கள் சிலவற்றை விவரித்தபோது உடம்பெல்லாம் சிலிர்த்தது. பக்தவத்சலம் அவர்களின் மனைவி இரண்டாவது குழந்தையைப் பிரசவித்தபோது, அவர் ஜெயிலில் இருந்தாராம். வந்து பார்க்க அனுமதி இல்லை! தியாகிகள் அனுபவித்த கொடுமை, காந்திஜி என்ற தனியொரு மனிதரின் தாக்கம் எல்லாம் கண் முன்னால்

எதை எடுப்பது? எதை விடுப்பது?



காட்சிகளாகத் தெரிந்தன. சுதந்தரம் வந்த பாதையில் ஓர் ஐம்பது வருடம் பின்னோக்கிப் பார்க்க வைத்தது. இந்தக் காலத்து இளைய தலைமுறையினர் இந்நாட்டுச் சுதந்தரத்தின் முந்தைய சரித்திரத்தையும், முன்னோர் செய்த தியாகங்களையும் அறியாதிருக்கலாமோ என்ற தாபம் தோன்றிற்று.


"இந்தப் பொன்விழா ஆண்டைவிடப் பொருத்தமான சூழல் வேறு இல்லை. கலைஞர்களின் பங்கும் இலக்கியவாதிகளின் பங்கைப் போலவே இந்தக் கட்டத்தில் முக்கியமானதாகத் தெரிந்தது. சுதந்தரப் போராட்ட காலத்து நாலு முக்கியப் போராட்டங்களை 'சதுர் அங்கம்' என்ற நாட்டிய நாடகமாக அமைத்தேன்!" என்கிறார் லட்சுமி விஸ்வநாதன்.

"ஸ்கரிப்ட்டுக்காக ஆராய்ச்சி ஏதுவும் செய்தீர்களா என்ன?" என்றபோது,

"ஆராய்ச்சி என்று சொல்ல முடியாது. ஆனால் மகாகவி பாரதியாரின் கவிதைகளையே அடிப்படையாக வைத்துக்கொண்டால், ஏற்கெனவே பரிச்சயமான பாடல்கள், ரசிகர்களிடம் உடனடியாக ஒரு சுவாரசியத்தை உண்டாக்கும் என்று தோன்றிற்று. ஆனால் பாரதியின் பாடல்களைப் படிக்கப் படிக்க, எதை எடுத்துக் கொள்ளுவது, எதை விடுவது என்று குழப்பமாகி விட்டது. ஏனென்றால் அவர் அந்தக் காலத்தில் வாழ்ந்தவர். அடக்குமுறைகளுக்கு ஆளான, உணர்ச்சி மிகுந்த கவிஞர். அவர் பாடல்களை மறுபடி மறுபடி பாடப் பாட, எப்படி நாடகத்தை அமைத்துக் கொள்ளுவது என்று ஒரு மாதத்தில் ஒரு வடிவம்



• லட்சுமி விஸ்வநாதன்





‘சுட்ட’பழம்



ஓர் இந்தியன் ஏர்லைன்ஸ் விமானத்துக்கும் ஏர் இந்தியா விமானத்துக்கும் விண்ணில் நேரவிருந்த மோதல், கடைசி நிமிடத்தில் தவிர்க்கப்பட்டது. அந்த இந்தியன் ஏர்லைன்ஸ் விமானத்தில் உள்நாட்டு விமானப் போக்குவரத்துத் துறை அமைச்சர் சி.எம். இப்ராஹிம் இருந்தார். விமானிகளும் சில முக்கிய தொழில்நுட்ப வல்லுனர்களும் மட்டுமே அனுமதிக்கப்படும். ஓட்டுனர் இருக்கை பிரிவில் (cockpit) அப்போது அமர்ந்திருந்தார் இப்ராஹிம்.

— செய்தி

கனிந்த சிந்தனை!

‘இப்ராஹிம் அதிகார துஷ்பிரயோகம் செய்து விட்டார்!’’ என்று சில அகம்பாவம் பிடித்த இதழ்கள் எழுதி வருகின்றன! விமானம் தரையிறங்கும் நேரத்தில், வெளியார் யாருமே காக்பிட்டுக்குள் போக அனுமதி கிடையாது. அப்படியிருக்க அமைச்சர் மட்டும் அங்கு போய் அமர்ந்தது மிகப் பெரிய தவறு! அதனால் விமானிகளின் கவனம் சிதறிப் போயிருக்க வாய்ப்புள்ளது...’ என்றெல்லாம் அங்கலாய்க்கின்றன.

எடுத்ததற்கெல்லாம் அமைச்சர்கள் மேல் - அரசியல்வாதிகள் மேல் பழி போடுவதே வழக்கமாகி விட்டது.

அமைச்சர்கள் காக்பிட்டில் அமராதபோதும் விமான விபத்துகள் நடந்துள்ளனவே! இரண்டு மாதம் முன்பு டெல்லி விமான நிலையம் அருகே இரு விமானங்கள் விண்ணில் மோத, 350 பேர் உயிர் இழந்தார்களே, அப்போது எந்த அமைச்சர் காக்பிட்டில் இருந்தார்?

இப்ராஹிம் அன்று காக்பிட்டில் இருந்ததால்தான், அவருடைய ராசியால்தான் விபத்தே தவிர்க்கப்பட்டது என்பதாகக் கூட இருக்கலாமே...!

அந்த நிகழ்ச்சி நடந்த ஐந்தாம் நாளே, கல்கத்தா விமான நிலையமருகே, அதே போல் தெய்வாதீனமாய் ஒரு விபத்து தவிர்க்கப்பட்டிருக்கிறது! அப்போது அமைச்சரோ, அவர் மனைவியோ, நாய்க்குட்டியோ காக்பிட்டில் இருக்கவில்லை

ஆகவே இப்படி அப்பாவி அமைச்சர்கள் பேரில் அபாண்டமாய்ப் பழி சுமத்துவதை உடனடியாய் நிறுத்த வேண்டும். இல்லாவிட்டால், ஏர் இந்தியா, இந்தியன் ஏர் லைன்ஸ் விமானங்களின் தரம், பராமரிப்பு, விமானிகளின் பணித்தரம் என்று எல்லாவற்றுக்கும் அமைச்சர்தான் பொறுப்பு ஏற்க வேண்டும் என்று அபத்தமாய் வாதாட வேண்டியிருக்கும்!

விமானம் வாங்குவதில் அடிக்கப்படும் பிரும்மாண்ட கமிஷனுக்கே பொறுப்பேற்காமல் கைவிரித்துவிடக்கூடிய அமைச்சர்கள் இந்த சின்ன விஷயங்களுக்குப் போய் தார்மீகப் பொறுப்பேற்க முடியுமா என்ன...!

‘எல்லாம் சரிதான்... ஆனால் விமானத்தில் இத்தனை இருக்கைகள் உள்ளபோது இப்ராஹிம் எதற்காக காக்பிட்டில் போய் உட்கார வேண்டும்?’ என்று கேட்பீர்கள்...

ஒரு மைனர் பெண்ணிடம் முறைகேடாக நடந்து கொண்டதாகக் குற்றம் சாட்டப்பட்டு கைதாகியிருக்கும் அவருடைய தம்பி சி.எம்.காதரிடம் கேட்டால் பதில் கிடைக்குமோ என்னவோ...!

— ‘சில்மிஷா’

கிடைத்தது. அதற்குப் பிறகு நாட்டிய நாடகமாகத் தயாரித்து, டிஜிட்டல் முறையில் ரெக்கார்டிங்குகள் செய்து, ஒத்திகை பார்த்து மேடையேற்ற இரண்டு-மூன்று மாதங்கள் கடுமையாக உழைக்க வேண்டியிருந்தது.’’

‘‘பாரதியைத் தவிர, ‘வழிமறைத்திருக்குதே’ பாடலை நந்தன் சரித்திரத்திலிருந்து எடுத்திருக்கிறீர்களே?’’

‘‘ஆமாம். ஒரே ஒரு பாடல் மட்டும். தீண்டாமை ஒழிப்பு, அந்தச் சமயத்தில் விடுதலை இயக்கத்தோடு ஒட்டி நடந்த முக்கிய நிகழ்ச்சி. அதற்கு கோபாலகிருஷ்ண பாரதியின் பாட்டு மிகப் பொருத்தமாகத் தோன்றிற்று. தாழ்த்தப்பட்ட மக்களுக்குக் கோயில்கள் திறந்துவிடப்பட காந்திஜிதான் காரணம். அதற்காக அதைச் சேர்த்தேன்.’’

‘‘சரி, இதில் போய் ‘பாயும் ஒளி நீ எனக்கு’ வரிகளை எதற்குக் கொண்டு வந்தீர்கள்? பெண் விடுதலை பற்றிச் சொன்னால் போதாதா?’’

‘‘பெண்ணைச் சக்தியாகவும், தாயாகவும் பார்க்கிறதோடு நில்லாமல், காதலியாகவும் பார்க்கிறார் பாரதி. அதற்காகத்தான் அந்தப் பாட்டு. வெறும் சிருங்கார ரசத்துக்காக அல்ல!’’


டெபோரா டன்தான் என்ற அமெரிக்கப் பெண்மணி தியேட்டர் கலையில் படித்துத் தேறியவர். அவர்தான் நாடக ஒத்திகையின்போது தினமும் கூடவே இருந்து, சிறு சிறு மாற்றங்களைச் சொல்லித் திருத்தங்கள் செய்தாராம்.

— சாருகேசி

படங்கள்: **பரத் ராமாம்ருதம்**

குழந்தைகளுக்கு கேளிக்கையும்கொண்டாட்டமும்!

பெரியவர்களுக்கோ அறிவுக் களஞ்சியம்!






23 வது

இந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சி

தீவுத் திடல், சென்னை - 600 009

தமிழகத்தின் தலையாய பொருட்காட்சி. கேளிக்கைகள் பலப்பல. அறிவியல் கண்காட்சிகளும் எண்ணிலா. டோரா டோரா, ஜெயன்ட் வீல், ரெயில் வண்டி, இன்னும்பல இன்பகரமான விளையாட்டு வசதிகள். மேலும் பொது அறிவு வளர்க்கும் கூடங்கள். தமிழக, இதர மாநில, மத்திய அரசுகளின், மற்றும் பொதுத்துறை நிறுவனங்களின் கலைக் கூடங்கள்.



சிறப்பு பஸ் வசதிகளும் உண்டு.

ஒவ்வொரு மணி நேரத்திற்கும் உங்களில் ஒருவருக்குக் கிடைக்கலாம் ஓர் அதிஷ்டப் பரிசு. ஆகவே, உங்கள் பாதிநுழைவுச் சீட்டைப் பத்திரமாக வைத்திருங்கள்

தமிழ் நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம்

சென்னை - 600 004.

இன்றே உங்கள் குடும்பத்துடன் வருகைதாருங்கள்.

பரிசளிப்போர் : • அன்பகம் உணவகம் • ஓம் சக்தி என்டர்டெயின்மென்ட்ஸ்
• தமிழ் நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் • மருதாணி வாலா உகம் ராஜ் & கோ. சென்னை.
• மணிமேகலை பிரசுரம்.

விடுமுறை நாட்களில் சிறப்பு பரிசு அளிப்பவர்கள் :
எச்.எம்.பி.ராவி ..பேன் கம்பெனியினர்

த்ரில்!

கொலை முடிச்சுகள்...!

அந்தக் கிணற்றைச் சுற்றி ஊரே கூடியிருந்தது. அனைவரிடமும் ஒரு படபடப்பு. இது மூன்றாவது முறை. இப்போதுகூட ஒரு குழந்தை. கொலையா? தற்கொலையா? கொலை என்றால் யார் இப்படிச் செய்திருப்பார்கள்?

திண்டுக்கல் அருகிலுள்ள அந்த கிராமத்துக்குப் போலீஸ் வந்தது. கிணற்றுக்குள்ளிருந்த சடலங்களை வெளியே எடுத்துக் கிடத்தினார்கள்.

நாற்பது வயது மதிக்கத்தக்க அந்தப் பெண்ணின் முகம் அடையாளம் தெரியாத படிக்குச் சிதைக்கப்பட்டிருக்கிறது. மூன்றரை வயது மதிக்கத்தக்க குழந்தையின் சடலம் மாத்திரம் தூங்குவதுபோல் முழுதாக இருந்தது!

யார் இவர்கள்?

விசாரித்துப் பார்த்ததில் அந்தச் சுற்றுவட்டாரத்தில் யாருக்குமே அடையாளம் தெரியவில்லை.

நமக்கேன் வம்பு என்று பலரும் அடையாளம் காட்ட மறுக்கிறார்களா? துருவித் துருவி விசாரித்தும் பயனில்லை. இந்த வயதில் தாயும் குழந்தையும் காணாமல் போனதாகக்கூட யாரும் புகார் செய்திருக்கவில்லை. ஆக, இந்த வழக்கும் கிணற்றில் போடப்பட்ட கல்தானா?

யோசித்துக் கொண்டிருந்தார் மதுரை எஸ்.பி. லட்சுமிநாராயணன்.

"சார்!" - சல்யூட் அடித்தபடி நின்றிருந்தார் மணப்பாறை இன்ஸ்பெக்டர்.

"சொல்லுங்க!"

"மாவட்ட எல்லைகளைச் சேர்ந்த போலீஸ் அதிகாரிகள் மீட்டிங்கில் புதுக்கோட்டை இன்ஸ்பெக்டர் ஒரு விஷயம் சொன்னார்!"

"என்ன?"

"அவங்க பக்கத்து கிராமத்திலிருந்து ஒரு தாயையும் குழந்தையையும் காணவில்லைன்னு அவங்களுக்கு ஒரு புகார் வந்திருக்காம்!"

திண்டுக்கல்லுக்கும் புதுக்கோட்டைக்கும் முடிச்சுப் போட்டுப் பார்த்ததில் விஷயம் விளங்குவதுபோல் இருந்தது.

விசாரித்ததில் அங்கே காணாமல் போனவர்கள்தான் இங்கே பிணமாயிருக்கிறார்கள் என்பது புரிந்து போனது.

சம்பந்தப்பட்டவர்களைப் போட்டுத் துருவியதில் அந்தப் பெண் அத்தனை நடத்தையுடையவள் இல்லையென்கிற தகவலும் கிடைத்தது.

புதுக்கோட்டைக்குப் பக்கத்திலுள்ள கிராமத்திலிருந்து குழந்தையோடு மணப்பாறை சந்தைக்கு வந்தவள்தான் இப்படிப் பிணமாயிருக்கிறாள்.

மணப்பாறை வட்டாரத்தில் விசாரிக்கத் தொடங்கியது போலீஸ். இப்படி போலீஸ் வலை விரிக்கத் தொடங்கியபோது, அங்கிருந்த இரண்டு மில் தொழிலாளிகள் காணாமல் போனார்கள்.

அவர்கள் ஏன் தலைமறைவாக வேண்டும்? போலீஸ் உஷாரானது. அந்த இரண்டு பேருமே பெண்கள் விஷயத்தில் பலவீனமானவர்கள் என்றார்கள் தெரிந்தவர்கள்.

ஆகா! நிச்சயம் இந்தக் கொலைகளுக்கும் அவர்களுக்கும் தொடர்பு இருந்துதான் ஆக வேண்டும்!

கணக்கு சரியாக இருந்தாலும் நிரூபணம் வேண்டாமா?

மணப்பாறை அருகிலுள்ள



அய்யலூர் ரயில்வே ஸ்டேஷனில் தற்செயலாக விசாரித்த போது, குறிப்பிட்ட ஒரு தினத்தில் மூன்றே டிக்கெட்டுகள்தான் திண்டுக்கல்லுக்கு வாங்கப்பட்டிருந்தது தெரிந்தது.

அப்படியானால் அந்தப் பெண், அந்த மில் தொழிலாளிகள் இருவர் ஆகியோருக்கான டிக்கெட்களாகத்தான் இருக்க வேண்டும். மூன்றரை வயதுக் குழந்தைக்கு டிக்கெட் அவசியமில்லையே!

திண்டுக்கல் ஸ்டேஷனில் விசாரித்தபோது அவர்களுக்கு ஒன்றும் தெரியவில்லை. ஸ்டேஷனுக்கு வெளியே பொழுது போக்காகப் பெண்களைக் கிண்டலடிக்க வரும் விடலைகளை விசாரித்த போது, "ஆமாம், ஒரு நாள் மாலை மயங்கி இருள் படருகிற நேரம் இரண்டு பேர் ஒரு பெண்ணை அழைத்துக் கொண்டு சென்றார்கள். கூடவே ஒரு குழந்தை. அந்தப் பெண் அழகாக இருந்ததால் நாங்களும் கிண்டலடித்தோம்!" என்றார்கள்.

"அவர்களைப் பார்த்தால் அடையாளம் காட்ட முடியுமா?"

"நிச்சயமாக!"

உடனடியாக அந்த இரண்டு மில் தொழிலாளிகளும் கைது செய்யப்பட்டனர். அவர்கள்தான் என்று ஊர்ஜிதம் செய்தனர் விடலைகள்!

மணப்பாறை சந்தைக்கு வந்த அந்தப் பெண்ணை திண்டுக்கல் ஜமீன்தாரிடம் சேர்த்து வைப்பதாகக் கூறி ஆசை காட்டி அழைத்துச் சென்றார்களாம்.

திண்டுக்கல்லில் இறங்கியபோது, பொழுது சாய்ந்து விட்டது. குழந்தையோடு அவளை பக்கத்து கிராமத்துக்கு அழைத்துச் சென்றவர்கள், அவளை அனுபவித்தார்கள்.

இறுதியில் அவளைக் கொன்று, அடையாளம் தெரியாமல் இருப்பதற்காக அவள் முகத்தில் கல்லைப் போட்டுச் சிதைத்திருக்கிறார்கள். பிறகு கிணற்றில் வீசியிருக்கிறார்கள்.

குழந்தை? அதைவிட்டு வைத்தால் அதுவே ஒரு வேளை அவர்களைக் காட்டிக் கொடுத்து விடக்கூடும் என்று நினைத்து அதையும் கொலை செய்து கிணற்றில் போட்டிருக்கிறார்கள்.

கூடவே, அந்தப் பெண்ணின் கழுத்தில் கிடந்த தங்கச்சங்கிலியை எடுத்துக் கொண்டு வந்து அடகு வைத்திருக்கிறார்கள்.

எல்லாமே அவர்களுக்கு எதிரான சாட்சியங்களாக ஆக பழைய கொலைகளையும் அவர்கள் ஒப்புக் கொண்டார்கள். கொலைகளின் முடிச்சுகள் ஒவ்வொன்றாக அவிழ்ந்து, சட்டத்தின் பிடியிலிருந்து அவர்களால் தப்ப முடியாமல் போனது.

(முன்னாள் தமிழக காவல்துறையின் தலைவர் வி.ஆர்.லட்சுமி நாராயணன் சொன்ன இந்தச் சம்பவம் 58-ல் நடந்தது)

சந்திப்பு : **பிரின்ஸ்**

எமர்ஜென்ஸி பற்றி என்ன தெரியும்

ஜெயலலிதாவுக்கு...?

'எனக்கு ஜெயிலில் அடிப்படை உரிமைகள் கூட மறுக்கப்பட்டன. 'எமர்ஜென்ஸி கால கட்டத்தை நாடு கடந்து கொண்டிருக்கிறதோ என்று நினைக்கத் தோன்றியது!' - ஜாமீனில் வெளிவந்தவுடன் நிருபர்களுக்கு அளித்த பேட்டியில் இவ்வாறு சொன்னார் ஜெயலலிதா. பலரும் ஆச்சரியப்பட்டார்கள். ஒருவேளை எமர்ஜென்ஸி பற்றித் தெரியாததால் சொல்கிறாரா அல்லது அந்த இருண்ட காலத்தில் ஜெயிலில் இருந்தவர்களைக் கிண்டல் செய்கிறாரா? எது எப்படியிருந்தாலும், வரலாற்றை ஜெயலலிதாவும் தெரிந்து கொள்ளட்டும் என்று எமர்ஜென்ஸியின் போது ஜெயிலில் இருந்த மூன்று பேரைச் சந்தித்தோம்....

எஸ்.எஸ்.மாரிசாமி :



அப்போது நான் தி.மு.க.வின் ராஜ்யசபா உறுப்பினர். அவசர நிலைக் காலத்தில் என்னை இந்திரா காங்கிரஸுக்கு இழுக்க முயற்சிகள் நடந்தன. நான் மறுத்து விட்டேன். இதனால் காங்கிரஸ்காரர்களுக்கு எரிச்சல். தவிர, எனது காண்டீபம் பத்திரிகையில் வந்த செய்தி ஒன்றால் ராஜ்யசபாவில் எனக்கும் இந்திராகாந்திக்கும் கடுமையான மோதல் ஏற்பட்டது. இந்தியர்களைத் தாக்கி சீன அரசு ஒரு வெளியீட்டைக் (Publication) கொண்டு வந்தது. "அந்த வெளியீட்டுக்காக இந்தியா அவமானப்பட வேண்டும், தக்க பதிலடி கொடுக்க வேண்டும். இல்லையேல் இந்திராகாந்தி ராஜினாமா செய்ய வேண்டும்' என்று எனது பத்திரிகையில் எழுதியிருந்தேன். அது குறித்துத் தான் ராஜ்யசபாவில் மோதல். ஆகவே சமயம் எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள். இங்கே தி.மு.க. அரசை கலைத்த பின் வலை வீசத் துவங்கி விட்டார்கள்! இதைத் தெரிந்து கொண்ட நான், டெல்லியிலிருந்து சென்னை வந்து போலீஸ் கமிஷனருக்கு நான் வந்து விட்டதைத் தெரிவித்தேன்.

இரவு எட்டரை மணி வாக்கில் ஜெயிலுக்கு முன்பு எங்களை 'அழைத்துச்' சென்ற கார் நின்றது. வாசலில் சிறைக் காவலர்கள் அணி, அணியாக வந்து 'பரேட்' செய்வதும் உள்ளே போவதுமாக இருந்தார்கள். அந்தச் சூழ்நிலையே கொஞ்சம் பயமுறுத்துவதாக இருந்தது. சரியாக இரவு ஒரு மணிக்கு உள்ளே கூப்பிட்டார்கள். நான் கொண்டு வந்த பெட்டியைச் சோதித்து 'அது என்ன... இது என்ன' என்று கேட்டு எல்லாவற்றையும் வெளியே எடுத்துப் போட்டார்கள். "எல்லாம் அத்தியாவசியமானது. எனக்கு வேண்டும்" என்று சொன்னபோது, "வாயை மூடுடா" என்று காவலரிடமிருந்து மரியாதையில்லாமல் பதில் வந்தது. (பின்னரும் இதே "மரியாதை"தான் தொடர்ந்தது!) உள்ளே தரதரவென்று இருட்டில் இழுத்துக் கொண்டு போனார்கள்.

குமார் ஒரு பர்லாங் சென்றபின், வரிசையாக இருந்த அறைகளில் ஒன்றில் என்னை உள்ளே தள்ளினார்கள். உள்ளே யாரும்

இல்லை. கும்மிருட்டு. ஆனால் சுவரை ஒட்டினாற்போல் கறுப்பாக ஏதோ உருவம். துர்நாற்றம். எனக்கு ரத்த அழுத்த நோய் வேறு இருந்ததால் கையைக் கட்டிக் கொண்டு உட்கார்ந்தே அன்றிரவைக் கழித்தேன்.

காலை எழுந்து பார்த்தபோது, அந்தக் கறுப்பு உருவம் ஒரு பெரிய பானை. அதில் முழுக்க சிறுநீர்! பிறகு ஆறு மணிக்குக் கையில் அலுமினியத் தட்டுக் கொடுத்து கூழ் ஊற்றினார்கள். அந்தத் தட்டைப் பார்த்தாலே வாந்தி வரும். கிட்டத்தட்ட ஒன்றரை மாதம் நாங்கள் யாரையும் சந்திக்க அனுமதிக்கவில்லை. சாம்பாரில் வேண்டுமென்றே ஏகப்பட்ட உப்பைப் போட்டுக் கொடுப்பார்கள். வாயில் வைக்க முடியாது. பத்துக்குப் பத்து அறையில் ஏழு பேரை அடைத்து வைத்திருந்தார்கள். இத்தனைக்கும் அரசியல் காரணங்களுக்காகக் கைது செய்யப்பட்டவர்கள் நாங்கள். ஜெயலலிதாவுக்கு வழங்கிய சலுகைகளைப் போல் எங்களுக்குக் கொடுத்திருந்தால், பத்து மாதம் என்ன, பத்து வருடங்கள் கூட ஜெயிலில் இருந்திருக்கலாம்!

நெல்லை ஜெபமணி :



ஒன்பதாவது பிளாக் என்றாலே எல்லோருக்கும் அலர்ஜி. காரணம் தொழுநோய் வந்த கைதிகளை அடைக்கும் பிளாக். அங்குள்ள பத்து அறைகளில் அறைக்கு ஏழு பேர் வீதம் தி.மு.க. வினர் உட்பட என்னையும் அடைத்து வைத்திருந்தார்கள். நான் கொண்டு போன அத்தியாவசியமான பொருட்கள், மாத்திரைகளை வாசலிலேயே பிடுங்கிக் கொண்டார்கள். கொட்டடியில் சற்று மேடான இடத்தில் உட்கார்ந்தபோது, உள்ளே இருந்த தி.மு.க.வினர் 'தரையில் உட்காருங்கள்' என்று சைகை காட்டினார்கள். காவலர்கள் என்னை வெளியே கூப்பிட்டார்கள். கொட்டடிக்கு வெளியே வந்து, மற்றவர்கள் பார்வையில் இருந்து மறையும் இடத்தில் திடீரென்று பின்பக்கம் கழுத்தில் ஒரு குத்து. கண்கள் வெளியே வந்து விழும் போல இருந்தது. அதைச் சமாளிப்பதற்குள் முன்பக்கமிருந்து வயிற்றில் ஒரு குத்து. கிட்டத்தட்ட பதினைந்து இருபது நாட்களுக்கு இந்தத் தாக்குதலில் ஏற்பட்ட வலியினால் துடித்துக் கொண்டிருந்தேன். ஜெயில் டாக்டரின் கருணை காரணமாக, இரண்டொரு முறை வெளியுலகைக் காண முடிந்தது. ஆனால் அதற்கப்புறம் அதற்கும் தடை... சுதந்திரப் போராட்டக் காலங்களிலும், நான் சிறையில் இருந்திருக்கிறேன். கடுமையான தண்டனை கொடுப்பார்கள். ஆனால் 'மிசா' போன்று மோசமாக நடத்தியதில்லை. சிறை என்றால் சிறைதான். ஜெயலலிதா சினிமா உலகைச் சேர்ந்தவர்; வசதியாக வாழ்பவர் அல்லவா! அதனால்தான் ஏகப்பட்ட சலுகைகள் கொடுத்தும் அவருக்குத் திருப்தி உண்டாகவில்லை!

'மிசா' கணேசன் :



ஜெயில் வாசலிலிருந்து நிர்வாணமாக்கி அடித்தே என்னைக் கொட்டடிக்குக் கொண்டு சென்றார்கள். எங்கள் ஏழு பேருக்கு ஒரு பானையில் குடி தண்ணீர்; இன்னொரு பானை சிறுநீர் கழிப்பதற்கு. அந்த சிறிய சிறுநீர்ப் பானை நிரம்பி வழிய, நாங்கள் உட்காரக் கூட இடம் இல்லாமல் திண்டாடுவோம். போதாததற்கு மூட்டைப்பூச்சி; கொசு! இரவு யாருக்காவது இயற்கையின் உந்துதல் வந்து விட்டால் பானையைத்தான் பயன்படுத்த வேண்டும். அதுவும் ஏழு பேருக்கு நடுவில். தவிர, இரவு ஏழு, ஏழு பேராக வெளியே கொண்டு வந்து ஆயுள் தண்டனைக் கைதிகளைக் கொண்டு எங்களை அடித்து நொறுக்குவார்கள். எங்கள் அடிப்படை வசதிகளுக்காக உண்ணாவிரதப் போராட்டம் செய்ய வேண்டி வந்தது. உறவினர்கள் எங்களைப் பார்க்கவும் அனுமதி இல்லை.

மாற்று உடை கூட இல்லாமல் பல நாட்கள். படிக்க பத்திரிகைகள் கிடையாது. வெளியே என்ன நடக்கிறது என்பது கொஞ்சமும் தெரியாது. பின்னால் இந்தக் கொடுமைகளைப் பற்றி விசாரித்த நீதிபதி எம்.எம். இஸ்மாயீல் அவர்களின் பரிந்துரையின் பேரில்தான் கொட்டடியிலேயே கழிப்பறை கட்டினார்கள்! கைக்குட்டையிலிருந்து பிஸ்கட், ஆப்பிள், பிஸ்லேரி தண்ணீர், மெத்தை, மின்விசிறி என்று சகல வசதிகளையும் ஜெயிலில் அனுபவித்த ஜெயலலிதா இவ்வாறு பேசினால் மக்கள் என்ன எதையும் நம்பும் ஏமாளிகளா?

சந்திப்பு : **ப்ரியன்**

மாவிளக்கு எண்ணெய்க் குழி மாதிரி இருந்தது அந்தப் பிரதேசம். 'கனகக் குன்னு பேலஸ்' என்றார்கள். மலையிலே கலை வண்ணம். ராஜாக்களின் கைவண்ணம். ஒரு தம் பிடித்தால் நாற்பது வினாடிகளில் ஏறிவிட முடிகிறது. அந்தக் குன்றின்மேல், உச்சியில் அழகாகக் குளம் போல வெட்டி மாளிகை கட்டியிருந்தார்கள். கேரள கவர்ன்மெண்ட்டில் உத்தியோகம் பார்க்கிற கொஞ்சம் புண்ணி யாத்மாக்களுக்கு இதுதான் ஆபீஸ்.

அபாரமான காற்றும் வர்ணிக்கவே முடி யாத அமைதியும் ஏஷியன் பெயின்ட்ஸின் பச்சை டிஸ்டெம்பரைப் பானை பானையாகக் கவிழ்த்தாற்போன்ற இயற்கைக் கொடையுமான மிகப் பரந்த திறந்தவெளி. அங்கேதான் திரைப் பட விழா.

எட்டு வருஷங்களுக்குப் பிறகு மறுபடி திருவனந்தபுரத்தில் நடக்கிற இந்தத் திரைப் பட விழாவுக்கு ராஜ்குமாரைக் கூப்பிடாததோ, அதன் பொருட்டு இதர மாநிலத் திரை வித்தகர்கள் வராததோ, நியூஸ் பேப்பர்களில் பக்கம் பக்கமாக பாலிடிக்ஸ் பண்ணப் பட்டதோ பெரிய பாதிப்பு ஏற்படுத்தி விட வில்லை. கேரள அரசு மட்டுமின்றி, மக்களும் தம் வீட்டு விசேஷம் மாதிரி அத்தனை உற்சா கம் காட்டியது ஆச்சர்யமாக இருந்தது.

தியேட்டர் பெயரைச் சொன்னால் ஆட் டோக்காரர்கள் அங்கே காட்டப்படுகிற படம் எந்த நாட்டினுடையது, யார் டைரக்டர் என்று துல்லியமாகச் சொல்கிற விஷயம் வேறெங்கும் காணக்கிடைக்காதது.

இ.கே. நாயனார், சி.எம். இப்ராகிம் என்று தொடக்க விழாவை நிலையக் கலைஞர்களைக் கொண்டேதான் நடத்தினார்கள். சாருஹாசன், வேணுவுக்கும் திலகனுக்கும் என்ன ஆயிற்று என்பது தான் ஆங்காங்கே முணுமுணுக்கப் பட்ட விஷயம். (நடிகைகளில் தமிழ், தெலுங்கு, மலையாளம் என்கிற பாகுபாடு இல்லை என் பது ஒரு வசதி.)

சி.எம். இப்ராகிம் பேசிய போது இந்த பாலி டிக்ஸ்களைக் கடந்து இந்த விழா சிறப்பாக நடைபெற அரசு எத்தனை மெனக்கெட்டிருக் கிறது என்பதை, லேசாகச் சுட்டிக்காட்டியது உருக்கமாக இருந்தது.

பொதுவாக இதுமாதிரி விழாக்களில் பேசு பவர்கள் 'கிரேட் பிளெஷர்', 'வா(ர்)ம் வெல்கம்' (இப்ராகிம் பாஷையில் 'வாற்றம் வெல்கம்') 'எக்ஸ்ட்ரீம்லி ஹாப்பி' போன்ற சில வார்த்தை களையே அடிக்கடி உபயோகப்படுத்துவார்கள்.

ஆனால் தகவல் ஒலிபரப்புத் துறை அமைச் சரின் சினிமா ரசனை எத்தனை உயர்வானது என்பதை இங்கே புரிந்து கொள்ள முடிந்தது : "உலக சினிமா எத்தனையோ சாதனைகளைப் பார்த்துக் கொண்டிருக்கும் வேளையில், நம் நாட்டுப் படங்கள் மட்டும் உருவத்திலும் சரி; உள்ளடக்கத்திலும் சரி... மிகவும் மோசமான தாகவே பெரும்பாலும் அமைந்து வருகின்றன. திரை வித்தகர்கள் இதற்கு என்ன செய்யப் போகிறார்கள்?" என்று அவர் கேட்டபோது கூடியிருந்த சுமார் ஆயிரம் பேரும் வாய் பிளந் தார்கள்!

நாயனார் இன்னும் ஒருபடி மேலே போய் விட்டார். "பொதுவாக Good film, Bad film என்று இரண்டு வகையாக சினிமாவைப் பிரிப்பார் கள். இன்னொரு பிரிவைச் சேர்க்க வேண்டும். Ugly films!"

அதிகமாக மலையாளப் படங்களைப் பார்த்தே இப்படிச் சொல்கிறவரை ஒரு வாரம்

ஆட்டோக்காரர்களின்

அப்பச்சன், ஷோபனா தவிர வேறு திரை முகங்கள் கண்ணில்படவில்லை. ஷோபனா, நாயனார் குத்துவிளக்கேற்ற உதவி செய்வதற் காக சென்னை மகாநகரிலிருந்து பரதநாட்டிய டிரெஸ்ஸில் பறந்து வந்து, அத்தனை தூரம் வந்ததற்காக ஐந்தில் இரண்டு திரிகளைத் தானே ஏற்றிவிட்டு, உடனே கிளம்பி விட்டது பார்க்கத் தமாஷாக இருந்தது.

மற்ற மாநில சினிமாக்காரர்கள் வராதது சரி; மம்முட்டிக்கும் மோகன்லாலுக்கும் கோடம்பாக்கத்துக்குப் பிடித்து வந்து வைத் தால் என்ன சொல்வாரோ?

உலகம் முழுவதிலுமிருந்து பத்திரிகை யாளர்களும் சினிமா கலைஞர்களும் பார்வை யாளர்களும் வந்து குழுமியிருக்கிறார்கள், திருவனந்தபுரத்தில். இன்னும் பத்து நாட் களுக்கு விழா இருக்கிறது. எல்லாவற்றிலும் கவனமாக ஏற்பாடுகள் செய்திருக்கும் கேரள அரசு, இரண்டு விஷயத்தில் கோட்டை விட்டு விட்டது.

சினிமா ஞானம்!


1. திரைப்படவிழாப் படங்கள் காட்டப்படுகிற தியேட்டர்கள் ஒவ்வொன்றும் நவக்கிரகங்கள் மாதிரி வேறு வேறு திசையில் பார்த்துக் கொண்டு தள்ளித் தள்ளி இருக்கிறது. ஆட்டோவுக்குக் கொடுத்தே பழுத்து விடும். இது போதாதென்று விழா விவரங்கள் தரும் இன்ஃபர்மேஷன் ஆபீஸ், (தைக்காடு கெஸ்ட் ஹவுஸ்) வேறு ஒரு மூலை. தொடக்க விழா அவசரங்களில் இருந்த இந்திய. திரைப்பட விழா அமைப்பின் இயக்குநர் மாலதி ஸஹாயிடம் அரை நிமிடத்திற்கும் குறைவான நேரம் இது பற்றிப் பேச நமக்கு வாய்ப்புக் கிடைத் தது. 'ஒவ்வொரு மாநிலத் தலைநகரி லும் அரசு தியேட்டர்கள், இரண்டு மூன்று – ஒரே காம்ப்ளெக்ஸாகக் கட்டலாமே? இதுமாதிரி விழாக் களுக்கு சௌகர்யமாக இருக்குமே?'

அவர் பதில் சொல்லவில்லை. தலையாட்டிவிட்டுப் போய் விட் டார். பேசியிருந்தாலும் 'இதெல்லாம் அந்தந்த மாநில அரசு முடிவெடுக்க வேண்டிய விஷயம்' என்றுதான் சொல்லியிருப்பார்.

இரண்டாவது பிரச்னை, உணவு. உலகத்திலுள்ள ஏனைய ஜீவராசிகள் அத்தனை பேரும் கேரளாக்காரர்கள் போலவே நேந்திரம் பழ உணவின் சகல சாத்தியங்களையும் (நேந் திரங்காய்ப் பொரியல், நேந்திரம்பழ வடை, நேந்திரம்பழ பஜ்ஜி, நேந்திரம்பழ ஜூஸ்!) விரும்புவார்கள் என்று நினைத்து விட்டார்கள். சொல்லி வைத்தாற் போலத் தொடக்க விழா நடைபெற்ற குன்றிலும் இதர ஹோட்டல் களிலும் தியேட்டர் கான்டீன்களிலும் ஒரே மாதிரி அசட்டுத் தித்திப்புடன் உணவு வகை கள்.

மைக் பால்-டி மோர் என்கிற வெள்ளைக் காரப் பத்திரிகையாளர், கைரளி தியேட்டர் கான்டீன் வாசலில் எனக்குப் பழக்கமானவு டன் கேட்ட முதல் கேள்வி :

"இத்தனை நேந்திரம்பழம் சாப்பிட்டு வயிறு கெட்டுப் போனால் தைக்காடு கெஸ்ட் ஹவுஸில் ட்ரீட்மெண்ட் தருவார்களா?"



• துவங்கி வைக்கிறார் நாயனார்....

எப்போதும் போல் அல்லாமல் இந்த வருஷம் விழாவுக்கு நல்ல படங்களைத் தேடித் தேடி சேகரித்திருப்பதாகச் சொன்னார்கள். பரபரப்பேற்படுத்திய ஷபானா ஆஸ்மியின் FIRE, பன்னிரண்டே லட்சத்தில் தயாரான அற்புத மலையாளக் காவியம் தேஷாடனம், ஷ்யாம்பெனகலின் காந்தி கதை எல்லாம் இங்கே அரங்கேறு கின்றன. FOCUS OF SOUTH AFRICA என்று தென்னாப்பிரிக்கப் படங்களின் சிறப்புத் திரையிடல் வேறு இருக் கிறது. ஏற்கெனவே சொல்லியிருந்தது போல, தமிழ்ப் படங்கள் மருந்துக்கும் ஏதுமில்லை. (இதற்காக ஏன் யாரும் விழாவைப் புறக்கணிக்க வில்லை?)


நமக்குக் காணக்கிடைத்த சில குறிப்பிடத் தகுந்த படங்களைப் பற்றி அடுத்த வாரம்.

திருவனந்தபுரத்திலிருந்து : **ஆர்.பி.ஆர்.**

படம் - நன்றி : **தினமணி**

TVமர்சனம்

தரம் ரசிகர்கள் மனம் வைத்தால்தான் உயரும் என்று சூசகமாய்த் தமது சிற்றுரையில் கூறி சமாதானம் தேடிக் கொண்டார்!



●● ஆப்பிரிக்காவிலுள்ள பல்வேறு வனவிலங்கு சரணாலயங்கள் வழியே பயணித்த காமிராவுடன் நாமும்.. பி.பி.சி.யின் இந்த ஒளிபரப்பில் வரிக்குதிரைகளின் ஓட்டம் ஒருபுறம்; பேட்டி காணப்பட்ட ஒரு காட்டுவாசி அந்த வரிக்குதிரைகள் எழுப்பும் ஒலிகளைத் தத்ரூபமாய் இமிடேட் செய்து, எந்த ஒலி என்ன உணர்வை உணர்த்துகிறது என்று விளக்கி வியப்பில் ஆழ்த்தி விட்டார்!

●● எட்டயபுரத்தில் ஒருமுறை டி.கே. பட்டம்மாள் கச்சேரி. மகாகவி பாரதியார் பாடல்களை அவர் பாடியபோது ரசிகர்களி டையே அமர்ந்திருந்த ஒரு பெண்மணி கண்ணீர் பெருக்கிக் கொண்டிருந்தார். நிகழ்ச்சி முடிந்ததும் மேடையேறி வந்து வாழ்த்தி உணர்ச்சிவசப்பட்டார் அப்பெண்மணி... விசாரித்தபோது தெரிந்தது அவர் பாரதியாரின் மனைவி...! "நீ பாடினதை அவர் இருந்து கேட்காமல் போய்ட்டாரே..." என்று மனம் கசிந்திருக்கிறார்.

பட்டம்மாள் தமது டீ.வி. பேட்டியில் இதைக் குறிப்பிட்டபோது உருக்கமாய் இருந்தது. இசைப் பிரியர்களுக்கும் இளம் வித்வான்களுக்கும் ஏராளமான குறிப்புகள் அந்த சிறிய நிகழ்ச்சி மூலம் கிடைத்தது.

●● சினிமா விருதுகள் வழங்கும் விழா தூர்தர்ஷன் சென்னை சானலில். சிறந்த கவர்ச்சி நடிகைக்கான விருது ஜோதி மீனாவுக்கு என்று அறிவித்தபோது நொந்து போனோம். கவர்ச்சி காட்டி நடிப்பது வியாபாரக் கட்டாயம் என்பதே கொடுமை... அதுவே விருதுக்குரிய விஷயமா...! சிறந்த பாடலாசிரியர் விருது பெற்ற வைரமுத்து, சினிமாவின்

●● 'பிரியமுடன் ராதிகா'வுடன் சிவசங்கரி பேசினார், ஞாயிறு தொலைக்காட்சியில். சர்வாலங்கார பூஷிதையாக நகைகள் அணியும் பழக்கத்திலிருந்து இன்றைய இளைய தலைமுறைப் பெண்கள் விடுதலை பெற்றுக் கொண்டிருப்பதாகக் குறிப்பிட்டார் சிவசங்கரி. 'அப்படியானால் நகைக் கடைகளில் ஏன் இத்தனை கூட்டம்?' ராதிகாவின் இந்தக் கேள்விக்குச் சரியான பதில் இல்லை சிவசங்கரியிடம். 'இன்றைய ஆண்கள் பெண்களை விஞ்சுகிற அளவுக்கு அழகு நிலையங்களைத் தேடி ஓடுவதேன்? இதென்ன புது கலாசாரம்?' இருவரும் அலசியதில் அதை ஆண்களிடம் தான் கேட்க வேண்டும் என்கிற விடைதான் இறுதியில். ஆண்-பெண் நட்பை இன்னமும் சரியான முறையில் நமது சமூகம் புரிந்து கொள்ளவில்லை. அதுவும் தம்மைப் போன்ற ஒரு நடிகை ஓர் ஆண் நண்பருடன் ஹோட்டலுக்குச் சென்று சாப்பிட்டால் கூட 'இந்த நடிகை இன்னொருடன் ஹோட்டலில் ஜல்சா!' என்றுதான் பத்திரிகையாளர்களும் எழுதுகிறார்கள் என்று வருத்தப்பட்டார் ராதிகா. இதோடு ராதிகா சொன்ன இன்னொரு விஷயம் சுவாரஸ்யமானது: கிசுகிசுக்கள் வருவது பற்றி நடிகைகளை விட நடிகர்கள்தான் அதிகம் பயப்படுகிறார்கள். சில நடிகர்கள் தங்களைப் பற்றி கிசுகிசுக்கள் வராமல் இருப்பதற்காகக் கூட பணம் கொடுக்கிறார்கள்!

- 'டிஸ்'

தில்லி நியூஸ் :

மீண்டும் அத்வானி?

● இந்த ஆண்டில் அத்வானி பி.ஜே.பி. தலைவர் பதவியிலிருந்து ஓய்வுபெறுகிறார். தொடர்ந்து இரண்டு ஆண்டுகள் தலைவராயிருந்தவர் அத்வானி. அடுத்த முறையும் அவரையே தலைவராக்க முயற்சிகள் நடக்கின்றன. பிப்ரவரியில், திருவனந்தபுரத்தில் நடக்கப் போகும் தேசிய கவுன்சில் கூட்டத்தில், ஒருவரே மூன்று வருடங்கள் தொடர்ந்து தலைவராக இருக்கலாம் என்று திருத்தம் கொண்டு வரப்பட இருப்பதைக் கேட்ட அத்வானி, தடுத்து விட்டாராம். ஆனால் அவருக்குக் கட்சியில் ஒரு முக்கியப் பதவியைக் கொடுத்தே ஆக வேண்டும் என்பதில், சுஷ்மா சுவராஜ், கோவிந்தாசார்யா, வெங்கைய நாயுடு, பிரமோத் மகாஜன் ஆகியோர் வெகு தீவிரமாக இருக்கிறார்கள்.



• தேவேகௌடா



• அத்வானி

● சி.பி.ஐ.யின் இணை இயக்குநர் பி.ஆர். லால், சமீபத்தில் நடந்த தமது துறை அதிகாரிகள் கூட்டத்தில், ஊழல் வழக்குகளில், சம்பந்தப்பட்ட அரசியல்வாதிகளின் குறுக்கீடு மிகப் பெரிய தடையாக இருப்பதாகக் குறிப்பிட்டது, பிரதமருக்குப் பிடிக்கவில்லை. 'எந்த அடிப்படையில் அப்படிச் சொன்னீர்கள்?' என்று அவரிடம் விளக்கம் கேட்டிருக்கிறார், ஒன்றுமே தெரியாத மாதிரி!

● ஹரியானா வேளாண்மைப் பல்கலைக் கழக விழா ஒன்றில் பேச பிரதமர் தேவேகௌடா போனார். கூடவே முன்னாள் துணைப் பிரதமர் தேவிலாலையும் கூட்டிக் கொண்டு போனார். போனதோடு சும்மா இருந்திருக்கலாம். 'தாவு'வைக் கொண்டே குத்துவிளக்கை ஏற்றச் சொன்னார். பக்கத்தில் உட்கார்ந்திருந்த ஹரியானா முதல்வர் பன்சிலாலுக்கு முகம் ஜிவுஜிவு என்று சிவந்து விட்டதை, ரசித்துக் கொண்டிருந்தாராம் பிரதமர்!

● தேர்தல் கமிஷன், பஞ்சாபில் பிப்ரவரியில் தேர்தல் நடத்தப் போகிறோம் என்று திடு திப்பென்று அறிவித்திருப்பது, பஞ்சாப் அரசுக்கு மட்டுமல்ல; உள்துறை அமைச்சருக்கோ, பிரதமருக்கோ கூட முன் கூட்டியே தெரியாதாம். கில், சேஷனை விட ஒரு படி மேலே போய் விட்டார் என்கிறார்கள்!

● மத்திய கேபினட் செயலர் டி.எஸ்.ஆர். சுப்பிரமணியத்துக்கு ஒரு

வருட எக்ஸ்டென்ஷன் நிச்சயம் கிடைக்கும் என்று பேசப்பட்டது. சில நாட்களுக்கு முன்பு அவருக்குப் பெரிய வீடு ஒன்று ஒதுக்கப்பட்டது. அப்போதே விஷயம் தெரிந்து விட்டது. அப்புறம் எக்கச்சக்கமான மீட்டிங்குகளில் பேசினார் டி.எஸ்.ஆர். சுப்பிரமணியம். பிரதமரின் நம்பிக்கையைப் பெரிதும் பெற்று, அவர் மனசைக் கவர்ந்து விட்டார் என்கிறார்கள். ஊழலை ஒழிப்பதற்கு நிர்வாகத்தில் உள்ள வழிமுறைகள் பற்றி தேவேகௌடா அவரிடம் யோசனை கேட்டிருந்தார். டி.எஸ்.ஆர். யோசனைகள் தெரிவித்ததோடு, ஏழைகளின் நல்வாழ்வுக்கான சில முக்கியத் திட்டங்களையும் பிரதமரிடம் கொடுத்திருக்கிறார். அத்தோடு நின்று விடவில்லை. மாநில பிரதம செயலர்கள் மாநாடு கூட்டி, அரசுத்துறை நிர்வாகிகள் பொறுப்போடு செயல்பட வேண்டும் என்று உருக்கமாகச் சொற்பொழிவு நிகழ்த்தியிருக் கிறார். பிரதமர் அசந்து போய் விட்டாராம். டி.எஸ்.ஆர். சுப்பிரமணியத்தின் எக்ஸ்டென் ஷன் சமாசாரம் அப்போதே உறுதியாகி விட்டது.

● நூற்றுக்கணக்கான டிசம்பர் மாத டெலிபோன் கட்டண பில்கள் கேட்பாரற்று ஜன்பத் சாலையில் சிதறிக் கிடந்ததை, ஒரு பத்திரிகையாளர் பார்த்துவிட்டு, தில்லி மகாநகர் டெலிபோன் அலுவலகத்துக்கு போன் செய்திருக்கிறார். துளியும் அக்கறையில்லாத பதில் வந்ததாம். மறுபடி மறுபடி போன் செய்து பார்த்திருக்கிறார். 'எங்கள் அக்கவுன்ட்ஸ் இலாகாவுக்குச் சொல்லி விடுகிறோம்' என்று சொல்லி, போனை வைத்து விட்டார்கள். பல வங்கிகள், பல தனியார் நிறுவனங்களுக்குப் போக வேண்டிய பில்கள். பணம் கட்டாவிட்டால், இணைப்பை மறு நிமிடமே துண்டித்துவிடும் டெலிபோன் நிர்வாகம், பில்கள் ஒழுங்காகப் போய்ச் சேர வேண்டும் என்று ஏன் நினைத்துப் பார்க்கவில்லை என்று கேட்கிறார் அந்தப் பத்திரிகையாளர்.

● 'ஹிந்துஸ்தான் டைம்ஸ்' தேர்ந்தெடுத்த 1996ன் சிறந்த பத்துப் பேர் பட்டியல் இது : 1. எம். எஸ். சுப்புலட்சுமி, 2. அன்னா ஹசாரே, 3. லியாண்டர் பெயஸ், 4,. ஸ்பெயினில் நடந்த செஸ் பந்தயத்தில் வென்ற பத்து வயதுப் பையன் ஹரிகிருஷ்ணா, 5. பளுதூக்கும் மல்லேசுவரி, 6. சுவாமி அக்னிவேஷ், 7. சுந்தர்லால் பகுகுணா, 8. நீதிபதி குல்தீப் சிங், 9. ரஜினிகாந்த், 10. விசுவநாதன் ஆனந்த்.


— நியூஸ்வாலா



''உங்க புதிய படத்தோட நல்ல பாடல்கள் மூன்றை வரிசைப்படுத்தி எழுதறவங்களுக்குப் பரிசுன்னு விளம்பரம் பண்ணியும் யாரும் பரிசு வாங்க முடியலையே ஏன்?''

''எப்படி முடியும்? நாங்கதான் எங்க படத்தில நல்ல பாட்டே வைக்கலையே!...''

— ஔவை ஏ.எஸ். யோகானந்தம்




"தலைவரை ஜெயில்லே சந்திச்சு பிஸ்கட் கொடுத்தது தப்பாப் போச்சு!"

"என்ன ஆச்சு?"


"பழைய ஞாபகத்துல, இந்த பிஸ்கட் வேண்டாம்; தங்க பிஸ்கட் கொடுங்கறாரு!"


— எஸ். முத்துச்செல்வன்



பெல்ஜியம் நாட்டில் ஆண்டர்கம் என்னுமிடத்தில் உள்ள செயின்ட் ஆன் மாதா கோவில் என்ற சர்ச் கடந்த 800 ஆண்டுகளாக வருடத்துக்கு ஒருநாள் புனித ஆன் அன்னையின் பிறந்தநாளன்று மட்டுமே பிரார்த்தனைக்காகத் திறக்கப்படுகிறது.

தகவல்: நெல்லை வி. சிவா





— இந்தியன் ஃபிரீச்சாஸ் லிண்டி கேட்

ஆஹ்ஹாஹ்ஹா...





பாதன் அச்சகத்தில் அச்சிட்டவர் : வி. முரளி, பாதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர் : கி. ராஜேந்திரன்.
ஆசிரியர் : சீதா ரவி.
முகவரி : 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097. தொலைபேசி : ஆசிரியர் குழு அலுவலகம் . 2345624; சர்குலேஷன் மானேஜர் : 2345623; சந்தா, விளம்பரம் : 2345622; மானேஜிங் டைரக்டர் : 2345621.
ஆண்டுச் சந்தா - உள்நாடு : ரூ. 156/-; வெளிநாடு - விமானத் தபால் ரூ. 1050/-.
ஆறு மாதச் சந்தா - உள்நாடு : ரூ. 78/-; வெளிநாடு - விமானத் தபால் : ரூ. 525/-.

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No. TN / MS (S) M4392 * Licensed to post without prepayment under PMG's Licence No. TN / MS/ (S) 161 * Registered as a Newspaper in Srilanka